Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

மே. 04 - 10, 2006

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 660

# இராணுவத் தலைமையகத்துக்குள் புலிகள் வகுத்த தற்கொலைத் தந்திரோபாயங்கள்!









## மழை: போவோம் - இரசிப்போம்

## இராணி லிவியாவின் அந்தரங்கங்கள்!

## பிருத்விராஜ் மீது அஜீத் புகார்!

சினிமா ஸ்பெஷல்



## தாக்குதல் வியூகங்கள் எப்படித் தயாராகின்றன?



## ஆன்மீகம்

### ஆணவம்

சைவ சித்தாந்தத்திலே மூவினைகள் என்று கூறப்படும் ஆணவம், கன்மம், மாயை என்பவற்றிலே ஆணவமே மிகவும் கொடியதாகக் கருதப்படுகிறது. "நான்" "எனது" என்ற அகங்காரமே மனிதனின் பல்வேறு தீய செயல்களுக்குக் காரண கர்த்தாவாகிறது. புராணங்களிலும் இதிகாசங்களிலும் கர்வத்தினால் அழிந்த பலரை நாம் அறிந்துள்ளோம். இன்று கூட மனிதன் பிறருக்குத் தீமைகளைச் செய்வதற்கும் பிறரை இம்சிப்பதற்கும், ஆக்கங்களை அழிப்பதற்கும் காரணமான புரிந்துணர்வற்ற தன்மை, விட்டுக் கொடுக்காமை, பொறாமை, கோபம், காழ்ப்புணர்வு போன்றவை இந்த ஆணவத்தின் காரணமாகவே ஏற்படுகிறது. இத்தகைய குணம் படைத்தவர்கள் தர்மத்தினால் அழிக்கப்படுவார்கள் என்பதே உண்மையாகும். எனவே சித்தாந்தங்களிலே மலங்கள் என்று கூறப்படும் இத்தகைய குணங்கங்களை விடுத்து மனிதன் பிறரையும் தன்போல நேசித்து பிற உயிர்க்கு துன்பமிழைக்காது பிறர் மனதினை நோகடிக்காது பண்புடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

எஸ். சுரேஸ், வவுனியா.



### இறை வார்த்தைகளை வளரச் செய்வோம்!

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." (யோ. 12:24)

பார்த்தீர்களா, சகோதரர்களே! ஆண்டவர் கூறுவதை? நாம் சிந்தித்துப் பார்த்தால் இதன் விளக்கத்தை உணரலாம்.

ஆண்டவர் கூறுவது என்ன? "என்னுடைய இறை வார்த்தையை உங்கள் இதயத்தில் மட்டுமல்ல, அனைவரின் இதயத்திலும் நல்ல முறையில் விதையுங்கள் (போதியுங்கள்). குருடானவர் கண்கள் திறக்கப்படும். காது கேளாதவர்கள் கேட்கப்படுவர். ஊமையானவர்கள் பேசப்படுவர்."

மண்ணுலகில் மட்டுமல்ல, விண்ணுலகிலும் இறைவனின் வார்த்தைகள் என்றும் அழியா மலர்ச் சோலையாகத் திகழ்வதைக் காண்பீர்கள். அது மட்டுமல்ல, இறைவனின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவர்கள், இம் மலர்ச் சோலையில் மிக்க மகிழ்வுற்றிருப்பதையும் காணக்கூடியதாகவிருக்கும்.

நாமும் அங்கு செல்ல இன்றே இறைவனின் வார்த்தைகளை எம் இதயங்களில் வளர்ச்சி பெறச் செய்வோம்.

-ஜோசப் அருள்சாமி, இராஜவெல்ல.

### "வஸிய்யத்" (மரண சாசனம்)

ஒருவர் மரணித்துவிட்டால் அவருடைய சொத்துக்களைப் பங்கிடுவதில் அவரது உறவினர்கள் சண்டையிடுவதை நாம் காண்கின்றோம். இவற்றுக்கு இஸ்லாம் கூறும் வழிமுறை என்ன?

மரணமடையும் முன் தனது சொத்துக்களை இன்னின்னாருக்கு வழங்க வேண்டும் என்று அவர் கூறிவிட வேண்டும். இதற்குப் பெயர்தான் "வஸிய்யத்" (மரண சாசனம்).

ஆனால் இவை வெறும் வாய்மொழி அறிவிப்பாக இல்லாமல் எழுத்து மூலம் பதிவு செய்யப்படுவது மேலாகும். தன்னிடமுள்ள ஏதேனும் ஒரு பொருளை மரண சாசனத்தின் மூலம் எவருக்கேனும் அவர் வழங்க விரும்பினால் அதை காலதாமதமின்றி எழுதி தன்னிடம் வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு வினாடி கூட இதில் காலதாமதம் நல்லதன்று. ஏனெனில் அவர் எப்போது மரணிப்பார் என்பது அவருக்குத் தெரியாது. அவர் மரண சாசனம் எழுதி வைத்துவிட்டால் பிறகு அவரது உயிர் எப்போது பிரிந்தாலும் பிரச்சினை இல்லை. உயிருடன் இருப்பவர்கள் உயிர் பிரிந்தவரின் உறுதி மொழியை நிறைவேற்றி வைப்பார்கள்.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.657



### எங்கள் வாழ்க்கை

பொண்ணாப் பிறந்திருந்தால்
பொறுக்கிகளின் தொல்லை
எங்களை விரட்டியிருக்கும்
ஆளாப் பிறந்ததால்
ஆலமரம் வீடு
ஆகாயம் கூரை என்று
போகிறது எங்கள்
வாழ்க்கை.

-து.சிவரூபன், செட்டியார்தெரு.

### ஓடிவிட்டோம்

பயிற்சிக்குப் பிடிக்கும்போது
பறித்துக்கொண்டு ஓடிவந்தோம்
பாதுகாக்கும் உறுதி தந்த
பாவிகள் உதவவில்லை
விளம்பரம் தேடிவிட்டு
வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்
உயிரைக் காப்பாற்ற
ஊரை விட்டு ஓடி
வந்துவிட்டோம்.

-திருமலை தாமரைமகன்.

பரிசுக்குரிய கவிதை

### வழி காமிங்க

கூலி வேலை
இருந்தா கூப்பிடுங்க சாமி
கல்வி கற்றுத்தருவோரே
காடைத்தனம் செய்யிறாரு
கல்வி வேணா முங்க
கஞ்சிக்கு வழி காமிங்க
கடைசி வரைக்கும்
நன்றியோடை இருப்போமுங்க..

-செல்லத்துரை ரமேஸ்குமார், கண்டி.

### இன்னும் இல்லை

தேர்தல் முடிவும்
வந்து விட்டது.
ஊரடங்கும்
வந்து விட்டது.
ஆனால்
பொதுத் தேர்தலின் பின்
சேவை செய்வேன்
என்று கூறிய
எம்.பி.தான்
இன்னும் வரவில்லை.

-அ.ந.அப்துல் ரஹ்மான், பட்டியடிப்பிட்டி.

### எத்தனை நாட்களுக்கு...?

சந்தோஷமாய்
சிரிக்கின்றீர்கள்
ஆனால் யுத்தம் நிலவும்
நாட்டில்
உங்கள் சிரிப்பு இன்னும்
எத்தனை நாட்களுக்கு...?
இப்போதே நன்றாக
சிரித்துவிடுங்கள்
யுத்தத்தால் பிறகு
சிரிக்கவே
முடியாது போய்விடுமே!

-மர்ஸியா நாபிர், பேருவளை.

### தவிப்பு

இன்று
தப்பிவிட்டோம்
போர்ப் பயிற்சிக்குப்
பிள்ளை பிடிப்போர்
கண்ணில் படாமல்
நாளை?

-அ.சந்தியாகோ, கண்டி.

### பயனில்லை

பள்ளிக்குச் செல்லாமல்
பாடங்கள் கல்லாமல்
அதிஷ்டம் இல்லையென
அலறுவதில் பயனில்லை.

-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.660



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 10.05.2006.

கவிதைப் போட்டி இல.660
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772,
கொழும்பு.




### நாட்டின் நிலை

அண்ணா...
நாட்டுப் பிரச்சினை
என்றாங்களே என்ன?
தம்பி...!
நீ...மேலிருக்கிறாய்
நான் கீழிருக்கின்றேன்
இதுதான் அங்கேயும்
நடக்குது.

-அஜ்ஹாத்.எம்.ஜே. சீனக்குடா.

### வெற்றி

இழக்கப்பட்டதும்
தொலைக்கப்பட்டதும்
கிடைக்கும் போது
வரும்
களிப்புக்கு
எல்லையில்லை
ஆனந்தம்
அது காட்டும் நிஜம்.

ஏ.ஆர்.எம்.நதார், ஜின்னாநகர்.

### சிந்தனை

சிந்திக்கிறோம்
சிறுவர்களின்
சீர்திருத்தம்
பற்றி மட்டுமல்ல
நம் நாட்டுத்
தலைவர்களின்
ஒன்றுபடுதல்
பற்றியும்தான்.

-ஏ.ஏ.நிதா, நுரைச்சோலை.

### அறுபதிலும் ஆனந்தம்

அளவான
ஆசை!
அன்பான
உள்ளம்
அனைவரையும் மதிக்கும்
குணம்!
அமைந்துவிட்டால்,
ஆறிலும் ஆனந்தம்!
அறுபதிலும் ஆனந்தம்!

-நா.ஜெயபாலன், பிபிலை.

### பலி!

பரவி வரும்
பாலியல் துஷ்பிரயோகம்
என்னும் கொடிய
நோயின் தாக்கமறியாத...
பொறுப்பற்ற பெற்றோரின்
அசமந்தப் போக்கினால்
பாவம்!
இந்தப் பிஞ்சுகளும்
நாளை பலியாகலாம்!

-கமால்தீன் அல் ஆஸாத், ஏறாவூர் - 03.

## உங்கள் பக்கம்

### சுகாதார அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

**செங்கலடி** கிராமிய வைத்தியசாலையில் இருக்கும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் மகப்பேற்றிற்கு வரும் தாய்மாரிடம் அவர்களுக்குக் குழந்தை பிறந்து வீடு செல்லும் போது 200 ரூபா கட்டணம் என்றும், மின் விளக்குக் கட்டணம் எனவும் மற்றும் சொக்லேற்றுக்கள், கேக் வகைகள் எனவும் கேட்டு வாங்குகின்றனர். அது மட்டுமன்றி ஆண் சிற்றூழியர்கள் மருந்து கட்ட வருவோர்களிடம் தலா 50 ரூபா வாங்குகின்றனர். பெண் சிற்றூழியர்கள் கடமை நேரங்களில் தையல் மற்றும் பின்னல் வேலைகளில் ஈடுபடுகின்றனர். ஆண் சிற்றூழியர்கள் கடமை நேரங்களில் வெளியில் உலவுகின்றனர்.

நோயாளிகள் தங்களுடைய வருத்தத்தை ஆண், பெண் சிற்றூழியர்களிடம் போய் சொன்னால் அவர்களிடம் எரிந்து விழுகின்றனர். இதனால் நோயாளிகளின் மனம் பாதிக்கப்படுவதோடு நோய்களும் அதிகரிக்கின்றன. இங்குள்ள வெளி நோயாளர் பகுதியில் பிற்பகல் 3.30 மணிக்குப் பிறகு மருந்து கொடுப்பது இல்லை. இங்குள்ள பல் வைத்தியர் காலை 9.30 மணிக்கு கடமைக்கு வந்து பகல் 12.00 மணிக்கு வீடு செல்கின்றார். இதற்கு இங்குள்ள உயர் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. இவ்விடயத்தில் சுகாதார அமைச்சு, கூடுதல் கவனமெடுத்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

-அ.இலிங்கநாதன், செங்கலடி.

## வாசகர் சாலை

வாராவாரம் வரும் வண்ண முரசே
உனக்கு என்னுடைய வந்தனம்.
உன்னை எனக்கு நீண்ட நாளாய்
தெரியும். என்னை உனக்கு இப்போது
தான் அறிமுகம் செய்து கொள்கிறேன்
உனது ஒவ்வொரு ஆக்கங்களையும்
படித்து வருகிறேன்.
சினம் இல்லாது சீறிவரும் சிறுகதை
சிரிப்புடன் சிந்திக்க சிந்தியா பதில்கள்
பிஞ்சுகளின் வர்ணப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.
வளமூட்டும் வாசகர் சாலை
இன்பம் தரும் இலக்கிய நயம்
தேன் தெவிட்டும் தேன் கிண்ணம்
இலை மறை காயாய் ஒளிந்திருக்கும்
கலைஞர்களை முன் கொண்டு வரும் முரசே
தரமான ஆக்கங்களைத் தொடர்ந்தும் பிரசுரிப்பாய்
என்ற
நம்பிக்கையில் நீ மேலும் வளர்ச்சி பெற
என் வாழ்த்துக்கள்.

அ.ராஜி, குடத்தனை.

வர்ண முரசே! வணக்கம்.

தினமுரசின் 532வது இதழில் ஆசிரியர் மடலில் காக்காய் பிடிக்கும் அரசுக்கு ஒரு சாட்டை. அதே போன்று காதில பூ கந்தசாமியின் கற்பனை கூட்டணிக்கு சூடு, சுரணையை உண்டு பண்ணுமா? ஆஞ்சநேயாவை அறிய ஆவல்கொண்டேன். சினிமாப் பகுதியில் தெளிவு தந்தாய். உனக்கு எனது இதய நன்றியையும் வாசக நெஞ்சங்களுக்கு எனது அன்பினையும் தெரிவித்து வாழ்த்துகிறேன்.

மு.இ.ராஜன், கிண்ணியா - 03.

### திரும்பிப் பார்க்க!

| | |
|---|---|
| ஓர் தகவல்!... | தினம் |
| ஓர் புதுமை... | உனைக்காண!... |
| ஓர் புரட்சி... | திசையெல்லாம் |
| ஓர் திகைப்பு... | ஓடுகின்றேன்! |
| ஓர் படைப்பு... | தினமுரசே நீ!... |
| ஓர் நினைவு... | தினமும் வந்து விடு... |
| தினம் உன் | திருப்தியை தந்து |
| நினைவால்... | விடு!... |
| திராணியற்று | -எஸ்.ஷாஜஹான், |
| நானோ!... | தாராபுரம். |

மதிப்புக்குரிய ஆசிரியர் அவர்களுக்கு!

மார்ச் 23-29 -2006இல் வெளியான தினமுரசு படித்தேன். மிகவும் சந்தோஷப்பட்டேன். ஏனெனில் "யுத்தமும் சமாதானமும் - இலங்கை ஊடகங்களும்" என்ற கட்டுரை என்னை மிகவும் பெருமிதமடைய வைத்தது. இக்கட்டுரையை யாராவது எழுதமாட்டார்களா என்றே இவ்வளவு நாளும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் அதை தினமுரசு பூர்த்தி செய்தது.

உண்மையில் இலங்கையில் உள்ள ஊடகங்கள் அனைத்துமே பக்க சார்பானவை என்பதில் ஐயமில்லை. தினமுரசு போன்ற சில ஊடகங்களைத் தவிர.

உண்மையைச் சொல்கிறேன், இலங்கையின் எந்தவொரு ஊடகமாக இருக்கட்டும், அனைத்திலும் என்னைக் கவர்ந்த ஓர் ஊடகமென்றால் அது தினமுரசுதான் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

இன்னும் எதிர்காலங்களில் எவருக்கும் அஞ்சாமல் உண்மையுடனும், நேர்மையுடனும் தினமுரசு வாழும் என்ற நம்பிக்கையோடு, தினமுரசின் சேவை மென்மேலும் வளர்ச்சியடைய என் மனமார்ந்த வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

-எம்.ஐ.அஸீஸ், வாழைச்சேனை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## ஊடகங்களுக்கு சுயதணிக்கை அவசியம்

"இலங்கை போன்ற இனரீதியான ஆயுத மோதல்கள் இடம்பெறும் நாட்டில் ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இனவன்செயல்களைத் தூண்டி விடும் விதத்திலோ அல்லது மக்களைத் தவறாக வழிநடத்தும் விதத்திலோ அவை செய்திகளை வெளியிடக் கூடாது. மக்களின் மலினப்படுத்தப்பட்ட உணர்வுகளைக் கிளறிவிடாமல் சுயதணிக்கையை ஊடகங்கள் கையாள வேண்டும்'' என்றார் பிரிட்டிஷ் பத்திரிகையாளரான வோல்ரர் ஜேம்ஸ் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சுதந்திர தினத்தில் கலந்து கொண்டு பேசும் போதே இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ் மக்களைப் பாதுகாக்கக் கோரும் சுவரொட்டிகள்

புலிகள் மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று சிங்கள பௌத்த கட்சியான ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்த போதும் மக்களை அமைதியாக இருக்குமாறு வேண்டிக்கொண்டமை பாராட்டுக்குரியது. வடக்கு, கிழக்கில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் தாக்குதல்கள் தெற்கில் கோபாவேசத்தை கிளப்பி விட்டிருந்தபோதும் "தமிழ் மக்களைப் பாதுகாக்குமாறு'' கோரும் சுவரொட்டிகளை ஜே.வி.பி. ஒட்டியுள்ளமை பாராட்டுக்குரியது. மொத்தத்தில் இனவெறியைத் தடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை என்கிறார் கொழும்பு மகளிர் அமைப்பைச் சேர்ந்த குமுதினி.

# அப்பாவி உயிர்களை அழிக்க வேண்டாம்!

## -திருமலையிலிருந்து ஓர் உருக்கமான வேண்டுகோள்

"திருகோணமலை, சண்முகா வித்தியாலய வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் முச்சக்கர வண்டியில் வந்த நான்கு அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகியிருக்கிறார்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும், முச்சக்கர வண்டிச் சாரதியுமே இந்த நால்வருமாவர். புலிகள் நடத்திய இத் தாக்குதலில் மேலும் பல பொதுமக்களும் காயமுற்றுள்ளனர். இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை நிறுத்தி, அப்பாவி மக்களை நிம்மதியாக வாழ அனுமதிக்க வேண்டும்'' என்று திருகோணமலை ஆஸ்பத்திரியில் பணிபுரியும் டாக்டர்கள் கூறினர்.

திருகோணமலை மரக்கறிச் சந்தையில் புலிகள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலினால் நான்கு சிங்கள வியாபாரிகள் கொல்லப்பட்டனர். அதற்குப் பதிலடியாகச் சிங்களக் காடையர்கள் பதின்மூன்று அப்பாவித் தமிழ் மக்களை சுட்டும் வெட்டியும் கொன்றனர். வடக்கிலும் கிழக்கிலும் கடந்த மாதம் நடைபெற்ற வன்செயல்களில் சுமார் 150 பேர் பலியெடுக்கப்பட்டுள்ளனரென்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. திருகோணமலையை மையமாக வைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் பெரும் இனக்கலவரத்தையே தோற்றுவிக்கக் கூடிய ஆபத்து நிலவுகிறது. எனவே புலிகள் இயக்கம் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இனக் கலவரமொன்று மூண்டால், அது காட்டுத் தீயைப் போலப் பற்றி எரியும் என்பதைப் புரிந்து



திருமலையில் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களும் அவர்களின் உறவினர்கள் கதறி அழும் காட்சியும்

கொண்ட அரசாங்கம், அதனைத் தடுக்கும் வகையில் மிக அவதானமாக நடந்து கொள்கிறது. புலிகள் இனக் கலவரத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். மக்கள் பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று அரசாங்கம் மக்களை எச்சரித்திருக்கிறது. எனவே இனியாவது அரசின் கோரிக்கையை ஏற்றுப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள்.

இதற்கிடையில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடந்த இரண்டாம் திகதி விடுத்த அறிக்கையில், அப்பாவிக் குடிமக்களுக்கெதிராக நேரடியாகவோ மறைமுகமாகவோ நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்துள்ளது. இலங்கைப் படைகளின் மீதோ அல்லது பொலிஸார் மீதோ தீர்ப்பு வழங்குவது தமது வேலையல்ல வென்றும் இவ்வாறான மக்கள் மீதான தாக்குதல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசு உறுதியாகவுள்ளதென்று தாம் நம்புவதாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

## அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுக்குத் தயார்

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான இரண்டாவது சுற்று ஜெனீவா பேச்சுவார்த்தை இம் மாத பிற்பகுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறலாமென்று இலங்கை அரசாங்க சமாதான செயலகத்தின் பேச்சாளரொருவர் கூறினார். கிழக்கிலிருந்து புலி இயக்கத் தலைவர்கள் வன்னிக்குச் சென்று தமது தலைமையோடு கலந்துரையாடுவதற்கு அரசாங்கம் கடல் விமானங்களை வழங்கச் சம்மதித்துள்ளது. இந்த நிலையில் தமது கிழக்குத் தலைவர்கள் தமது படகுகள் மூலம் வன்னிக்கு வந்திருப்பதாகப் புலிகள் இயக்கம் கூறுகிறது. எது எப்படியென்றாலும் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். மனித உயிர் அழிவுகள் நிறுத்தப்பட வேண்டுமென்பதே அரசின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

## யாழ். சுப்பிரமணியம் பூங்கா திறக்கப்பட்டது

யாழ். மாநகர சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த சுப்பிரமணியம் பூங்கா பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. போர்க் காலச் சூழலினால் இந்தப் பூங்கா பெரும் அழிவுகளுக்கு உள்ளாகியதையடுத்தே 1991ஆம் ஆண்டு இந்தப் பூங்கா மூடப்பட்டது. ஐ.நா. அவசர சிறுவர் நிதியம் 'யுனிசெப்' மற்றும் நிக்கோட் திட்டத்தின் நிதியுதவியுடன் இப் பூங்கா மீளநிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 200க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளியேற்றம்

கனடாவில் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றுள்ள கன்சர்வேட்டிக் கட்சியின் புதிய அரசாங்கம், கனடாவிலுள்ள புலிகள் முகவரமைப்புகளின் அலுவலகங்களில் நடத்திவரும் திடீர்த் தேடுதல்களையடுத்துக் கனடாவிலிருந்த பல தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புத் தேடி வெளியேறியுள்ளனர். இவர்களில் பலர் புலிகளின் முகவரமைப்புகளுக்காக அங்கு மிரட்டிப் பணம் பெறுவதிலும் நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டவர்களெனக் கனடியப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். இதேவேளை கனடாவில் வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இலங்கையின் வடக்கு, கிழக்கில் வன்செயல் நடவடிக்கைகள் அதிகரித்ததையடுத்து, மேற்கு நாடுகளிலிருந்து சந்தேகத்துக்கிடமான இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனரென்று கட்டுநாயக்கா விமான நிலையப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜெனீவாவில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்ட திகதிகளுக்கு முன்னதாகவே புலிகள் இயக்கம் கிளைமோர் குண்டுத் தாக்குதல்களையும் வன்செயல் நடவடிக்கைகளையும் அதிகரித்தமைக்கு ஜெர்மனி, பிரிட்டிஷ், பிரான்ஸ், அமெரிக்கா உட்படப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் சபை, இணைத்தலைமை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் உட்படப் பல சர்வதேச அமைப்புகளும் உலக நாடுகளும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தன. மேற்கு நாடுகளில் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களென்று சந்தேகிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். புலிகள் இயக்கம் வெளிநாடுகளில் சேகரிக்கும் நிதியை, ஆயுதங்கள் கொள்வனவு செய்யப் பயன்படுத்துவதாக அண்மைக்காலமாகக் குற்றச்சாட்டுகள் அதிகரித்து வந்ததையடுத்து இத் திடீர் நடவடிக்கைகளில் மேற்கு நாடுகள் இறங்கியுள்ளன.

## கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுமா?

"கிழக்கு மாகாணத்தில் நிலைமைகள் சீரடைந்து, அங்கு அமைதி நிலை பெறத் தவறினால் எதிர்வரும் இருபதாம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திப்போட நேரிடும். இது தொடர்பாக பந்தோபஸ்துப் படையினரின் அறிக்கையைப் பெற்றே அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிப்போம்'' என்று தேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். நீதிமன்றத் தீர்ப்புகளின் காரணமாகவும் வேறு பல காரணங்களுக்காகவும் ஒத்தி வைக்கப்பட்ட 22 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இவற்றில் நான்கு மாநகர சபைகள், நான்கு நகர சபைகள், 14 பிரதேச சபைகள் உள்ளடங்கும்.

# சம்பூர் பயிற்சி முகாம் மீது தாக்குதல்; முப்பது பேர் ஸ்தலத்திலேயே பலி

கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தளபதியைக் குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலையடுத்து அன்று மாலையே திருகோணமலையிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூரிலுள்ள புலி இலக்குகள் மீது படையினர் குறிவைத்துத் தாக்கினர். இத் தாக்குதலின்போது, சம்பூரிலுள்ள புலிகளின் பயிற்சி முகாம் மீது குண்டுகள் வீழ்ந்ததால், முப்பது புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனரென்று இராணுவத் தகவல்கள் கூறின. பெருந்தொகை ஆயுதங்கள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. ஒரு லொறியில் சேதமடைந்த ஆயுதங்கள் ஏற்றப்பட்டுச் சம்பூரிலுள்ள பாடசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. முப்பது புலி உறுப்பினர்களின் சடலங்கள் கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை சம்பூரில் அடக்கம் செய்யப்பட்டன. செவ்வாய் மாலையும் புதன் காலையும் நடத்தப்பட்ட இத் தாக்குதலின்போது சில குண்டுகள் இலக்குத் தவறி மூதூரில் குடிமக்கள் வாழும் பகுதியில் வீழ்ந்ததாகவும் அதில் மக்கள் சிலர் பலியானார்களென்றும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டு, இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் ஜனாதிபதி தலைமையில் தேசிய பாதுகாப்புச் சபை இராணுவத் தலைமையகத்தில் கூடி நாட்டு நிலைமைகளை ஆராய்ந்தது. நாட்டில் இனக் கலவரத்தை ஏற்படுத்த புலிகள் எடுக்கும் முயற்சிகளை முறியடிப்பதென்றும் முடிவெடுக்கப்பட்டது. தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம் அரசாங்கத்தை அடிபணியச் செய்ய முடியாதென்பதைக் காட்டுவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் புலி நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் பலர் வற்புறுத்தினர். இதற்கிடையில் சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் தொகை நாற்பதாயிரம் என்று புலிகள் தெரிவித்திருந்தனர். சம்பூரில் 16,000 மக்களே உள்ளனரென்று தெரிவித்த அரசாங்கம், சில ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனரென்று கூறியது. சுமார் ஏழாயிரம் பேர் இடம்பெயர்ந்திருக்கலாமென்று அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் என்ற அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

## தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராவிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கல்வியமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை சிங்களப் பாடசாலைகளில் தமிழைக் கற்பிப்பதற்கும், தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தைக் கற்பிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## குண்டுதாரியின் இரு சகாக்களும் தப்பிச் சென்றுவிட்டனரா?

இராணுவத் தலைமையகத்துக்குள் தற்கொலைத் தாக்குதல் நடத்திய மனிதக் குண்டுதாரியான பெண்ணோடு, இராணுவத் தலைமையகத்துக்கு வந்தவர்களென்று கூறப்படும் இரண்டு ஆண் சகாக்களும் வன்னிக்குத் தப்பிச் சென்றிருக்கலாமென நம்பப்படுகிறது. ஒருவர் தற்கொலைக் குண்டுதாரியின் கணவரென்றும் மற்றவர் சகோதரரென்றும் கூறப்பட்ட போதிலும் இருவருமே குண்டு வெடிப்பின் பின்னர் அவர்கள் தங்கியிருந்த டாம் வீதி, லொட்ஜுக்குத் திரும்பிச் செல்லவில்லை. தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து வடக்கிலும் கிழக்கிலுமுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் வீதிகள் உடனடியாகவே மூடப்பட்டன. சம்பவதினமிரவும் அதன் தொடர்ச்சியாகவும் கொழும்பில் நடத்தப்பட்ட தேடுதல்களில் 300இற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டாலும் 35 பேர் மட்டுமே இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கைதானவர்களில் இரண்டு முஸ்லிம்களும் மூன்று சிங்களவர்களும் பதினொரு பெண்களும் அடங்குவரென்று கொழும்பு வலயப் பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சரத் லூகொட தெரிவித்தார். "தேடுதல் நடத்துவதையோ அதன்மூலம் அப்பாவி மக்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்குத் தொந்தரவு கொடுப்பதையோ விரும்பவில்லை. ஆனால் மிக மோசமான தாக்குதல்கள் நடத்தப்படும் பட்சத்தில் அந்த நடவடிக்கைகள் தொடராமல் முறியடிப்பதற்கும் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கும் தேடுதல் நடத்த வேண்டியிருக்கிறது'' என்கிறார் லூகொட.

# "அதிதீவிரவாதம் இறுதியில் சரணாகதிக்கு வழிவகுக்கும்''

"அதிதீவிரவாதச் செயற்பாடுகளும் கோட்பாடுகளும் எப்போதுமே இறுதியில் சரணாகதி நிலைக்குத் தள்ளிவிடும். இதனைத் தான் பாலஸ்தீன ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றிருக்கும் "ஹமாஸ்'' அமைப்பின் நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன'' என்கிறார் அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன். பாலஸ்தீன மண்ணில்தான் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதென்பது உண்மை. ஆனால் கால ஓட்டத்தில் இஸ்ரேலைப் பாலஸ்தீனரும், பாலஸ்தீன அரசை இஸ்ரேலும் அங்கீகரித்து விட்டன. இந்த நிலையில் மீண்டும் போர் முரசம் முழங்கியதால் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகள் பாலஸ்தீனத்துக்கு மறுக்கப்பட்டிருந்தன. இதனால் சம்பளத்தைக் கோரி பாலஸ்தீனப் பொலிஸார் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். ஓர் இலட்சத்து ஐம்பதாயிரம் அரசாங்க ஊழியர்கள் சம்பளத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். ஈரான் போன்ற நாடுகளின் உதவிகளில் எவ்வளவு காலத்துக்கு பாலஸ்தீன அரசு தாக்குப்பிடிக்குமோ என்றும் அவர் சொன்னார்.

"இஸ்ரேலிய - பாலஸ்தீனத் தலைவர்களுக்கிடையில் 'காம்ப் டேவிட்' சமாதான ஒப்பந்தம் கூடச் செய்யப்பட்டு இரு தசாப்தங்களுக்கு மேல் கடந்துவிட்டன. சம்பந்தப்பட்ட தலைவர்களுக்கு சமாதான நோபல் பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆனாலும் பிரச்சினை தீரவில்லை. இஸ்ரேல் மூன்று யுத்தங்களை நடத்தி தனது அதிகார எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டதும், இஸ்ரேல் தொடர்பாக ஐ.நா. மேற்கொண்ட தீர்மானங்களை அந்த நாடு மதிக்கத் தவறியதும் கூட உண்மை. ஆனால், இன்று பாலஸ்தீனப் பகுதிகளிலுள்ள இஸ்ரேலியக் குடியேற்றத் திட்டங்களை அகற்றுமளவுக்கு இஸ்ரேல் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்துள்ளது. இலங்கையின் சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடித் தீர்வு பெறுவதே வழியென நினைத்த தமிழ் அமைப்புகள், 1987ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தோடு ஜனநாயக வழிக்குத் திரும்பி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றுள்ளதை நாம் நல்ல உதாரணமாகக் கொள்ள முடியும். இலங்கை அரசு விட்டுக்கொடுத்து சமாதானத் தீர்வுக்கு வரும்போது, பேச்சுவார்த்தை மேசையே சரியான யுத்த களமாகும். 'ஹமாஸ்' கற்றுக்கொள்ள வேண்டிய பாடமிது'' என்றும் சொன்னார் மதிவண்ணன். பாலஸ்தீனத்திலுள்ள ஒன்றரை இலட்சம் அரசாங்க ஊழியர்களுக்கு, உலக வங்கியின் நிதியுதவியோடு சம்பளம் வழங்குவதற்கான முன்முயற்சிகளில் ஐரோப்பிய ஒன்றியம் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

யாழ்ப்பாணத்தில் நிலவும் பெற்றோல் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக மேலும் பல பௌஸர்களில் பெற்றோலும் டீசலும் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன உயரதிகாரியொருவர் தெரிவித்தார். அதேவேளை யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சம் வரையான நான்கு சில்லு வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியன இருப்பதாகவும் மாதாந்தம் இவற்றுக்கென ஐந்து லட்சம் லீற்றர் எரிபொருட்கள் தேவைப்படுவதாகவும் யாழ். செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார். கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து யாழ்ப்பாணத்துக்கான ஏ-9 பாதை திடீரென மூடப்பட்டதால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்லப்படவிருந்த மூன்று பௌசர் டீசல், ஓமந்தையில் புலிகளின் வணிக பொருள் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பின்னர் பாதை திறந்ததும் அந்தப் பௌஸர்கள் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்பட்டன. இருந்தபோதிலும் டீசல் பற்றாக்குறையைக் காரணம் காட்டி யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்களுக்கு சுழற்சி முறையில் மின்சாரம் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருட்கள் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டியது அந்தந்த மாவட்டங்களுக்குப் பொறுப்பான உயரதிகாரிகளின் கடமை என்கிறார் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியொருவர்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## ஊடகப் பயங்கரவாதம் எதிர்காலம் மீதான நம்பிக்கையை தகர்க்கும்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

**உழைப்பாளர்** தினத்தை தமது உரிமைகளுக்கான தினமாக உழைப்பாளர்கள் நினைகூருகின்றபோதும், உழைப்பாளர்களை விடவும் அரசியல்வாதிகளே மேதினத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். எட்டு மணித்தியால வேலை என்பதற்காகப் போராடி 1886ஆம் ஆண்டு சிக்காக்கோ நகரில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து அதை நினைவுநாளாகக் கருதாமல் உரிமைகளுக்காகப் போராடும் நாளாக கருதிச் செயலாற்றுங்கள் தோழர்களே! எட்டு மணித்தியால வேலை என்பதற்காக உயிர்த் தியாகம் செய்ய வேண்டியிருந்ததென்றால் நீங்கள் எதிர்கொண்டு வாழும் உரிமை மறுப்புகளைச் சரி செய்வதற்கு எத்தகைய போராட்டம் அவசியமென்பதை ஊகித்துக் கொள்ளுங்கள். ஆகவே மேதினத்தை அரசியல் கட்சிகளின் அலங்காிப்பு நாளாக இனியும் மாற்றிவிடாதீர்கள்.

அதேபோல் மே மூன்றாம் திகதியை உலக ஊடக சுதந்திர தினமாக நினைவு கூர்ந்து வருகிறார்கள். இம்முறை அந்த நிகழ்ச்சிகளும் ஊடகவியலாளர்களின் சந்திப்பும் இலங்கையில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி. 'ஊடக அபிவிருத்தியும், வறுமை ஒழிப்பும்' என்ற கருப்பொருளில் விவாதிக்கப்படுகின்றது. துரதிர்ஷ்டவசம் என்னவென்றால் தற்போது நாட்டில் ஒரு சில ஊடகங்கள் ஊடகப் பயங்கரவாதத்தை சமூகத்தின் மீது திணித்துக் கொண்டிருக்கின்றன. இன்றைய நிலையில் ஒரு ஊடகவியலாளன் தன் பேனா முனையை நியாயத்தின் பக்கம் திருப்பமுடியாத சூழல் நிலவுகிறது. இதற்கு சிகரம் வைத்தாற் போல் கடந்த காலத்தில் சிறந்த சில ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதோடு ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருப்பதும் தொடர்கிறது.

அதிலும் தினமுரசு பத்திரிகையின் மாற்றுக்கருத்துக்களையும், நியாயமான வாதங்களையும் எதிர்கொள்ள முடியாத பயங்கரவாதம் தன் துப்பாக்கிமுனையில் மிரட்டல்களையும், தடைகளையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதுபற்றி பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டி வந்துள்ளபோதும் எந்தவொரு ஊடக அமைப்பும், கண்டுகொள்ளவில்லை. இவ்வாறு ஊடக தர்மத்துக்கும், ஜனநாயகத்துக்கும், மக்களின் எழுத்து, பேச்சு, சுதந்திரத்துக்கும் சாவு மணி அடிக்கப்பட்டுள்ள ஒரு காலகட்டத்தில் உலக ஊடக சுதந்திர தினம் இலங்கையில் நடைபெறுவதும், அதில் சர்வதேச ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டிருப்பதும் எவ்வளவு தூரம் அர்த்தமுள்ளதான நிகழ்வு என்ற கேள்வி தானே எழுகின்றது.

சில சிங்கள ஊடகங்களும் தமிழ் ஊடகங்களும் வன்முறைகளை நியாயப்படுத்திக்கொண்டும், பிணங்களைக் காட்டி உணர்ச்சியூட்டிக் கொண்டும் தொழில் நடத்திக் கொண்டிருக்கின்றனவே தவிர, எதிர்காலத்தின் மீது நம்பிக்கையூட்டும் விதமாகவோ தவறுகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்களாகவோ பணியாற்றவில்லை. மறுபக்கத்தில் ஊடக நிறுவனங்களுக்கும் - ஊடகவியலாளர்களுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இன்னும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. மொத்தத்தில் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்காகவும், மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் ஊடகங்கள் சமகாலத்தில் எத்தகைய பங்களிப்பையும் செய்யவில்லை.

இவ்வாறானதொரு துர்ப்பாக்கியமான நிலையை சர்வதேச சமூகமும், சர்வதேச ஊடகவியலாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும். உள்ளூர் ஊடகங்களும், தமது சமூகம் மீதான பொறுப்புணர்வை உணர்ந்து செயலாற்ற வேண்டியதும் காலத்தின் அவசியமாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## ஊரிலிருந்து....



அண்மைக்காலமாக இடம்பெறுகின்ற அசாதாரணமான சம்பவங்களால பாதிக்கப்படுகிற ஆக்கள் ஒருபுறமிருக்க, தாமே பாதிப்பை தேடிக் கொண்டவைய பற்றி நீங்கள் கேள்விப்பட்டியளோ தெரியாது. மக்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கிறம் எண்டு புலி கூட்பிட்டு குறுங்கால பயிற்சியை பளையில வைச்சு வழங்கினது எல்லாருக்கும் தெரியும். அந்த நேரம் ஆமிக்காரன் கையை கட்டிக் கொண்டு பாத்துக் கொண்டிருந்தான். டயர் எரிக்கிறவை கல் எறிஞ்சாக்கூடி ஆமியின்ட துவக்கு சுடாது. எண்ட நம்பிக்கையில ஆயுதப் பயிற்சியும் சில பேர் எடுத்துப் போட்டினம்.

இப்ப நிலைமை குழம்பேக்க முகமாலைக் குள்ளால முதலில ஓடினது அவையள்தான். பொதுமக்கள் இடம்பெயருகீனம் எண்டு சில பத்திரிகைகள் சொன்னதும் இவையளைத்தான். இப்ப வன்னியில இரண்டும் கெட்டான் நிலையில அந்தரிச்சு நிக்கினமாம். புலிகளைக் கேட்டால் 'ஓம் வந்திட்டீங்கள் வாங்கோ ஆயுதம் தூக்க' எண்டு சொல்லிச்சீனமாம்.

யாரை நோக?

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இராணுவத் தலைமையகத்துக்குள் புலிகள் வகுத்த தற்கொலைத் தந்திரோபாயங்கள்

நரன்

**இடம் :** கொழும்பு இராணுவத் தலைமையகம்.

**நேரம் :** 25.04.06 மதியத்தைத் தாண்டி கடிகார மு[illegible]ற்பகலுக்குள் நுழைந்து முன்னேறிக் கொண்டிருந்தது. சரியாக 1.30 மணி. அனோஜா குகனேசராஜா என்றழைக்கப்படும் அந்தக் கர்ப்பிணிப் பெண் இராணுவத் தலைமையகத்துக்குள் உள்ள இராணுவ மருத்துவமனை முன்பாக நின்று கொண்டிருந்தாள். அவளது கையடக்கத் தொலைபேசி அலறியது. காதில் வைத்து மறுமுனைச் செய்தியைக் கேட்டுக் கொண்டவள் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்.

இலங்கை இராணுவத் தளபதி, லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத் தலைமையகக் கட்டடத்துக்குள் உள்ள தனது அலுவலகத்தில் வேலைகளை முடித்துக்கொண்டு தனது பேஜோ 406 காருக்குள் ஏறி அமர்ந்தபோது நேரம் பிற்பகல் 1.30யைத் தாண்டிக் கொண்டிருந்தது. அவரது வாகனத்தின் இரு பக்கத்திலும் நான்கு மோட்டார் சைக்கிள்களில் அவரது மெய்ப்பாதுகாவலர்கள். காருக்குள் பின்புற வலது பக்க ஆசனத்தில் சரத் பொன்சேகா அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே இராணுவப் பாதுகாப்பு அதிகாரி. முன் ஆசனத்தில் சாரதிக்குப் பக்கத்தில், அதாவது இடதுபுறமாக பாதுகாப்பு அதிகாரி மேஜர் பியால் விக்ரமசிங்கா தனது பாதுகாப்புப் பரிவாரங்களுடன் இராணுவத் தளபதியின் வாகனம் புறப்பட்டபோதே கர்ப்பிணிப் பெண் அனோஜாவின் செல்லிடத் தொலைபேசி அலறியது. அதாவது இராணுவத் தளபதி புறப்பட்டு விட்டாரென்ற செய்தியை அந்தத் தொலைபேசிக்குரிய குரல் கொடுத்திருக்க வேண்டும்.

நூற்றுக்கு மேற்பட்ட மீற்றர்கள் அப்பாலுள்ள மருத்துவமனையை தளபதியின் வாகனம் அண்மித்ததுதான் தாமதம். அனோஜா கார் மீது எகிறிப் பாய முனைந்தார். வாகனத்தின் முன்பக்கத்தில் பாதுகாப்புக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த லான்ஸ் கோப்ரல், அனோஜாவை அப்பால் செல்லுமாறு சத்தமிட்டார். ஆனாலும் அவள் அண்மித்து விட்டதைக் கண்டதும் எட்டி உதைத்தார். அனோஜா கீழே வீழ்ந்த கையோடு குண்டினை வெடிக்க வைத்தாள். ஸ்தலத்திலேயே நான்கு சிப்பாய்கள் பலியானார்கள். இப்போது அந்தத் தொகை பதினொன்றாக அதிகரித்துவிட்டது. மூன்று சத்திரசிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட இராணுவத் தளபதி ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டாரென்று அறிவிக்கப்படுகிறது. ஒரு கட்டத்தில் மரணத்தின் நுழைவாயிலுக்குச் சென்று அவர் மீண்டாரென்றும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடையைச் சேர்ந்தவர் சரத் பொன்சேகா கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஆறாம்திகதி தான் இராணுவத் தளபதியாகப் பதவியேற்றார்.



அவர் தளபதிப் பதவியை ஏற்றதுமே அவருக்குக் குண்டுகள் துளைக்காத பி.எம். டபிள்யூ ரகக் கார் பாதுகாப்புக்கென வழங்கப்பட்டது. ஆனால் அவர் அதனைப் பாவிக்காமல் பேஜோ 406 ரகக் காரையே பயன்படுத்தி வந்தார். அவருக்குக் கொழும்பு - 07 புல்லர்ஸ் வீதியிலுள்ள 'ஜெனரல் ஹவுஸ்' என்றழைக்கப்படும் இராணுவத் தளபதிகளுக்கான வாசஸ்தலம் வழங்கப்பட்டிருந்தது. அவர் அதனைப் பொறுப்பேற்ற போதிலும் அங்கு தங்கவில்லை. தனது குடும்பத்தினர் சகிதம் இராணுவத் தலைமையகத்திலுள்ள தனது விடுதியிலேயே தங்கியிருந்தார்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடும் போக்குடைய ஒருவர். புலிகளுக்கெதிரான பல யுத்தங்களில் வெற்றியீட்டியவர். யுத்தமுனையில் புலிகளை அழிக்க வேண்டுமென்ற கொள்கைப் பிடிப்புடையவரென்றும் அவரது சக அதிகாரிகள் கூறுகின்றனர்.

சரத் பொன்சேகா, 1990ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தைக் கைப்பற்றுவதிலும் 1995-96இல் மேற்கொள்ளப்பட்ட ரிவிரஸ இராணுவ நடவடிக்கையின் போதும் 2000ஆம் ஆண்டு தென்மராட்சித் தாக்குதலின் போதும் அவர் கையாண்ட இராணுவப் பாணி பெரும் விமர்சனத்துக்குள்ளாகியிருந்தது. புலிகள் அவரைப் பரம எதிரியாகவே கருதினர். இராணுவத் தலைமையகத்துக்குள் புகுந்து தளபதி மீது தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டமிருக்கிறார்களென்ற புலனாய்வுத் தகவல், அரச புலனாய்வுப் பிரிவினரால் ஐந்து மாதங்களுக்கு முன்னே அவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல, இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு சில தினங்கள் முன்னதாகவே, புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்புக்குள் நுழைந்திருப்பதாக வெளிவந்த புலனாய்வுத் தகவல்கள் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகா பதவியேற்றதுமே இராணுவத் தலைமையகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கிறாரென்பதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

கொழும்பு இராணுவத் தலைமையகம் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பாதுகாப்பமைச்சு, இராணுவத் தலைமையகக் கட்டடம், கூட்டுப் படைகளின் தலைமையகம், இராணுவ வீரர்களுக்கான ஆஸ்பத்திரி, உயரதிகாரிகளின் தங்கும் விடுதியெனப் பல கட்டடங்களை உள்ளடக்கியது. கொழும்பு, காலிமுகத்திடலுக்கு முன்பாகப் பழைய பாராளுமன்றத்துக்கு (தற்போதைய ஜனாதிபதி செயலகம்) அருகே பேரா ஏரி அசுத்தங்களைச் சுமந்து கொண்டு அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதற்கு அருகே இராணுவத் தலைமையகத்தின் முகப்பு வாசல் அமைந்திருக்கிறது. அதற்கு அண்மையில் காலி வீதியில் ஒரு பஸ்தரிப்பு நிலையம் கூட உண்டு. இந்த இராணுவத் தலைமையகம் அமைந்திருக்கும் அதே பகுதியில் முன்புறத்தில் ஐந்து நட்சத்திர தாஜ் சமுத்திரா ஹோட்டல் அமைந்துள்ளது. அதன் பின்புறமாக இராணுவத் தலைமையகம் நீண்டு செல்கிறது. கொம்பனித்தெரு ரயில் நிலையத்தைத் தாண்டி, எலிபன்ற் ஹவுஸ் அமைந்திருக்கும் பகுதி வழியாக காலி முகத்திடல் திசையை நோக்கி முன்னேறும்போது இராணுவத் தலைமையகத்தின் கொம்பனித்தெரு நுழைவாயில் வருகிறது. இந்த நுழைவாயிலுக்கூடாகத்தான் அனோஜா உள்ளே சென்றிருக்கிறார்.

செவ்வாய்க்கிழமைகளில்தான் இராணுவ ஆஸ்பத்திரியில் கர்ப்பிணிகளைப் பார்வையிடுவதுண்டு. இராணுவத்தில் பணிபுரிபவர்களின் குடும்பத்தவர்களுக்கு இந்த வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. அதே செவ்வாய்க்கிழமைகளில்தான் வாராவாரம் நாட்டின் யுத்த நிலைமைகளைப் பரிசீலிக்கும் கூட்டமும் பிற்பகலில் நடைபெறுவதுண்டு. இராணுவத் தளபதியுடன் ஆயுதப் படைத் தளபதிகளும் சிரேஷ்ட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளும் இக் கூட்டங்களில் பங்குபற்றுவதுண்டு. அன்றைய தினம் பிற்பகல் 1.30 மணியளவில் மதிய உணவுக்காக இராணுவத் தலைமையகத்துக்குள் உள்ள தனது தங்குமிட விடுதிக்குப் புறப்பட்ட அவர், பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமாகவிருந்த பாதுகாப்புத்துறைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்தார். இதனை நன்கு தெரிந்து கொண்ட புலிகள் அனோஜாவைக் கர்ப்பிணியாக்கி இராணுவத் தலைமையகத்துக்குள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். கடந்த மூன்று மாதங்களாக அனோஜா இராணுவ ஆஸ்பத்திரிக்கு வந்து போயிருக்கிறாரென்று புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு ஒரு கிழமை முந்தி, அதாவது கடந்த மாதம் 18ஆம் திகதி இராணுவ ஆஸ்பத்திரியில் கர்ப்பிணிப் பெண்களுக்கென நடத்தப்பட்ட கருத்தரங்கொன்றிலும் அனோஜா கலந்து கொண்டிருக்கிறார். சரளமாகச் சிங்களம் பேசக் கூடியவர் அனோஜா. அன்றைய தினம் அவர் காரொன்றில் இரு ஆண் சகாக்களுடன் வந்திறங்கியதை நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள். நண்பகலுக்கு முன்னதாகவே வந்திறங்கிய மூவருமே, இராணுவத் தலைமையகத்தின் கொம்பனித்தெரு நுழைவாயிலுக்கு வந்திருக்கிறார்கள். அனோஜா சுமாரான அழகி மட்டுமல்ல, இராணுவத்தினரோடு பகிடிகள் விட்டுச் சகஜமாகவும் பேசிப் பழகியிருக்கிறார். இராணுவ ஆஸ்பத்திரிக்கு வருபவர்கள், ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு முன்னர் தங்குவதற்கென ஓர் தங்குமிட வசதி அமைக்கப்பட்டுள்ளது. நுழைவாயிலில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் செல்வதற்கான 'பாஸ்' வழங்குவார்கள். இதுவே நடைமுறை. யாருடைய பெயர், விபரங்களையும் பதிவு செய்யும் நடைமுறை அங்கிருக்கவில்லை. இது குறித்துக் கடமையிலிருந்த இராணுவ அதிகாரியொருவரிடம் கேட்டபோது, "நாம் சிங்களவர், தமிழர் என்று பாரபட்சம் பார்ப்பதில்லை. எனவே பாதுகாப்புக் கெடுபிடிகளைப் பலப்படுத்தவில்லை" என்றார். "அதன் பிரதிபலனை இப்போதாவது உணர்ந்து கொண்டீர்களா?" என்று கேட்டபோது அவர் மௌனம் சாதித்தார்.

இராணுவத் தலைமையகத்துக்குள் வளைந்து செல்லும் நீண்ட தார் வீதி உண்டு. இங்கு இராணுவ வீரர்களையும் ஆஸ்பத்திரிக்கு வருபவர்களையும் இலவசமாக ஏற்றியிறக்குவதற்கு இராணுவ பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன. அன்றைய தினமும் இராணுவ பஸ் வரும்வரை அனோஜா, தம்மிடத்தில் காத்திருந்தபோது ஏனையவர்




களோடு உரையாடிக் கொண்டிருந்தாளாம். பின்னர் அங்கிருந்த சிற்றுண்டிச்சாலையிலும் அனோஜா காணப்பட்டிருக்கிறார். பஸ்ஸில் சென்று இராணுவ ஆஸ்பத்திரியில் இறங்கிய பின்னர், பெருமளவு நேரம் ஆஸ்பத்திரி முன்விறாந்தையிலேயே நடமாடியுள்ளார். ஆக, லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகாவைக் கொலை செய்யும் திட்டத்தைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் பல மாதங்களுக்கு முன்னரேயே தீட்டியிருக்கலாமென்று புலனாய்வுப் பிரிவினர் நம்புகின்றனர். ஆனாலும் புலனாய்வுப் பிரிவினருக்கும் இராணுவத்தினருக்கும் 'தண்ணி' காட்டிவிட்டு புலிகள் தமது தற்கொலைக் குண்டுதாரியை இராணுவத் தலைமையகத்துக்குள் எப்படி அனுப்பினார்கள் என்பதே இராணுவப் புலனாய்வாளர்களை இப்பவும் திக்குமுக்காட வைக்கும் சங்கதியாகும்.

புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான் என்றழைக்கப்படும் நி.சிவசங்கரன் அண்மைக் காலமாகத் தனது தந்திரோபாயங்களைக் கச்சிதமாக மேற்கொண்டு வருகிறாரென்றே கூற வேண்டும். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி.ஜெயரட்ணத்தைப் புலிகள் கொழும்பில் வைத்துக் கடத்திச் சென்றனர். அவர் புலிகள் தொடர்பான புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றியவர். இவரிடமிருந்து பல புலனாய்வுத் தகவல்களை பொட்டம்மான் நேரடியாகவே பெற்றிருக்கலாமென்று கூறப்படுகிறது. இதன் பின்னரே, இராணுவ புலனாய்வுப் பிரிவின் முக்கியஸ்தரான லெப்டினனட் கேர்ணல் நிசாம் முத்தலிப் கடந்த வருடம் மே மாதம் 31ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். முத்தலிப்பின் நடமாட்டங்கள் பற்றி தகவல்களைப் பெறுவதற்காக கல்கிசையிலுள்ள பிஸ்கட் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்துவந்த சிங்கள இளைஞரொருவர் பயன்படுத்தப்பட்டார். அவருக்கு பதின்மூன்று இலட்ச ரூபா பணம் வழங்கப்பட்டதென்பதைப் பின்னர்தான், புலனாய்வு அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடிந்தது. அந்தச் சிங்கள இளைஞர் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். பொட்டம்மானை அவர் சந்தித்துப் பேசினாரென்றும் கூறப்படுகிறது. இதே போன்று மற்றொரு இராணுவப் புலனாய்வு அதிகாரியான மீடினின் கொலையிலும், தகவல் பெறுவதற்காகச் சிங்களவர்களை விலைக்கு வாங்கியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது. இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணத்தைப் புலிகள் கடத்திச்சென்ற பின்னர்தான் கொழும்பிலுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் வைத்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கொல்லப்பட்டார். பல முக்கிய புலி இயக்கப் புள்ளிகளை வலையில் போட உதவிய இன்ஸ்பெக்டர் ஜெயரட்ணம் தங்கியிருந்த கல்கிசைப் பொலிஸ் விடுதி அண்மையில் தேடுதல் வேட்டைக்கு இலக்காகியிருக்கிறது. அவர் தங்கியிருந்த விடுதியிலிருந்து ரெலஸ்கோப் பொருத்தப்பட்ட ஸ்னைப்பர் துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுவது ஒரு புறமிருக்கட்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொது செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனாவைக் கொலை செய்வதற்கு அவருக்கு நன்கு பரிச்சயமான ஒருவரைப் புலிகள் நாடியதாகவும் சம்பந்தப்பட்ட நபருக்குப் பத்து இலட்ச ரூபா முற்பணம் தரப் புலிகள் முன்வந்தனரென்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமைச்சரின் நடமாட்டங்கள் பற்றித் தகவல் தருவதற்குப் பதிலாக, புலிகளின் திட்டம் பற்றி அமைச்சரிடமே சம்பந்தப்பட்ட நபர் தகவல் தெரிவித்ததையடுத்து, இருவர் வெலிக்கந்தைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். இந்த இருவரில் ஒருவரிடம் முஸ்லிம் பெயர் கொண்ட அடையாள அட்டையும் மற்றவரிடம் சிங்களப் பெயர் கொண்ட அடையாள அட்டையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சிங்களப் பெயர் கொண்ட அடையாள அட்டை வைத்திருந்தவர், புலிகளின் பாணியில் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். எனவே அனோஜா விவகாரத்தில் இப்போதுள்ள கேள்விகள் இவைதான்.

இராணுவத் தளபதி மதிய உணவுக்காகக் காரில் ஏறியதுமே தற்கொலைக் குண்டுதாரிக்கு தகவல் வழங்கிய 'உள்வீட்டுப் பிள்ளை யார்?' அவருக்கும் அனோஜா என்று கூறப்படும் அந்த இளம் பெண்ணுக்குமுள்ள தொடர்பு என்ன? வவுனியாவில் அல்லது கொழும்பில் என்றாலும் அனோஜாவுடன் பாலியல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இராணுவ அதிகாரி அல்லது சிப்பாய் யார்? இவற்றுக்கு விடை காணாதவரை அனோஜா உண்மையில் யார் என்பதைக் கண்டு பிடிக்க முடியாது. அனோஜாவின் அடையாள அட்டையை வைத்தே அவரது பெயர் அனோஜா குகனேசராஜா என்று கூறப்படுகிறது. இன்னொருவரின் அடையாள அட்டையை அவர் பயன்படுத்தினாரா? அல்லது போலி அடையாள அட்டையை அவர் வைத்திருந்தாரா? எது எப்படியிருந்தாலும் அனோஜாவோடு டாம் வீதி விடுதியில் தங்கியிருந்ததாகக் கூறப்படும் இரு ஆண் சகாக்களும் தலைமறைவாகி விட்டார்கள்.

இராணுவத் தளபதி மீதான தற்கொலை முயற்சியையடுத்து திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூரிலுள்ள புலி இலக்குகள் மீது சம்பவ தினம் இரவும் மறுநாளும் படையினரின் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இத் தாக்குதலில் புலிகளின் பயிற்சி முகாமிலிருந்த முப்பது புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனரென்று இராணுவத் தகவல்கள் தெரிவித்தன. அப்பாவி மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை. "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுக்கிறார்கள் ஆண்டிகள்." அரசாங்க சமாதான செயலகத் தலைவர் கலாநிதி பாலித கொஹனேயின் வார்த்தைகளில் கூறுவதானால் :

"யுத்த நிறுத்த காலத்தில் புலிகள் மோசமான அத்துமீறல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரச தரப்பிலும் சில தவறுகள் நடந்திருக்கின்றன. இருந்தாலும் இரு தரப்புகளும் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமென நம்புகிறேன்."

நிச்சயமாக இரு தரப்புகளும் பேச்சுவார்த்தை மேசைக்கு வரும் என்பது உண்மையே. ஆனால் மீண்டும் வேதாளங்கள் முருங்கை மரத்தில் ஏறினால் என்ன செய்வது? ■

# தாக்குதல் வியூகங்கள் எப்படி தயாராகின்றன?

**தாக்குதல்கள்** பற்றி விரிவாகப் பார்ப்பதானால் அலசி ஆராயவேண்டிய விடயங்கள் மிக அதிகமானவை. தாக்குதலுக்கான இலக்குகளும் பல தரப்பட்டவை. தனி நபர், சிறிய குழுவினர், ஒரு படையணி, காவலரண், முகாம் என்று இலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. இதில் ஒவ்வொன்றையும் எப்படித் தாக்குதல் இலக்காக வரையறுத்துக் கொள்ளப்படுகிறது என்பதை இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்பது பொருந்தும். சமகாலத்தில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஒன்று இடம்பெற்ற பின்னர், குண்டுதாரி அப்படி வந்தார், இப்படி வந்தார் என்றெல்லாம் பலவாறான தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அந்தத் தகவல்களை அறிந்து கொள்வதில் சாதாரண மக்கள் பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். அந்த வகையில் கடைசியாக, கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதி சரத் பொன்சேக்காவை இலக்கு வைத்துத் தாக்கப்பட்டது. இதற்கு முன்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்கா, ஆர்.பிரேமதாஸ, தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தரும், புத்திஜீவியுமான நீலன் திருச்செல்வம், முன்னாள் அமைச்சர் சி.வி.குணரெட்ண இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, என்று தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் பலர். இவர்களில் ஈ.பி.டி.பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியவர்கள். இதே போல தற்கொலை குண்டுதாரியின் பெரும் இலக்காகக் கருதப்பட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடைசியில் சினைப்பர் தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் அவரை ஒரு தற்கொலைக் குண்டுதாரியின் இலக்காகவே புலிகள் கருதி வந்துள்ளனர்.

ஆகவே ஒரு முக்கிய பிரதிநிதியைக் கொலை செய்வதற்குப் பிரயோகிக்கப்படும் பல தரப்பட்ட கொலை முயற்சிகளில் கடைசிக் கட்ட தாக்குதல் முறையே தற்கொலைத் தாக்குதலாக அமைகிறது. தற்கொலைத் தாக்குதல் என்றதும் வெறுமனே வெடிமருந்தைக் கட்டிக் கொண்டு நேராக வந்து இலக்கைத் தாக்குவது சாத்தியமாகாது.

ஒரு முக்கியஸ்தர் இலக்காகத் தீர்மானிக்கப்பட்ட நாளிலிருந்து அதற்கான வேலைகள் ஆரம்பமாகின்றன. முதலில் அவர் பற்றியதும், அவரது குடும்ப உறவுகள் பற்றியதும் அவர் வாழ்கின்ற சுற்றாடல் பற்றியதுமான தகவல்கள் திரட்டப்பட வேண்டும். இதற்குத் தேவைக்கேற்ப மொழிப் பரிச்சயமுள்ள ஒரு குழுவை நியமிக்க வேண்டும். அவ்வாறு தகவல்கள் திரட்டும் பணியில் பணம் ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாது. அதேவேளை பணத்துக்காக விலை போகக் கூடிய நபர்கள் இருந்தால் அவர்களைப் பணத்தைக் காட்டி கையாளும் திறமையும் முக்கியமாகும்.

மறுபக்கத்தில் குறிப்பிட்ட நபர் தங்கும் இடம், பொழுது போக்காகச் செய்யும் வேலைகள், சந்திக்கும் நபர்கள், தொடர்ச்சியாக செய்யும் வேலையும் நேரமும், அவருக்கு நெருக்கமானவர்கள், விரும்பிச் சாப்பிடும் உணவு, அது தயாரிக்கப்படும் இடம், குறிப்பாக அவர் குடிப்பழக்கம், பெண்களுடன் தொடர்பு வைத்திருக்கக் கூடியவரா என்பது பற்றிய தகவல்களைச் சேகரிப்பதும் முக்கியமாகிறது.

உதாரணத்துக்கு - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகுவதற்கு மேற்குறிப்பிட்ட எந்த விடயத்திலும் பிடி கிடைக்காததால் அவரது அலுவலகத்தில் வேலை செய்த ஒருவரைப் பிடித்து, குடும்பம் சகிதமாக மிரட்டி, குண்டுதாரியைக் கூட்டிக்கொண்டு போகும்படி புலிகள் கேட்டதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன. அப்போது அமைச்சு அலுவலகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய சகல தகவல்களும் புலிகளால்


**தற்கொலையாளிகளாக அநேகமாகப் பெண்கள் பயன்படுத்தப்படுவதில் முதன்மையான காரணிகள், பெண்கள் மீது ஏற்படக்கூடிய அனுதாபம், இனக்கவர்ச்சி, கெடுபிடிகளில் தளர்வு என்பவைதான். இதைவிடவும் முக்கியமானது பெண்களின் உடலமைப்பு. குண்டை பொருத்துவதற்கு மிகவும் வசதியாக மார்பகப் பகுதி, வயிற்றுப் பகுதி என்பன தாக்குதல் திட்டத்தில் கூடிய வாய்ப்பை வழங்குகின்றன.**


சேகரிக்கப்பட்டுள்ளது. அதாவது, பெண் காவலாளி இல்லையென்பதும் அமைச்சர் பொதுமக்களை மிக நெருக்கமாகச் சந்திக்கிறார் என்பதும் புலிகளுக்கு சரியாகக் கிடைத்திருக்கிறது. இவற்றை உறுதிப்படுத்த ஒரு புலியே நேரடியாக வேறு காரணங்களைக் காட்டி அமைச்சு அலுவலகத்துக்கு வந்து போயிருக்கக் கூடும். ஆனால் அமைச்சரின் பாதுகாப்புத் தொடர்பான திட்டமிடலாளர்கள் பெண் காவலாளியின் அவசியத்தை உணர்ந்து அடுத்த நாளே நியமித்துவிட்டனர். இந்த உடனடி மாற்றம் புலிகளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே தான் அமைச்சரைக் காண வந்த தற்கொலையாளி அன்று பரிசோதனைச் சிக்கலுக்கு முகம் கொடுத்தார். பின்னர் கொள்ளுப்பிட்டி பொலிஸில் தற்கொலையாளி குண்டை வெடிக்க வைத்தார். இதற்குப்பிறகு லக்ஷ்மன் கதிர்காமர் இலக்கு வைக்கப்பட்டார். அந்தக் காலப்பகுதியில் அவரது வீட்டுச் சுற்றாடலில் பலர் கைது செய்யப்பட்டனர். இதேபோல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வீட்டுக்கு அருகாமையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய பலர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு வைபவத்தில் உரை நிகழ்த்தும் போது, தனது உடல் சுகவீனம் காரணமாக ஒவ்வொரு நாளும் மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் இரண்டு மணி நேரம் நீச்சல் பயிற்சி செய்வது வழமை என்று கூறியிருக்கிறார். அந்தத் தகவலானது புலிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. அதாவது, நீச்சல் பயிற்சிக்கு நீச்சல் தடாகம் தேவை. அதை வீட்டுக்குள் கதிர்காமர் கொண்டிருக்கவில்லை. ஆகவே சிறப்பாக அமைக்கப்பட்ட நீச்சல் தடாகம் பற்றிய தேடலே அவரை இலக்கு வைக்க தளத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது. கடைசியாக இராணுவத் தளபதி மீதான தாக்குதல் ஒரு செவ்வாய்க் - கிழமையில் - அதுவும் கர்ப்பிணிப் பெண்போல் - போய் நடத்தப்பட்டிருக்கிறது.

தற்கொலையாளிகளாக அநேகமாகப் பெண்கள் பயன்படுத்தப்படுவதில் முதன்மையான காரணிகள், பெண்கள் மீது ஏற்படக்கூடிய அனுதாபம், இனக்கவர்ச்சி, கெடுபிடிகளில் தளர்வு என்பவைதான். இதைவிடவும் முக்கியமானது பெண்களின் உடலமைப்பு. குண்டை பொருத்துவதற்கு மிகவும் வசதியாக மார்பகப் பகுதி, வயிற்றுப் பகுதி என்பன தாக்குதல் திட்டத்தில் கூடிய வாய்ப்பை வழங்குகின்றன.

தாக்குதலில் பிரதான அம்சம் உளவு பார்த்தலாகும். குறிப்பிட்ட நபரை பின்தொடர்வதற்கும், நேரகாலத்தை கணிப்பதற்கும், நடமாட்டத்தை அவதானிப்பதற்கும் ஒருவர் அல்லது இருவர் நியமிக்கப்படுவர். அவர்களுக்குப் பின்னால் இருவர் நியமிக்கப்படுவர். அதாவது முன்னர் நியமிக்கப்பட்டவர்கள் சரியாக தமது பணியைச் செய்கிறார்களா என்பதைக் கவனிப்பதற்கு. இவற்றுக்கு மேலதிகமாக இன்னும் இருவர் நியமிக்கப்படுவார்கள். அவர்கள் முன்னர் நியமிக்கப்பட்ட இரு குழுக்களுக்கும் ஒருவரை ஒருவர் அவதானிக்கிறார்கள் என்ற செய்தியை தெரியப்படுத்துவர். ஏனெனில் தாம் கவனிக்கப்படுகிறோம் என்ற தகவல் கிடைத்தால் ஒவ்வொருவரும் தத்தமது பணியை கச்சிதமாகச் செய்வார்கள் என்பதற்காக. பின்னர், இதே மாதிரியான ஒரு குழு அமைப்பு முறையும் அதே பணியில் நியமிக்கப்படும். ஏனெனில் முதல் அணி தரும் தகவல்கள் சரிதானா என்பதை சரிபார்த்துக் கொள்ள இரண்டாம் அணியின் தகவல்கள் உதவும் என்பதால் இத்தனைக்கும் இடையில் இந்தப் பணியில் இறங்கியிருக்கும் எந்தக் குழுவுக்கும், எந்தக் குழுவோடும் நேரடித் தொடர்பாடல் இருக்காது. அதைக் கவனித்துக் கொள்ள மேலதிகமாக ஒருவர் நியமிக்கப்படுவார். இவரைப்போல் பண விவகாரங்கள், தங்குமிட வசதிகளைக் கவனிக்கவும் என்று தனித்தனி மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படுவர். அவர்களுக்குள்ளும் நேரடித் தொடர்புகள் இருக்காது. இவர்கள் அனைவரையும் வழி நடத்த ஒருவர் இருப்பார். அவருக்குக் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு தாக்குதலை திட்டமிடுவதுடன் பொருத்தமான தாக்குதல் நபரையும் தெரிவுசெய்வார். பின்னர் குண்டுதாரியின் வேலை பற்றி விளக்கப்படும். அந்த நேரத்தில் என்னென்ன தகவல்கள் என்னென்ன வழிகளில் வழங்கப்படும் என்ற விளக்கங்கள் கொடுக்கப்படும். இதில் குண்டுதாரிக்கு இறுதி நேரத் தகவலை வழங்கும் நபரின் தொடர்பு மட்டுமே கொடுக்கப்படும். குண்டுதாரியாக அனுப்பிவைக்கப்படுபவருக்கு உண்மைக்குப் புறம்பான பல உறுதி மொழிகள் வழங்கப்படும். அதாவது தாக்கப்போகும் இலக்கு தமிழீழத்துக்கு எதிரானது. அது அகற்றப்பட்டால் தமிழீழம் கிடைத்துவிடும். அப்படி தமிழீழம் கிடைத்துவிட்டால் அதற்கு உயிரைத் தியாகம் செய்த நீங்கள் போற்றுதற்குரியவராக நினைவு கூரப்படுவீர்கள். உங்கள் குடும்பத்தை கௌரவமாக நடத்துவோம். உங்கள் சாவில் பல புதிய தற்கொலையாளிகள் உருவாவார்கள். நீங்கள் ஒரு முன்மாதிரியான போர் வழிகாட்டியாக மதிக்கப்படுவீர்கள் என்றும் இதற்கு மேலதிகமான வார்த்தைப் பிரயோகங்களையும் தெரிவித்து மூளைச் சலவை செய்யப்படுவார். அந்த மன நிலையிலிருந்து அவர் மாறி விடாமல் இருக்க, தாக்குதலுக்கான தினம் வரை இராஜபோக வாழ்க்கை வாழ்வது போன்ற ஒரு மாயை தோற்றுவிக்கப்படும். அவருடன் வேறு சக உறுப்பினர்கள்கூட பேசுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பலிக்கடாவுக்கு மாலை போடுவது போல் புலிகளின் தலைவர் நேரடியாகச் சந்தித்து கைலாகு கொடுத்து விடுவார். இப்படி குண்டுதாரியின் மன நிலை சாதாரணமான நிலையை எட்ட வாய்ப்புக் கொடுக்காமல் சூழல் மாற்றியமைக்கப்படும். இந்தத் திட்டங்கள் இறுதி வடிவம் பெறுவதற்கு மூன்று மாதம் தொடக்கம் 1 அல்லது 2 வருடங்களுமாகும். இவற்றையெல்லாம் நெறிப்படுத்தி உறுதிப்படுத்தும் பொறுப்பை பொட்டு அம்மான் எடுப்பார். தேவையேற்படின் அவருக்கு கீழ் நிலையிலுள்ள இருவர் கலந்து தீர்மானிப்பர். இவை புலிகளின்பகுதி விடயங்களாக இருக்கும். அதேவேளையில் தாக்குதலுக்கான

அலசுவது

**- மதியூகி -**

நேரம் நெருங்க நெருங்க அதற்கு உதவிய இயக்கம் சாராத நபர்கள் கண்காணிக்கப்படுவார்கள். அவர்கள் தொடர்பு கொள்ளும் நபர்கள், போய்வரும் இடங்கள் அவதானிக்கப்படும். பணத்தை வேண்டிக்கொண்டு அவர்கள் துரோகம் செய்தாலோ அல்லது அவர் ஊடாக எக்காலத்திலேனும் கதை வெளியில் வர வாய்ப்பு இருப்பதாக உணர்ந்தாலோ அவரையும் கொலை செய்யத் திட்டமிடப்படும் அல்லது குறைந்த பட்சமாக ஏமாற்றி வன்னிக்கு அழைக்கப்பட்டு பங்கர் சிறைகளில் ஆயுளுக்கும் போடப்படும். இப்படி ஒரு தாக்குதலுக்கான தயாரிப்பு தொடர்பான அனுகுமுறைகள் நிமிடத்துக்கு நிமிடம் தேவையான மாற்றங்களுக்கு உட்பட்டுக் கொண்டே இருக்கும்.

இவ்வாறுதான் ஏனைய தாக்குதல்களுக்கும் என்றாலும் கூட, தாக்கிவிட்டுத் தப்பிப் போவதற்கான தயாரிப்புகள் பல வேறுபாடுகளைக் கொண்டது. தற்கொலையாளியோடு விடயம் முற்றுப் பெறுவதால் அதற்கான தயாரிப்பு வித்தியாசப்படுகிறது.

---



## அதிரடி அய்யாத்துரை

**அவிசாவளை,** முல்லேரியா பகுதிகளில தலையில்லாத முண்டங்கள் கிடக்குதெண்டு செய்திகள் வெளியாகவும் சனத்துக்கு ஒரு விதமான பீதி கிளம்பிட்டுதுங்கோ. யார் யாரை வெட்டுகினம் எண்டதும் தெரியுதில்லை. வெட்டுப்படுறவையை யார் எண்டும் கண்டுபிடிக்க முடியுதில்லை எண்டதாலை குழப்பம் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்குங்கோ. வெட்டப்படுறவர் யார் எண்டதை அடையாளம் காணவேணுமெண்டால் என்ன செய்யலாமெண்டு நாலு பேரிட்டக் கேட்டுப் பார்த்தால் என்ன எண்டிட்டு கேட்டால், சனத்தின்ர ஒரே முடிவு ஒவ்வொருவரும் பின் பக்கத்தில மாட்டுக்கு குறிபோடுமாப்போலை குறிவச்சுக் கொண்டால் கண்டுபிடிக்கிறது ஈசியாமெண்டினம். மாட்டுக்கு குறி வைக்கிறதைப் போல மனிசனுக்கும் குறிவைக்கிறதெண்டால் எப்புடி இருக்கும். மனித உரிமைகள் பற்றி மாரில அடிச்சுக் கொண்டு திரியிறவை உதுகளைப் பத்தி ஒண்டும் கண்டுகொள்ளமாட்டினமோ எண்டதுதான் என்ர கவலையுங்கோ. இதுவரைக்கும் ஆறு தலையில்லாத முண்டங்கள் எண்டு பார்த்தால் வவுனியாவில முண்டமில்லாம தலை தனியாக் கிடக்குதாம் எண்டிச்சினம். நாட்டில என்ன நடக்குதெண்டதே தெரியுதில்லையுங்கோ. ஒருபக்கம் தலைவெட்டிக் குரூப். இன்னொரு பக்கம் உடல் வெட்டிக் குரூப் எண்டால் சாதாரண சனத்தின்ர பாதுகாப்புக்கு யாருங்கோ உத்தரவாதம்? எதுக்கும் மகா ஜனங்கள் தெரியாதவையோ, இரவிலையோ யாரும் கூப்பிட்டால் போகாதீங்கோ. நாட்டில கொஞ்சப்பேர் கொலை வெறியோட திரியிறாங்கள் போல இருக்கு.

**திருடனுக்கு** விதானை வேலை கொடுத்த மாதிரியெண்டு ஊருக்குள்ள ஒரு கதை சொல்லுவினம். அப்புடிப் போல கெட்டிக்கார புழுகு மாஸ்டர்மாருக்கெல்லாம் பொலிரிக்ஸ் பதவி கொடுத்து இருக்கினம் போல. சம்பூரில விமானம் தாக்கினதில நாற்பதாயிரம்பேர் பாதிக்கப்பட்டிருக்கினம் எண்டு எழிலானவர் எழுந்தமானமாக ஒரு ஸ்டேட்மெண்டை விட்டவர். ஆனால் அந்தப் பகுதி அரச அதிபர் சொல்லுறார் - உங்க மொத்தமாவே பதினாறாயிரம் பேர்தான் இருக்கினமெண்டு. அதிலையும் ஆயிரத்து ஐநூறுபேர் சொச்சம்தான் இடம் பெயர்ந்திருக்கினமெண்டு. அப்புடிப் பாத்தால் சு.ப. சிரிச்சுக் கொண்டே சொல்றது போலை, எழிலானவர் எழுந்தமானமாகச் சொல்லுறார் போல எண்டது உள்நாட்டுக்குள்ளையும் வெளி நாட்டிலையும் தெட்டத்தெளிவாகப் புரிஞ்சு போச்சாம். உப்புடி எத்தனை விசயத்தை எழுந்தமானமா தன்ர இஷ்டத்துக்கு விளாசித் தள்ளியிருப்பார் எண்டு யோசிக்கக் கூடியவை யோசிச்சு சிரிக்கினமாம். கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு எண்டுவினம். இது என்னடாவெண்டால் விமானம் தாக்கி இரண்டாம் நாளே தெரியவந்திட்டுது. இனியாகிலும் பொருந்தச் சொல்ல ரை பண்ணுங்கோ புரியுதே...

**தனியார்** வானொலிகளில செய்திகளை முந்திக் கொண்டு தாரதிலை ஒரு இடத்தை பிடிச்சுக்கொண்டு வந்தது பிரகாசமான வானொலிதான் எண்டு ஒரு கருத்து இருந்து வந்தது. ஆனால் இப்ப ஒரு வாரமா அந்த நிலைமை மாறி வருகுது போல இருக்கு. செய்திகள் முன்னம் மாதிரி காரமா உப்பா இல்லாமல் கடமைக்கு கையில் அம்புடுறதுகளை வச்சிக்கொண்டு சொல்லுகினமாம். அதுவும் முதல் வாசிச்ச செய்தியையே அடுத்த செய்திக்கும் சொல்லுகினமாம். அப்புடி அவைக்கு என்ன நடந்தது எண்டு விசாரிச்சதில இரகசியமாக ஒரு செய்தி கிடைச்சுதுங்கோ. கேட்டுப் போட்டு ஆச்சரியப்படாதேங்கோ. படைத்தளபதி மீதான தற்கொலைத் தாக்குதலுக்குப் பிறகு ரெண்டெழுத்தாரின்ர இணையத்தளம் அதுதானுங்கோ நிதமும் தர்ஷனம் எண்டிட்டு கொலை. தொடர்பான செய்தியை சுடச்சுட போடுற இணையத்தளத்தைப் பார்த்துத்தான் இவையும் முந்திக் கொண்டு செய்தி சொன்னவையாம். அது மூடப்பட்டு பிறகு திறக்கப்பட்டு சுருதி குறைஞ்சு போனாப் பிறகு பிரகாசமான வானொலிக்காரரின்ர சுருதியும் குறைஞ்சு போச்சுதாம் எண்டினம். எனக்கும் உண்மை இருக்குமாப் போலதான் தெரியுது. என்னெண்டாலும் இண்டைக்கு ஊடகமெண்டது இன்னொன்றைப் பாத்து அதில உல்டா செய்து முந்திக் கொண்டு தாரமெண்டு சொல்லுறது ஒரு ஸ்டைலாப் போட்டுதுங்கோ. உதில ஒருவரும் விதிவிலக்கில்லை தெரியுமோ? எண்டாலும் உப்பிடி ஓவராப் போய் சுருதியைக் குறைச்சுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். இனியாகிலும் யோசிச்சினமெண்டால் சரிதான்....

**மூதூரில** விமானத் தாக்குதல் நடக்கவும் அங்க இருந்த சனம் ஓடுது, ஒழியுது எண்டாங்கள். உந்த அடிக்கு ஆயிரக்கணக்கில சனம் இடம்பெயர்ந்த செய்தியை அப்புடியே மறைச்சுப்போட்டாங்கள். அது எங்கையெண்டு கேக்கிறியளோ, பாதுகாப்பு பாதுகாப்பு எண்டு சனத்தை வன்னிக்கு வரச்சொல்லினமே, அவையின்ர பாதுகாப்புக்குள்ளான பளை - அதை பச்சிளைப்பள்ளியெண்டும் சொல்லுவினம். உங்கயிருந்து சனம் வெளியேறி ஆனையிறவுக்குப் போட்டுதுகளாம். உந்தச் செய்தியை ரெண்டெழுத்தார் வெளியால விடயில்லையாம். ஏன் எண்டால் எங்கட ஏரியா பாதுகாப்பானது எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறம். சனம் இங்க இருந்தும் இடம் பெயரினம் எண்டால் பிறகு சனம் வராதுகள் எண்டதால்தான் அந்த செய்தியை சென்சார் பண்ணிப் போட்டினமாம்.

**தலைநகரில** பாதுகாப்புக் கெடுபிடி அதிகரிச்சுக் கொண்டு போகுது. அதில சுற்றி வளைப்புச் செய்து சந்தேகமானவையை பிடிச்சுக்கொண்டு போகினம். பிறகு அவை தங்களை உறுதிப்படுத்தினாப் பிறகு விடுவிக்கப்படுகினம். உறுதிப்படுத்த முடியாமல் நிண்டு முழி பிதுங்கிறவையை கேஸில போடுகினம். உதில சமாச்சாரம் என்ன தெரியுமோ. உப்பிடி பிடி படுறவை வழக்கை தாக்கல் செய்து போட்டு தன்னோடை தொடர்பு கொள்ளுங்கோ எண்டு ஒரு அறிவித்தலை வெளியிட்டிருக்கிறார் மண்ணெண்ணெயார். சும்மா சொல்லக் கூடாது. ஆக்கள் பிடிபட்டிருக்கேக்க மனிசன் ஸ்டேஷனுக்குப் போய் பார்த்துப் போட்டுத்தான் வந்தவர் எண்டு கேள்விப்பட்டனான். எடே, மனிசன் சனத்துக்கு உதவிறார் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கேக்க உப்பிடி ஒரு அறிக்கை விட்டு கவுத்தடிச்சுப்போட்டார். பிடிபட்டவை வழக்கைப் போட்டினம் எண்டால் பிறகு ஏன் உவரிட்டப் போகவேணும். அதுக்கு முதலிலதான் ஏதாவது உதவி தேவைப்படும் எண்டு பாதிக்கப்பட்ட சனம் கேக்குதுகளுங்கோ. பாத்தியளோ ஓவர் பொலிரிக்ஸ் செய்யப்போய் இமேஜை உடைச்சுப்போட்டாருங்கோ.

**படைத்** தளபதி மேல தற்கொலைக் குண்டுதாரி தாக்கின உடன நாட்டில யுத்தம் தொடங்கப்போகுது எண்டுதான் சனம் பயந்ததுகள். ஆனால் அதிகாரமானவர் ஆற்றின உரையில, தான் யுத்தம் செய்யப் போறதில்லையெண்டும், இந்த நாடு எந்தவொரு தனியினத்துக்கும் சொந்தமானதில்லையெண்டும், ஒவ்வொரு பிரஜையும் உணர்ச்சிவசப்படாமல் நிதானமாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் சொன்னவர். - உந்த உரையைக் கேட்டு அவரை ஒரு இனவாதியெண்டும், அவர் யுத்தப்பிரியர் எண்டும், நாட்டு மக்களுக்கு தாரை தப்பட்டை அடிச்சவைக்கு மூஞ்சு கருகிப்போயிட்டுதுங்கோ. உவர் உப்பிடிச் சொல்லுவார் எண்டு ரெண்டெழுத்தார் கூட யோசிக்கயில்லையாம். உவர் உப்பிடியெண்டால், யானைக் கட்சித் தலைவர் அண்மைக்காலமாக விட்டுக் கொண்டிருக்கும் அறிக்கைகளைப் பார்த்தால், புல்லரிக்குதுங்கோ. நாட்டின்ர தேசிய பாதுகாப்புக்கும், சமாதான முயற்சிகளின்ர தொடர்ச்சியான வேலைத்திட்டத்துக்கும் தன்ர கட்சி அனைத்து உதவியையும் அதிகாரமானவருக்கு வழங்குமாம் எண்டும், முடிஞ்சால் தேசிய அரசொண்டை அமைப்பது பற்றி சிந்திக்க ஜனாதிபதி இணங்கினால் தாங்கள் பச்சைக் கொடி காட்டத் தயாரா இருக்கிறம் எண்டும் சொல்லியிருக்கார். உந்த விசயங்களை பொலிரிக்ஸாப் பாத்தால், சிவப்புச் சட்டைக்காரரையும், காவிக் கட்சிக்காரரையும் பொலிரிக்ஸில இருந்து ஓரம் கட்டி விடுறதுக்கு ஒரு முயற்சியோ எண்டும் யோசிக்க வேண்டிக் கிடக்கு. மறுபக்கத்தில ஆரோக்கியமான பொலிரிக்ஸ் கலாசாரம் உருவாகிக் கொண்டு வருகுதோ எண்டும் யோசிக்க வைக்குது. உந்த மாதிரிச் சந்தேகங்களுக்கெல்லாம் காலம் தானுங்கோ பதில் சொல்லவேணும். வெயிட் அண்ட் சீ யுங்கோ...

# மழை

உலக வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் அவரவர் சூழலுக்கு ஏற்ப அவசியமாகிப் போன படியால், பருவகால மாற்றங்களிலோ அவற்றை அனுபவிப்பதிலோ நேரத்தைச் செலவு செய்ய முடிவதில்லை. அவசர யுகத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் என்று குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒரு இடத்தில் அமர்ந்து உணவு உண்ணக்கூட நேரம் வாய்ப்பதில்லை.

ஆனால் அப்படி முடியாமல் போகிறதே என்ற ஏக்கம் ஒவ்வொரு அங்கத்தவரின் மனதிலும் ஒரு பெரும் இடைவெளியாகவே தொடர்கிறது. ஒரு ஞாயிற்றுக் கிழமையில் குடும்பத்தோடு ஒரு பூங்காவுக்குப் போகவேண்டும் அல்லது குடும்பத்தோடு படம் பார்க்கப் போகவேண்டும் அல்லது குடும்பத்தோடு நல்ல உணவு விடுதிக்குப்போய் வித்தியாசமாக உண்ணவேண்டும் அல்லது குறைந்தபட்சம் துணிமணிகள் வாங்குவதற்குப் போகவேண்டும்; வாய்ப்பு சரியாக அமைந்தால் தூரத்து ஊர்களுக்கோ வேறொரு நாட்டுக்கோ போய்வரவேண்டும் என்ற விருப்பம் இல்லாமல் எவரும் இருக்கமுடியாது. ஆனால் ஒரு நாளாவது குடும்பத்தோடு மழையில் நனையவேண்டும் என்று எவரும் எண்ணுவதில்லை. மழையில் நனைகின்ற சுகத்துக்காக வயது வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் ஏங்குவதுண்டு. வெயிலில் நடக்கிறோம். நிழலில் இருக்கிறோம். ஏன் பனியில்கூட சில சமயம் சென்று வருகிறோம். ஆனால் மழையில் நனைவதை மட்டும் ஏனோ ஒருவர் இன்னொருவருக்கு அனுமதிப்பதில்லை. என்னைப் பொறுத்தவரை மழை ஒன்றும் மனிதனுக்குப் பெரிய தீங்கை உண்டுபண்ணக்கூடிய அமிலமல்ல. மழை சொல்லும் கதைகள் ஆயிரம் உண்டு. இப்போதும்கூட மழை பெய்யும்போது முழுக்க நனைந்துவிடு என்று மனது என்னைப் பிடித்துத் தள்ளிக் கொண்டுதானிருக்கும். அந்தப்பொழுது என்னை கட்டிப் போட்டாலும் கைகளையோ அல்லது கால்களையோ மழையிடம் நீட்டி நனைக்கும்படி மனசுக்குள் கெஞ்சுவேன். என் விசாரிப்புகள் மழைக்குப் புரிகிறதுபோல் நினைக்கிறேன். ஆகையால்தான் குறைந்தபட்சம் நான் எட்டி கை நனைக்கும் அருகில் மழை பெய்யும் வாய்ப்பு எனக்குக்கிட்டுகிறது.

நான் சின்னவனாக இருந்தபோதும் சரி, இப்போதும் சரி, மழை பற்றிய விருப்பமும் அது தரும் மகிழ்ச்சியும் குறைந்ததாக இல்லை. ஆனால் சின்ன வயதில் நான் மழையை அனுபவித்ததற்கும் இப்போதைக்கும் கணிசமான வித்தியாசம் உண்டு.

அப்போது எனக்கு பன்னிரெண்டு வயது என்பதை இப்போது கடந்துவிட்ட ஆண்டுகளைக் கூட்டிக்கழித்துத்தான் நினைத்துப்பார்க்க முடிகிறது. நானும் என் பாடசாலை நண்பனும் தம்பலகமத்துக்குப் போய்விட்டு வரும்போது கடுமையான மழை தொடங்கி விட்டது. நனைந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்ள நினைத்தோம். ஆனால் அந்த வீதி 13 மைல்கள் தூரமானது. இடைப்பட்ட பகுதியில் இருபுறமும் வயல் வெளிகளைத்தவிர ஒதுங்கிக் கொள்ள ஒன்றுமில்லை. வேறு வழியில்லாமல் மழையில் நனைந்து கொண்டே சைக்கிளில் பயணத்தைத் தொடர்ந்தோம்.

எனது நண்பன் கண்ணன் தன் அபிப்பிராயத்தைச் சொன்னான். வீதியில் கொஞ்சநேரம் மழையில் நனைந்து கொண்டு படுத்துக்கிடப்போம் என்று. அந்தப் புதிய யோசனை அப்போது புதுமையானது. நாங்கள் சைக்கிள்களை ஒரு ஓரமாக சாய்த்துவிட்டு வானத்தைப் பார்த்தபடி படுத்துக் கொண்டோம். வானம் சாம்பல் நிறத்தையும் கறுப்பு நிறத்தையும் குழைத்துப் பூசிக் கொண்டிருப்பதுபோல் ஒரு மந்தமான தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. மழைத்துளிகள் நேராக பூமியை நோக்கி விழவில்லை. ஒரு பக்கமாக ஆனால் வேகமாக விழுந்து கொண்டிருந்தன. வானம் பொத்துக் கொண்டு ஊத்துவதாக சொல்வார்களே அப்படியென்றால் குறிப்பிட்டளவு தண்ணீர் ஒரே தடவையில் ஊற்றி விடுவதுபோல் பெய்யவேண்டும். ஆனால் மழையோ ஆகாயத்திலிருந்து பிரமாண்டமான பூவாளி கொண்டு யாரோ ஒருவர் ரசித்து ரசித்து ஊற்றிக் கொண்டிருப்பது போல் பரவலாகப் பெய்து கொண்டிருக்கிறது.

சற்று நேரத்தில் மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தோம். இப்போது குளிர் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிப்பதை உணர முடிந்தது. சில நேரம் கீழ் நாடியோடு சேர்த்துப் பல் வரிசை இரண்டும் மெல்லியதாக அடித்துக் கொள்ளுவதுபோல் இருந்தது. அதைத் தவிர்ப்பதற்காக வாய் திறந்து பேசுவதைத் தவிர்த்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.

எங்கள் ஐந்து பேருக்குள்ளும் தன்னை ஒரு சண்டியன் போல் காட்டிக் கொள்ளும் பவானைப் பார்க்கும் போது அவனது வீரமெல்லாம் கழுவுப்பட்டு முடி முகத்தின் முழுப்பக்கமும் பரவி சீக்குப்பிடித்த கோழிபோல் வருவதைப்பார்த்து எனக்கு உள்ளூர சிரிப்புத்தான் வந்தது. மழை பூமியின் அழுக்குகளை மாத்திரமல்ல, மனிதனின் அரிதாரங்களைக்கூட மாற்றிவிடுகிறது என்று எண்ணிக் கொண்டேன்.

மழை உண்டு பண்ணும் கதைகள் ஒருபக்கமிருக்க மழை நாள் பற்றிய என்கதைகள் ஏராளமானவை.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)










## பயங்கரவாதிகளுக்கு முட்டுக்கொடுப்பதா...?

**02.04.2006** வீரம்பேசும் பத்திரிகையின் வாரவெளியீட்டில் 'மூழ்கிய படகுகளும் கிளம்பும் சந்தேகங்களும்' என்ற கட்டுரை இடம்பெற்றிருந்தது. கற்பிட்டி கடற்பரப்பில் இடம் பெற்ற புலிகளின், படையினர் மீதான தாக்குதலையும், ஆயுதங்களை அவர்கள் கடத்தி வருவதையும் மூடி மறைப்பதற்கான திட்டமாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது.

பல நாடுகளில் பயங்கரவாத இயக்கமான புலிகளை திருப்திப் படுத்த பிரபல தமிழ்பத்திரிகை முயற்சிப்பது சந்தேகத்தை ஏற்படுத்து கிறது. ஐக்கிய இலங்கையை பிரித்து பயங்கரவாதிகளிடம் ஒப்படைக்க நடக்கும் செயல்களுக்கு உதவியாகவே இப்பத்திரிகை செயற்படுகிறது. குறிப்பாக தமிழ் மக்கள் யுத்தத்தை மறந்து சமாதானமாக வாழ விரும்பும் போது இன்னொரு தேசிய இனமான முஸ்லிம்களை சீண்டிப்பார்க்க அது முற்படுவது விபரீதமானது. அக்கட்டுரையில் கற்பிட்டி கடற்பரப்பு முஸ்லிம் பிரதேசத்தை கொண்டிருப்பதாகவும், அதன் வழியே ஜிஹாத் என்ற குழுவிற்கான ஆயுதங்களை கொண்டு வரும்போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் முஸ்லிம்களை தவிர யாருமே தற்கொலை செய்வதில்லை எனவும் அதற்கு உதாரணமாக ஈராக், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை காட்டப்படுகின்றது.

புலிகள் இயக்கம் தமிழ் இளைஞர்களை தற்கொலை தாக்குத்லகளுக்கு பயன்படுத்தியதை வீரம்பேசும் பத்திரிகை மறந்து விட்டதா மறைத்துவிட்டதா....?

ஜிஹாத் என்ற கற்பனை குழுவை உருவாக்கி தமிழ் - முஸ்லிம், முஸ்லிம் - சிங்கள உறவை முறிக்க வீரகேசரி முற்படுவது அதுவும் பயங்கரவாதத்திற்கு உதவி புரிவதையே காட்டுகிறது. இப்படியான கட்டுரைகள், பாரிய பின்விளை வேயே ஏற்படுத்தும்.

*–நிஸப்த்தன், கம்மல்துறை.*

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

**- ஆசிரியர்**

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமை யாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**




## சிங்கப்பூரில் திருமண சேவை

சிங்கப்பூரில் திருமணம் செய்ய வருவோருக்கும் வீடுமுறையைக் கழிக்க வருவோருக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடும் மற்றும் திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த செலவில் திருப்திகரமாகச் செய்து தருவோம். மேலும் எங்கள் இடம் 'குட்டி இந்தியா' என்று அழைக்கப்படும் இடத்தில் இருப்பதால், வேண்டிய பொருட்களை நடந்து சென்றே வாங்கலாம். மேலும் விபரமறிய எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள வசதியாக

கை தொலைபேசி எண். : 0065 97514941,
தொலை நகல். : 0065 64816144.

படத்தில் காணும் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூருக்குள் வர அனுமதி கிடைக்காமல் திரும்பிப் போவதைத் தடுப்பதற்கு 2 கிழமைக்கு முன்பே எங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**Lingam Wedding Services,**
10.Anson Road #15 -14 International Plaza, Singapore 079903.







## மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

# இன்னொருவர் பார்வையில்



**THE HINDU**

**சென்னையிலிருந்து வெளிவரும் 'த ஹிந்து' என்ற ஆங்கிலத் தினசரியில் கடந்த 27ஆம் திகதி வெளியான ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இலங்கையில் ஏற்பட்ட பிந்திய யுத்தச் சூழல் தொடர்பாக இங்கே அலசப்படுகிறது.**

**இலங்கைப்** பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதில் தனக்கு அக்கறையில்லை என்பதைப் புலிகள் இயக்கம் மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டியுள்ளது. இலங்கை இராணுவத் தளபதி மீது, புலிகள் இயக்கம் நடத்திய தற்கொலைத் தாக்குதல், இவ்வாறானதொரு

தன்மைகளையும் சர்வதேச சமூகம் பொறுத்துக் கொள்ளுமென்று அது நம்புகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடும் சட்டபூர்வ சக்தியாகத் தம்மைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்குமென்று புலிகள் இயக்கம் நம்புகிறது. தமிழர்கள் மீது தனது சுயசேவை ஆட்சியை ஏற்படுத்துவதற்கான சுதந்திர தமிழீழ இராஜ்யத்தை உருவாக்குவதே புலிகளின் நோக்கம். அதற்கான பாதை கணிசமான தூரத்துக்கப்பால் உள்ளது. சட்டபூர்வ அந்தஸ்தைப் பெறுவதென்பது புலிகளின் இலக்குக்கான போர்வைக்கு உதவும். இவ்வாறு தனது எதிர்கால இலக்கை ஈட்டுவதற்குப் புலிகள் இயக்கம் எதிர்பார்த்துள்ளதா?

2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் லக்ஷ்மன் கதிர்காமரைப் புலிகள் படுகொலை செய்தமைக்குப் பின்னணியில் இருந்த நோக்கம் இதுதான். கடந்த நவம்பர் மாதம் முதல் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரின் உயிர்களைப் பறித்த, படையினர் மீதான புலிகளின் தாக்குதல்களின் பின்னணியும் இதுதான். திருகோணமலையில் இம் மாத ஆரம்பத்தில், தமிழர்களுக்கெதிரான வன்செயலைத் தூண்ட அது எடுத்த முயற்சிகளின் பின்னணியும் இதுதான். இந்த ஒவ்வொரு சம்பவங்களும்

## கொடூரமான அதிர்ச்சித் தாக்குதல்!

பேச்சுவார்த்தைத் தீர்வுச் சாத்தியம் குறித்து உண்மையிலேயே அது பீதி கொண்டுள்ளது என்பதற்கு மேலுமொரு சாட்சியமாகும். நாட்டின் ஏனைய பகுதியோடு இலங்கையின் வடக்கு - கிழக்கு சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் தனது இருப்பு மற்றும் எதிர்காலம் பாதிக்கப்படுமென்று புலிகள் இயக்கம் அஞ்சுகிறது. இதனால் தான் அது, சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதற்குத் தயங்குவதோடு அதற்குப்

**புலிகள் கட்டவிழ்த்து விட்ட நிழல் யுத்தத்துக்கு மத்தியில், இலங்கை அரசாங்கம் காட்டிய அற்புதமான பொறுமை இல்லையென்றால், இப்போது வெறும் கடதாசியில் மட்டுமே இருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம், பல மாதங்களுக்கு முன்னரேயே முற்றுமுழுதான யுத்தத்துக்கு வழி சமைத்திருக்கும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொறுமை இப்போது சற்றுக் குறைந்திருந்தால், அதற்காக அவர் மீது குற்றஞ் சொல்ல முடியாது. புலிகளின் பிந்திய ஆத்திரமூட்டலுக்குப் பின்னர், இலங்கையின் வடக்கு - கிழக்கில் விமானத் தாக்குதலுக்கும் கடற்படைத் தாக்குதலுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். நாட்டின் இராணுவத் தளபதியைக் கொல்லப் பயங்கரவாதக் குழுவொன்று முயற்சி செய்யும்போது, வெறும் அமைதியான பார்வையாளராக இருக்கப் போவதில்லையென்ற செய்தியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு அனுப்ப விரும்பியுள்ளார்.**

பதிலாக, நான்கு வருட கால யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தகர்க்கக் கூடிய வகையில் இலங்கை அரசாங்கம் இராணுவ ரீதியில் பதிலளிக்க வேண்டுமென்பதற்காக அதனை ஆத்திரமூட்டும் பல் தொடர்ச்சியான முயற்சிகளில் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் தமிழர்களின் அபிலாஷைகளை ஈவிரக்கமின்றி நசுக்கும் ஓர் இராணுவ இயந்திரமாக அரசாங்கத்தைக் காட்டுவதற்குப் புலிகள் இயக்கம் எதிர்பார்க்கிறது. வன்னிக்குள் முடக்கப்பட்டிருக்கும் புலிகளின் தலைமை, தனது கொடூரமான பயங்கரவாதச் செயற்பாடுகளைச் சர்வதேச சமூகம் சட்டை செய்யாதென்று நம்புகிறது. சிறுவர்களைப் போராளிகளாகச் சேர்த்துக் கொள்வதையும் மாற்றுக் கருத்துக்களையும் ஜனநாயகத்தையும் மதிக்காத அதன்

புலிகளின் நோக்கத்தையே மேலும் அம்பலப்படுத்தியுள்ளன.

பிந்திய சம்பவங்கள் சுட்டிக்காட்டுவதைப் போன்று, புலிகள் இயக்கம் ஒரு கொடூரமான பயங்கரவாத இயக்கமென்பதை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் இங்கு ஒரு கேள்வியைக் கேட்க வேண்டியுள்ளது. அதாவது, நோர்வேயின் ஏற்பாட்டிலான சமாதான முன்முயற்சிகளில் நேரடியாகவும் நேரடியாக இல்லாத வகையிலும் சம்பந்தப்பட்டுள்ள அமெரிக்கா உட்பட பத்து அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் அனைத்தும், புலிகள் இயக்கம் சமாதானப் பாதையில் நின்று நிலைத்து, தீர்வு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் போதியளவு அழுத்தம் செலுத்துகின்றனவா என்பதே அந்தக் கேள்வியாகும். ஆனால், புலிகள் கட்டவிழ்த்து விட்ட நிழல் யுத்தத்துக்கு மத்தியில், இலங்கை அரசாங்கம் காட்டிய அற்புதமான பொறுமை இல்லையென்றால், இப்போது வெறும் கடதாசியில் மட்டுமே இருக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம், பல மாதங்களுக்கு முன்னரேயே முற்றுமுழுதான யுத்தத்துக்கு வழி சமைத்திருக்கும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பொறுமை இப்போது சற்றுக் குறைந்திருந்தால், அதற்காக அவர் மீது குற்றஞ் சொல்ல முடியாது. புலிகளின் பிந்திய ஆத்திரமூட்டலுக்குப் பின்னர், இலங்கையின் வடக்கு - கிழக்கில் விமானத் தாக்குதலுக்கும் கடற்படைத் தாக்குதலுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். நாட்டின் இராணுவத் தளபதியைக் கொல்லப் பயங்கரவாதக் குழுவொன்று முயற்சி செய்யும்போது, வெறும் அமைதியான பார்வையாளராக இருக்கப் போவதில்லையென்ற செய்தியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு அனுப்ப விரும்பியுள்ளார். இப்போதும் கூட, புலிகளுக்கெதிரான அரசாங்கத்தின் சிறந்த ஆயுதம் பொறுமையே. இலங்கை மக்கள் - தமிழர்களும் சிங்களவர்களும் - யுத்தமொன்றினை விரும்பவில்லை. ஆனால், தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் என்ற நிலை தொடர்ந்தால், யுத்தமே அதன் வெளிப்பாடாகும். யுத்த நிறுத்த ஒப்பந்தம், பூரணமாகக் கடைப்பிடிக்கப்படுமென்று அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியிருப்பதானது, இனியும் யுத்தம் தவிர்க்கப்படலாமென்ற சிறிது நம்பிக்கையைத் தருகிறது. ஆனால், சமாதான வழிமுறை தொடர்ந்திருக்குமா? என்பதும் அது முன்னேறிச் செல்லுமா? என்பதும் புலிகள் அடுத்து என்ன நடவடிக்கைக்குத் திட்டமிடுகிறார்கள் என்பதிலும் இதற்கு ஏதாவது சாத்தியமான முறையில் சர்வதேச சமூகத்தினால் செல்வாக்குச் செலுத்த முடியுமா என்பதிலுமே பெருமளவு தங்கியுள்ளது.

***Call Girls and Call Boys of Fourth Estate***

**என்ற தலைப்பில் 'த ஐலன்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகை கடந்த 29ஆம் திகதி முதற் பக்கத்தில் வெளியிட்ட ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. யுத்தத்தால் சீரழிந்திருக்கும் இந்த நாட்டில் யுத்தப் பீதியை ஏற்படுத்த எப்படிச் சில வெளிநாட்டு நிருபர்கள் செயற்படுகிறார்கள் என்பதை இந்த விடயதானம் வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது.**

## வெளிநாட்டு நிருபர்களின் கடைகெட்ட கைங்கரியம்!

**வயது** முதிர்ந்த யானையொன்று, ஒரு நாள் வித்தியாசமான சத்தமொன்றினைக் கேட்டுத் தன் இரு மகன்களையும் அழைத்து, "என்ன நடக்கிறதென்று போய்ப் பாருங்கள்" என்று கூறியது. இரு யானைக் குட்டிகளும் சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்று பார்த்தபோது, இரு வேட்டைக்காரர்கள் பற்றைக் கூடாக நுழைந்து செல்வதைக் கண்டன. அவை தமது தந்தையிடம் ஓடி வந்து, மூச்சிறைத்தபடி, அப்பா, நாற்பது வேட்டைக்காரர்கள் வருகிறார்கள்" என்று ஒன்று கூற, மற்றது அதனை ஆமோதித்தது. இதனையடுத்து யானைக் குடும்பம், பாதுகாப்புத் தேடி ஓட்டம் பிடித்தது.

இப்போது கேள்வி என்னவென்றால், உண்மையில் இரண்டே இரண்டு வேட்டைக்காரர்களைக் கண்ட யானைக் குட்டி, நாற்பது வேட்டைக்காரர்களென்று ஏன் கூறியது?

நல்லது. நீங்கள் ஊகித்துக் கொண்டிருப்பதை நாம் விரும்பவில்லை. பதில் இதுதான்: அந்த யானைக்குட்டி ஒரு படுபொய்யன். அப்படியானால் மற்ற யானைக் குட்டி ஏன் அந்தப் பொய்யைத் திரும்பவும் கூறியது? மற்றக் குட்டிக்குக் கணக்குச் சரிவரத் தெரியாது.

முதலாவது யானைக் குட்டியைப் புலிகளின் பிரசாரகர்களென்றும் இரண்டாவது யானைக்குட்டியை வெளிநாட்டுப் பத்திரிகைகளென்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் சம்பூரில் புலிகளின் இலக்குகள் மீது நடத்தப்பட்ட வான்பரப்புத் தாக்குதல்கள் பற்றிச் சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் பற்றிச் சிறந்த பார்வையைச் செலுத்த முடியும். நாற்பதாயிரம் மக்கள் தப்பியோட்டம் பிடிக்கின்றனரென்று புலிகள் இயக்கம் கூறியதை, கொழும்பிலுள்ள சில வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அப்படியே முற்றுமுழுதாக விழுங்கிக் கொண்டனர். அவர்கள் உடனடியாகவே இந்த 'கோயபல்ஸ்' பாணியிலான பொய்யை உலகெங்கும் பரப்பினர் சம்பூர், 16,000 பேரையே மக்கட் தொகையாகக் கொண்டது என்பதைக் கூட அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் இந்தத் தொகையைக் கணக்கிலெடுக்காது தாம் செய்யாத தவறுகளுக்காகப், பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த அந்த மக்களுக்கு எவ்வித தாமதமுமின்றி எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். யுத்தம் நாசகாரமானது; அது தவிர்க்கப்பட வேண்டும். எனவே தான் அரசின் மீது யுத்தத்தை அழுத்தி நடத்த முனையும் புலிகள் இயக்கத்தை, அதன் பாதையில் பயணிக்காமல் தடுத்து நிறுத்த வேண்டும்.

சுனாமிப் பேரழிவுக்குப் பின்னர், முழு உலகமுமே எமது உதவிக்கு விரைந்தபோது, புலி இயக்க அனுதாபியொருவரைப் பேட்டி காணும் துடுக்குத்தனம், பி.பி.ஸி.க்கு ஏற்பட்டது. கொலைகார அலைகள் தமது பாதையை நோக்கிப் பாய்ந்து வந்தபோது, இலங்கை விமானப் படையின் விமானங்கள், தமது பிரதேசத்தின் மீது குண்டுகளை வீசுவதாகத் தான் முதலில் நினைத்தாரென்று அவர் கூறினார். "அவர்கள் வழமையாகத் தேவாலயங்கள் மீதும் பாடசாலைகள் மீதும் குண்டுகள் வீசுவது உங்களுக்குத் தெரியும் தானே" என்று, காரசாரமான பேட்டி என்றெல்லாம் தம்பட்டமடித்துக் கொள்ளும் பி.பி.ஸி.யின் ஊமை போலிருந்த பேட்டியாளருக்கு அவர் கூறினார். அலைகளையும் குண்டு வீச்சுகளையும் தெரிந்து கொண்ட ஒருவரைப் பேட்டி காண பி.பி.ஸி.யினால் முடியவில்லை என்பதையே யாரும் உணர்ந்து கொண்டிருப்பார்.

இவ்வாறான பொய்கள், அரைவாசிப் பொய்கள், அப்பட்டமான பொய்களை ஒலிபரப்பியமைக்காக பி.பி.ஸி. மீது முற்றுமுழுதாக நாம் குற்றங் காணவில்லை. தன்னை வீர தீரனாக நினைத்துக் கொண்டு, பஸ் ஓட்டிய சாரதியொருவர், பாதசாரியொருவர் மீது மோதியமைக்காகப் பஸ்ஸுக்குத் தீ வைக்கும் செயலைப் போன்றதே இதுவாகும். அகங்காரத்துடன் மோசமான மனோநிலையுடனும் செயற்படும் அதன் நிருபர்களையும் நிகழ்ச்சிப் பணிப்பாளர்களையுமே இதற்காகக் குற்றஞ்சாட்டுகிறோம். அத்துடன் இத்தகைய பொறுப்பற்ற துஷ்டர்கள், மோதலால் சிதைவுற்ற இந்த நாட்டையே பற்றியெரிய வைக்கக் கூடியதும் உணர்ச்சிகரமானதுமான விடயங்கள் குறித்து செய்திகளை அனுப்ப ஏன் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது ஆச்சரியமானது.

அத்துடன் இந்தத் திறமைசாலிகள், இலங்கை ஊடகவியலாளர்களுக்குப் பொறுப்பு வாய்ந்த ஊடகவியல் பற்றி போதிக்க முனைகிறார்கள். இவர்களிடமிருந்து ஊடகம் பற்றிக் கற்றுக் கொள்வதிலும் பார்க்க, மோசடிக்காரனிடமிருந்து நேர்மையைப் பற்றியோ அல்லது விபசாரியிடமிருந்து கற்பைப் பற்றியோ கற்றுக்கொள்ளலாம்.

இந்தப் பிரசாரர்களில் சிலர், தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ளதோடு, இந்த நாட்டிலுள்ள சில அரசியல் தலைவர்களின் பிரசாரர்களாகவும் செயற்படுகின்றனர். அவர்களுக்கு விருப்பமான தலைவர்கள் அதிகாரத்துக்கு வராவிட்டால், வெற்றிபெற்ற ஏனையவர்களை அவர்கள் நிந்திப்பதோடு, இலங்கையை மோசமான நாடாகவும் வர்ணம் தீட்டிக் காட்டுகின்றார்கள். இவர்களுக்கு மத்தியில், உண்மையான தொழில்சார் ஊடகவியலாளர்களும் இருக்கிறார்கள். தமது தொழிலுக்குப் பெருமை சேர்த்த இந்த மதிப்பார்ந்த பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிரம் தாழ்த்தி, மரியாதை செலுத்துகிறோம். ஆனால், ஊடகவியலாளர்கள் சிலரின் அருவருக்கத்தக்க செயற்பாடுகள், இத் துறை சார்ந்த அனைவரினதும் கௌரவத்தை மழுங் கடிக்கிறது. ஒரு குடம் பாலைக் கெட்டுப் போகச் செய்வதற்கு கொஞ்சச் சாணம் போதும்.

பேராசை கொண்டு, வெளிப்படையாகவே வெளிநாட்டு நிருபர்களென்ற பிடிக்குள் இயங்கும் எல்லாம் தெரிந்த இவர்கள், மனிதர்களினதும் மிருகங்களினதும் சடலங்களைத் தேடியலையும் மாமிசமுண்ணும் காகங்களை விடச் சிறந்தவர்களல்லர். இவர்கள் தாம் பணிபுரியும் நாட்டுக்குச் சாதகமான எவற்றையும் கண்டு கொள்வதில்லை. அவர்கள் தாம் இந்த நாட்டில் ஆற்ற வந்த பணியைத் தவறாகப் புரிந்து கொண்டு, புலிகளைச் சிங்கமாக்கி, மோதலை மோசமாக்குகிறார்கள். கறுப்புப் புலிகள் பற்றிய விவரண நிகழ்ச்சியொன்றினை பி.பி.ஸி. ஒரு தடவை தயாரித்தது. ஈவிரக்கமற்ற கொலைகாரர்களை, வீரர்களாகக் காட்டுவதற்கு மட்டுமே இந்த விவரணச் சித்திரம் உதவியது. ஆனால், அதில் ஆகக் குறைந்தது சின் பெய்ன் தலைவர்களின் முகங்களைக் கூடக் காட்டவுமில்லை அல்லது ஐரிஷ் குடியரவு இராணுவம், தனது நிலைப்பாட்டைத் தளர்த்திக் கொள்ளும்வரை அவர்களின் கருத்துக்களை ஒலிபரப்பவுமில்லை.

சீ.என்.என். தொலைக்காட்சியின் சிறுபிள்ளைத்தனம் கொண்ட நிருபரொருவர், ஒரு தடவை சிறுவர் போராளிகள் பற்றிய தனது நிகழ்ச்சியொன்றில், புலிகள் இயக்கம் மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டுமே சிறுவர்களைப் போர் வீரர்களாகச் சேர்த்துக் கொள்கின்றனவென்று கூறியதன் மூலம், அந்த நிகழ்ச்சியைச் சமநிலைப்படுத்த முனைந்தார்.

சில வெளிநாட்டு நிருபர்களின் ஊடகவியல் பாணி, அவரவர்களது சொந்த நாட்டு வெளிவிவகார கொள்கையின் விஸ்தரிப்பாவென்று ஆச்சரியப்பட வைக்கிறது. உதாரணத்துக்குப், புலிகளின் சர்வதேச பயங்கரவாத வலைப் பின்னல், லண்டனில் வாழும் ஒரு பிரிட்டிஷ்

**<u>உன்னத இலக்கை அடைவதற்கான முயற்சிகளில் எந்தத் தடையும் இருக்கக் கூடாது. ஆனால், கட்டுப் பாடில்லாத அதிகாரத்தைப் போன்று, பொறுப்பற்ற சுதந்திர மென்பது, பேரழிவென்றே அர்த்தப்படும். எனவே, உலகின் பழமை வாய்ந்த தொழிலின் அதே மட்டத்துக்கு, உன்னத மான ஊடகவியல் தொழிலைக் கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது.</u>**

பிரஜையால் ஒருங்கிணைக்கப்படுகிறது - அன்ரன் பாலசிங்கம் என்பது அவரது பெயர். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது செயற்பாடுகள் குறித்து ஏதோ சிறிது நல்லதாகச் செய்கிறது அல்லது எதுவுமே செய்யாமல் விட்டு விடுகிறது. அத்துடன், புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள பிரிட்டிஷ் மண்ணில் பயங்கரவாத நிகழ்வுக் கொண்டாட்டங்களை நடத்தவும் அனுமதியளிக்கிறது. சுனாமிப் பேரழிவின்போது பிரிட்டிஷ் கடற்படையினர் இலங்கையின் கிழக்குக் கரைக்கு அப்பால் நிலை கொண்டிருந்த தமது யுத்தக் கப்பலொன்றுக்கு புலி இயக்கத் தலைவரொருவரை அழைத்துச் சென்றனர். அவர் புலி இயக்கத் தலைவரென்று தமக்குத் தெரியாதென்று பின்னர் பிரிட்டிஷார் கூறினர். பாவம்! பிரிட்டிஷ் புலனாய்வு இவ்வளவுதான். பொதுநலவாய தேசமொன்றினைப் பிளவுபடுத்தும், அதே பிரசார இயக்கத்தையொத்த அதே கொள்கையையே பி.பி.ஸி. பின்பற்றுவது போலத் தெரிகிறது.

உலக பத்திரிகைச் சுதந்திர தினம் பெரும் எடுப்புடன் கொழும்பில் கொண்டாடப்படுகிறது. உலகெங்கிலுமுள்ள பத்திரிகைகளுக்கு அபரிமிதமான சுதந்திரம் தேவை. இந்த உன்னத இலக்கை அடைவதற்கான முயற்சிகளில் எந்தத் தடையும் இருக்கக் கூடாது. ஆனால், கட்டுப் பாடில்லாத அதிகாரத்தைப் போன்று, பொறுப்பற்ற சுதந்திர மென்பது, பேரழிவென்றே அர்த்தப்படும். எனவே, உலகின் பழமை வாய்ந்த தொழிலின் அதே மட்டத்துக்கு, உன்னத மான ஊடகவியல் தொழிலைக் கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது. எனவே தொலைபேசி மூலம் விபசாரத்துக்கு ஒழுங்கு செய்யும் பெண்கள், ஆண்களைப் போன்று பத்திரிகைத் துறையிலுள்ள இருபாலாரும் - எந்த நிறத் தோலை உடையவர்களாயிருந்தாலும் விபசார மட்டத்துக்கு புனிதமான பத்திரிகைத் துறையைத் தரம் தாழ்த்த இடமளிக்கக் கூடாது. எந்தளவுக்கு விரைவாக அதனைச் செய்கிறோமோ, அந்தளவுக்கு அது உண்மையான ஊடகவியலாளர்களுக்கு நன்மை பயக்கும்.

எவர் மீதும் குரோதமோ தீய எண்ணமோ கிடையாது!

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**அன்றைய** சினிமாக்களும், நாடகங்களும் அத்தகைய ஆக்கமும் ஆற்றலும் பெற்றவையாகத் துவங்கி, தமிழ் மண்ணின் பாரம்பரியத்தை சாற்றிக் கொண்டிருந்தன.

காலம் தமிழ் சினிமாவின் முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்திவிட்டிருப்பதை நாம் கழிவிரக்கத்தோடு ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். சாதனங்கள் பெருகிய அளவு சாதனைகள் பெருகவில்லை



கலையம்சத்தை முன்னிருத்தி சிருஷ்டிக்கப்பட்ட சினிமாக்கள், இன்று விலையம்சத்தை மட்டுமே வித்தகமாகக் கொண்டு சுருள் சுருளாக சுடப்படுகின்றன. மாற்றங்களின் விளைவு, ஏமாற்றங்கள் எனில் - புதுமையைக் காட்டிலும் பழமையே மேலென, ஒரு சாரார் புலம்புவதில் ஒருவகை நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

அனைத்து அனர்த்தங்களுக்கும் காரணம், தமிழ் சினிமா அயல்நாட்டுச் சட்டையை அணிந்து கொள்ள ஆரம்பித்தது தான்.

'பூம்பாவை' படம்தான் கே.ஆர்.ஆர். அவர்களின் படவுலகப் பிரவேசத்திற்குப் பிள்ளையார் சுழி. அவரது நடிப்பைச் சுமந்து இறுதியாக வெளி வந்த படம் - என் நினைவாற்றல் சரியாக இருக்குமாயின் - 'நம் நாடு' என்பதுதான். இந்த இடைப்பட்ட காலங்களில் திரு.கே.ஆர். ராமசாமி எத்துணையோ நிழற்படங்களில் தனது ஆற்றல் மிகு நடிப்பையும், குயிலின் கூவல் போல் அமைந்த குரலினிமையையும் பதிவு செய்து விட்டுத்தான் போயிருக்கிறார். படத்தில் வந்தவர், படமாகப் போனது மெத்த விசனத்துக்குரியது.

எழுபதாம் ஆண்டுவாக்கில் கே.ஆர்.ஆர். என் வீட்டிற்கு வந்த கதையைச் சொல்லுகிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்கள் திரு.கே.ஆர்.ராமசாமியையும். திரு.இரா.செழியனையும் பாகஸ்தர்களாக்கி, அவர்களுக்காக ஒரு படம் செய்து தரப் போவதாக என்னிடம் பிரஸ்தாபித்திருந்தார். ஏற்கனவே எனக்கு கே.ஆர்.ராமசாமியுடன் பரிச்சயம் இருந்த போதும், நான் எம்.ஜி.ஆரைப் பார்க்கச் சென்றபோதெல்லாம் அவரும் அங்கிருந்ததால், பரிச்சயம் என்பது பரிபூரண நட்பாகப் பரிணமிக்க நேர்ந்தது.

வாஹினி ஸ்டுடியோவில் மர நிழலில் அமர்ந்து நானும் அவரும் பல்வேறு விஷயங்களைப் பேச்சில் பரிமாறிக் கொண்ட நாட்கள் பல உண்டு.

தனக்காக எம்.ஜி.ஆர். நடித்துத் தர இருக்கும் பட விஷயமாகத்தான் கே.ஆர்.ராமசாமி அவர்கள், இசையமைப்பாளர் என் அன்புக்குரிய அண்ணன் திரு.எஸ்.எம்.சுப்பையா நாயுடு அவர்களைப் பார்த்துவிட்டு, என்னைப் பார்க்க வீட்டிற்கு வந்திருந்தார்.

தமிழில் 'ஒரு சொல் வெல்லும்; ஒரு சொல் கொல்லும்' என்பது பற்றி - நானறிந்த விஷயங்களை அவரிடம் எடுத்துச் சொன்னேன்.

திரு.எம்.கே.டி. பாகவதர், 'வால்மீகி' படத்தில் - 'நான் ஒரு கைதி' என்று வசனம் பேசிய மறுநாளே, மெய்யாகவே கைது செய்யப்பட்டார் என்றெல்லாம் நான் கேள்விப்பட்டதை அவரிடம் விளக்கிவிட்டு, - கே.ஆர்.ஆர். அவர்கள் 'செந்தாமரை' படத்தில் பாடிய ஒரு பாடலைக் குறிப்பிட்டு, அது 'அறச் சொல்லாக' அமைந்து விட்டதை அவரிடம் மிக மிக ஆதங்கத்தோடு சொன்னேன்...

மேற்சொன்ன படத்தில் நண்பர் கேஆர்.ராமசாமி,

*'பாட மாட்டேன்! - இனிமேல் பா மாட்டேன்'*

- என்று ஒரு பாடலை பாடியிருந்தார்.

அதன் பிறகு தான் வாழ்நாள் முழுதும் நடிப்பிசைப் புலவர் எந்தப் படத்திலும் பாடவில்லை.

(தொடரும்.......)




---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




**இரண்டாயிரம்** ஆண்டுகளுக்கு முன்பிருந்தேகூட இந்தச் சிரமத்தை சமாளிப்பதற்கு அரசியல் தலைவர்கள் பல நூதன வழிகளைக் கையாண்டார்கள். ரோமானியத் தலைவர் ஜூலியஸ் சீசர் கண்டுபிடித்த வழி சற்று வேடிக்கையானது.

அவருடைய அரண்மனையில் அடிமைகள் நிறையப்பேர் இருந்தார்கள். அடிமைகள் மூலமாக செய்தியனுப்புவதை சீசர் ஒரு வழியாக வைத்திருந்தார். செய்தி கொண்டு செல்லும் அடிமையின் தலை சுத்தமாக மொட்டையடிக்கப்படும். அந்தத் தலையின் மீது அழியாத மையினால் செய்திகளை எழுதிவிடுவார்கள். சில தினங்களிலேயே முடி வளர்ந்து எழுதப்பட்ட எழுத்துக்களை மறைத்துவிடும். பிறகு செய்தி சேரவேண்டிய இடத்திற்கு அந்த அடிமை அனுப்பி வைக்கப்படுவான். அங்கு சென்றவுடன் அவனுடைய தலையை மறுபடியும் மொட்டையடித்து எழுதப்பட்ட விஷயங்களைத் தெரிந்துகொண்டு விடுவார்கள்.

ரகசிய செய்திகளை அனுப்புவதற்கு சீசர் இன்னொரு வழியினையும் கையாண்டார். இது தந்திரமான முறை. எழுதப்பட்ட செய்தி இடையில் எவர் கையில் கிடைத்தாலும் அவர்கள் அதிலிலுள்ள விஷயத்தைப் புரிந்துகொள்ள முடியாது. செய்திக்குரியவர்கள் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக CAT என்கிற சொல்லை CAT என்று எழுதமாட்டார்கள். C என்கிற எழுத்துக்கு அடுத்த எழுத்தான D யை எழுதுவார்கள். A என்கிற எழுத்துக்கு அடுத்த எழுத்தான B யை எழுதுவார்கள். T என்கிற எழுத்துக்கு அடுத்த எழுத்தான U யை எழுதுவார்கள். CAT என்கிற சொல்லை எழுதவேண்டுமானால் DBU என்று எழுதுவார்கள். படிக்கிறவர்களுக்கும் ஒன்றும் புரியாது. ஆனால் எழுத்துக்களின் முதல் எழுத்தைப் போட்டுப் படிக்க வேண்டும் என்கிற குறிப்பு செய்தியைப் பெறுகின்றவர்களுக்குத் தெரியும். அவர்கள் வார்த்தையைச் சரியாக எழுதி புரிந்துகொண்டு விடுவார்கள்.

சீசர் காலத்திலேயே இம்மாதிரியான முறைகள் செய்தியனுப்ப பயன்பட்டு வந்திருக்கின்றன.

அலெக்ஸாண்டர் ரகசிய செய்திகளை அனுப்ப கையாண்ட முறை சற்று மாறுதலானது. அவர் அனுப்பும் லிகிதங்களின் வரிகளை நேராகப் படித்தால் அர்த்தம் விளங்காது. அதாவது இடது புறமிருந்து வலதுபுறமாகப் படித்தால் விளங்காது. வலதுபுறமிருந்து இடதுபுறமாகப் படித்தால் விளங்கும்.

சாக்லேட்டுக்குள் செய்திகளை வைத்து அனுப்புவதும் எல்லைக்கப்பால் மறைந்திருக்கும் ஒற்றர்களுக்கு இரவு நேரங்களில் அம்புகளைச் செலுத்தி செய்திகளை அனுப்புவதும் பழங்காலத்தில் பழக்கத்தில் இருந்திருக்கிறது.

சவப்பெட்டிகளில் ஒற்றர்கள் செய்திகளை அனுப்பியது ஒரு சுவையான விஷயம். பெல்ஜியத்திற்கும் ஜெர்மனிக்குமிடையே போர் நடந்து கொண்டிருந்த சமயம் அது. ஜெர்மன் எல்லைக் காவல் அதிகாரியிடம் பெல்ஜியத்தைச் சேர்ந்தவர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். பெல்ஜியத்தில் இறந்துபோன ஒரு மனிதனின் சொந்த ஊர் ஜெர்மன் எல்லையை ஒட்டி அமைந்திருந்த 'போர்விடக்' என்கிற கிராமம் என்றும், இறந்த பிறகு தன்னுடைய உடலை தன்னுடைய சொந்த ஊரான அங்கே அடக்கம் செய்யவேண்டுமென அவர் விரும்பியதாகவும், ஆகவே அதற்கு அனுமதியளிக்க வேண்டுமெனவும் ஜெர்மன் அதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

# பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கிய கனவுக் கன்னி மர்லின் மன்றோவின் தற்கொலை

**உலகப்** புகழ் பெற்ற கவர்ச்சி நடிகை மர்லின் மன்றோ, அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.



மர்லின் மன்றோ

## கனவுக் கன்னி

'மர்லின் மன்றோ' உலகப் புகழ் பெற்ற ஆலிவுட் நடிகை ஏராளமான ஆங்கிலப் படங்களில் நடித்தவர்.

மர்லின் மன்றோவின் நடை அழகு மிகவும் புகழ் பெற்றது. உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான ரசிகர்களின் 'கனவுக் கன்னி'யாக விளங்கி வந்தார்.

## சிகிச்சை

ஆங்கிலப் பட உலக புகழின் உச்சிக்குச் சென்று கொண்டிருந்த மர்லின் மன்றோவுக்கு திடீரென மனநிலை பாதிக்கப்பட்டது. பேய் பிடித்தவர் போல இருந்து வந்தார்.

பெரிய டாக்டர்கள் சிகிச்சை அளித்து, அவரை பழைய நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு தொடர்ந்து சினிமாவில் நடித்தார்.

## கடைசி சினிமாப் படம்

மர்லின் மன்றோ கடைசியாக நடித்துக்கொண்டு இருந்த படத்தின் பெயர் 'நான் கொடுப்பதற்கு இன்னும் சில உண்டு' என்பதாகும். அந்த படத்தில்தான் குளிக்கும் காட்சியில் அவர் நிர்வாணமாக நடித்தார். ஆனால் படப்பிடிப்புக்கு மர்லின் மன்றோ ஒழுங்காக வருவது இல்லை என்று கூறி அவரை படத்தில் இருந்து நீக்கிவிட்டார்கள்.

சரிவர நடிக்கத் தவறியதற்காக ஒரு கோடி ரூபாய் நஷ்டஈடு தரவேண்டும் என்று மர்லின் மன்றோ மீது வழக்குத் தொடரப்பட்டது.

அதுமுதல் மர்லின் மன்றோ உற்சாகம் குன்றி இருந்தார். ஆனால் அதன் பிறகு அவரையே தொடர்ந்து நடிக்க வைக்க ஏற்பாடு நடந்தது. மர்லின் மன்றோவுக்கும், படத் தயாரிப்பாளருக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது. மீண்டும் படப்பிடிப்பை தொடங்க இருந்தார்கள்.



மர்லின் மன்றோ

## தற்கொலை

இந்த நிலையில் 5.8.1962 இல் மர்லின் மன்றோ தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி, உலகம் முழுவதும் இருந்த சினிமா ரசிகர்களை அதிர்ச்சி அடையச் செய்தது.மர்லின் மன்றோ திராவகம் (அசிட்) குடித்து தற்கொலை செய்து கொண்டதாக முதலில் செய்தி பரவியது. அவரது உடலை டாக்டர்கள் பரிசோதித்துவிட்டு, அளவுக்கு மீறி தூக்க மாத்திரை சாப்பிட்டதால் மரணம் ஏற்பட்டதாக அறிவித்தனர்.

## மயங்கிக் கிடந்தார்

அமெரிக்காவில் சினிமா நகரமான ஆலிவுட்டில் ஒரு மாளிகையில் மர்லின் மன்றோ வசித்து வந்தார். அதிகாலை 3 மணிக்கு மர்லின் மன்றோ கட்டிலில் மயங்கிக் கிடந்ததை வீட்டு வேலைக்காரர் பார்த்து விட்டு டாக்டர்களுக்கு தகவல் கொடுத்தார். டாக்டர்கள் விரைந்து சென்றார்கள். மன்றோவின் படுக்கை அறைக் கதவு உள்பக்கம் தாளிடப்பட்டு இருந்தது. டாக்டர்கள் கதவை உடைத்து உள்ளே நுழைந்தார்கள்.

## உயிர் இல்லை

ஒரு கையில் டெலிபோனுடன் மன்றோ படுக்கையில் கிடந்தார். உடலில் ஆடை எதுவும் இல்லாமல் நிர்வாணமாகக் கிடந்தார். டாக்டர்கள் சோதித்துப் பார்த்ததில் அவர் இறந்து வெகு நேரம் ஆகி இருப்பது தெரிந்தது.

அளவுக்கு மீறி தூக்க மாத்திரை சாப்பிட்டதால் மரணம் அடைந்ததாக டாக்டர்கள் கூறினார்கள்.

## மர்மம் என்ன?

தற்கொலை செய்து கொண்ட மர்லின் மன்றோ, கடிதம் எதுவும் எழுதி வைக்கவில்லை. அவர் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பது புரியாத புதிராக இருந்தது.

இதுபற்றி விசாரணை நடத்தி மர்மத்தை கண்டுபிடிக்க ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டி மர்லின் மன்றோவின் கடைசி கால வாழ்க்கை பற்றி துருவி ஆராய்ந்தது. இருப்பினும் கிணற்றில் போடப்பட்ட கல் போல அது அமிழ்ந்து போனது.

## அதிர்ச்சி

தற்கொலை செய்து கொண்ட மர்லின் மன்றோவுக்கு வயது 36. சினிமா உலகத்திலேயே அதிக பணம் சம்பாதித்த நடிகையாக திகழ்ந்தார்.

மர்லின் மன்றோவின் மறைவு ரசிகர்களுக்கு மட்டும் அல்ல, பிரபல நடிகைகளுக்கும் கூட பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிரபல ஆங்கில நடிகை சோபியா லாரன் இந்தச் செய்தியைக் கேட்டு கண்ணீர் விட்டு அழுதார். மற்றொரு ஆங்கில நடிகையான ஜீனா லோலாபிரி கிடா கூறும்போது, 'இது பெரிய அதிர்ச்சியான செய்தி. நான் இதற்காக மிகவும் வருந்துகிறேன். அவர் (மர்லின் மன்றோ) மிகவும் நல்லவர்' என்று சொன்னார்.

அமெரிக்காவில் எங்கு திரும்பினாலும் மர்லின் மன்றோ பற்றிய பேச்சாகவே இருந்தது.

மரணத்தின்போது கோடீஸ்வரியாக இருந்த மர்லின் மன்றோவின் இளம் பருவ வாழ்க்கை, மிகவும் வறுமையும், சோதனைகளும், துன்பங்களும் நிறைந்ததாவே இருந்தது.



மர்லின் மன்றோவின் மாளிகையும் அவர் பாவித்த காரும்

# பூலான் தேவியின் மறுபக்கம்



**கொள்ளைக்காரி** பூலான்தேவி, 11 ஆண்டுகள் சிறையில் இருந்தபின் விடுதலை செய்யப்பட்டாள்.

### சரணாகதி

பல கொலை - கொள்ளைகளில் ஈடுபட்ட பூலான்தேவி, 1983ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி மத்தியபிரதேசத்தில் அப்போதைய முதல் மந்திரி அர்ஜன்சிங் முன்னிலையில் சரண் அடைந்தாள்.

முதலில் குவாலியர் ஜெயிலில் பூலான்தேவி அடைக்கப்பட்டாள். பின்னர் புற்று நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக டெல்லி திகார் ஜெயிலுக்கு மாற்றப்பட்டாள்.



### சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

இந்த சூழ்நிலையில் பூலான் தேவியை பரோலில் விடுதலை செய்ய சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் 18.02.94 அன்று உத்தரவிட்டனர்.

விடுதலையாகும் பூலான்தேவிக்குப் பலத்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டு இருந்தனர்.

### வழக்கு வாபஸ்

11 ஆண்டுகளுக்கு மேலாக ஜெயில் தண்டனை அனுபவித்தும் வழக்கு விசாரணையில் தாமதம் ஏற்பட்டு வந்ததால் தன்னை விடுதலை செய்யவேண்டும் என்று பூலான்தேவி சுப்ரீம் கோர்ட்டில் முறையீடு செய்திருந்தாள்.

இதற்கிடையில் உத்தரப்பிரதேசத்தில் பதவி ஏற்ற முலாயம்சிங் யாதவ் தலைமையிலான கூட்டணி அரசுக்கு எதிரான வழக்குகள் எதுவும் நிலுவையில் இல்லை.

### விடுதலை

மெட்ரோ பாலிடன் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டாள். மாஜிஸ்திரேட் ஓ.பி.காகனே ரூ. 50 ஆயிரத்துக்கு சொந்த ஜாமீனில் பூலான்தேவியை விடுதலை செய்தார்.

20 நிமிடத்தில் கோர்ட் நடவடிக்கைகள் முடிந்து 11.10 மணிக்கு பூலான்தேவி மலர்ந்த முகத்துடன் கோர்ட்டை விட்டு வெளியே வந்தாள்.

### வாழ்த்துக் கோஷங்கள்

11 ஆண்டு கால சிறை வாசத்துக்குப் பின் 'சுதந்திரப் பறவை'யாக வெளியே வந்த பூலான்தேவியைப் பார்த்து கோர்ட்டுக்கு வெளியே திரண்டு இருந்த நூற்றுக்கணக்கானோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சிலர் அவளை பார்த்து வாழ்த்து கோஷங்கள் எழுப்பினர்.

வழக்கமாக கொள்ளைக்காரிகள் அணியும் உடைகளுக்கு மாறாக, சேலை அணிந்து புதிய தோற்றத்துடன் காணப்பட்ட பூலான்தேவி கூட்டத்தினரை நோக்கி திரும்பி, விடுதலை அடைந்ததில் மகிழ்ச்சி அடைவதாக உரத்த குரலில் கூறினாள்.

### தாமதம்

பின்னர் அங்கிருந்து வடக்கு டெல்லியில் பழைய குப்தா காலனியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் பூலான்தேவி அழைத்துச் செல்லப்பட்டாள்.

பூலான்தேவி சரண் அடைந்த போது, 8 ஆண்டுகளில் விடுதலை செய்து விடுவதாக அரசு உறுதியளித்து இருந்தது. ஆனால், 3 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டு, 11 ஆண்டு சிறை வாசத்திற்குப் பின் விடுதலை செய்யப்பட்டாள். அப்போது அவளுக்கு வயது 37.



### சம்பந்தம் இல்லை

கான்பூர் அருகே தாகூர் இனத்தைச் சேர்ந்த 22 பேர் படுகொலை செய்யப்பட்டதற்கும், தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று பூலான் தேவி மறுத்தாள்.

இந்த பயங்கர படுகொலை நடந்தபோது தான் பெட்வா நதிக்கரையில் இருந்ததாகவும் அவள் கூறினாள்.

பூலான்தேவி கோர்ட்டுக்கு வந்தபோது விதிமுறைகளுக்கு மாறாக வெளிநாட்டு நிருபர்களும் வந்திருந்து கோர்ட் நடவடிக்கைகள் பற்றி குறிப்பெடுத்துக் கொண்டு இருந்தனர். கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக,



கோர்ட் கதவுகளைப் பொலிஸார் மூடி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

### சிகிச்சை

கோர்ட்டில் இருந்து வெளியே வந்த பூலான்தேவி "எனக்கு தற்போது உடல் நிலை சரியில்லை சதை வளர்ச்சியால் ஏற்பட்ட கட்டிக்கு சிகிச்சை பெறப் போகிறேன்" என்று கூறினாள்.

ஆனால் அவளது உறவினர் ஹர்பூர்சிங் என்பவர் கூறும்போது, "பூலான்தேவி விடுதலைக்குக் காரணமான முலாயங்சிங் யாதவின் சமாஜ்வாடி ஜனதா கட்சியில் அவரை சேர்ப்பதற்கு முயற்சி எடுப்பேன்" என்று தெரிவித்தார்.

பூலான்தேவி அரசியலில் குதிக்கப் போவதாக பரவலாக பேசப்பட்டு வந்தது.

இதுகுறித்து பூலான்தேவியை நிருபர்கள் பேட்டி கண்டனர். "அரசியலில் ஈடுபடமாட்டேன்" என்று அவள் மறுத்தாள்.

"நான் பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பணியாபற்றப் போகிறேன். இதற்காக அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை" என்று பூலான்தேவி கூறினாள்.

### திருமணம் செய்ய விருப்பமா?

37 வயதான பூலான்தேவியைத் திருமணம் செய்து கொள்ள அவளது இனத்தைச் சேர்ந்த பலர் முன்வந்தனர். இது பற்றி பூலான்தேவியிடம் கேட்டபோது, திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லை என்றாள்.

"13 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் எங்கு போனார்கள்" என்று அவள் திருப்பிக் கேட்டாள்.

(பக்கம் புரளும்)

# 2ஆம் உலகப் போர்

## 13

**அன்று** மாலை தன் தளபதிகள், அமைச்சர்கள் அந்தரங்க உதவியாளர்கள் கூட்டத்தை ஹிட்லர் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது: "ஜெர்மனி



ஹிட்லர்

நாட்டு மக்கள் எப்போதும் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கொஞ்சமும் கிடையாது. சமாதானத்தையே விரும்புகிறேன். போருக்குக் காரணம் நானல்ல. யூதர்கள்தான். ஜெர்மனி நாட்டு மக்களின் வீரத்திற்கும், தேசபக்திக்கும் இந்தப் பெயர் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. இன்று இல்லாவிட்டாலும் நாளை ஜெர்மனி வெற்றிபெறும். இந்தப் போரில் நான் இறக்க நேர்ந்தால், மகிழ்ச்சியுடன் மரணத்தைத் தழுவுவேன். ஒரு போதும் எதிரிகளின் கையில் சிக்கி அவமானம் அடைய மாட்டேன். இது உறுதி. இவ்வாறு ஹிட்லர் கூறினார். பின்னர் நாட்டுத் தலைவர் என்ற முறையில் மக்களுக்கு இறுதிச் சாசனம் ஒன்றை எழுதினார். அந்தச் சாசனம் வருமாறு: முதல் உலகப்போரில் ஒரு சாதாரணப்போர் வீரனாக கலந்து கொண்டவன் நான். அது நடந்து 30 ஆண்டுகள் ஓடிவிட்டன.

ஜெர்மனி நாட்டின் மீதும், மக்கள் மீதும் நான் கொண்ட பற்றும், பாசமும்தான் ஆயுதப் போர் நடந்த 20 ஆண்டுகளாக என்னைத் தூண்டியது. முதலாம் உலகப்போருக்குப் பிறகு இப்படி இரண்டாவது உலகப்போர் மூளும் என்று நான் சற்றும் நினைக்கவில்லை. எப்படியோ போர் மூண்டுவிட்டது. இந்தப் போரினால் நம் நாடு சந்தித்த பயங்கர விளைவுகள், நாசமாக்கப்பட்ட பிரமாண்டமான மாளிகைகள், தரைமட்டமாக்கப்பட்ட கலையம்சமிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் நம் மீது உலக நாடுகள் நடத்திய கோரத் தாக்குதலை நம்முடைய பிற்கால சந்ததியினருக்கு உணர்த்திக்கொண்டு இருக்கும். இந்தப்போருக்குக் காரணமானவர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஒவ்வொரு ஜெர்மன் இளைஞனுக்கும் உணர்ச்சியும், எழுச்சியும் ஏற்படும். இவ்வாறு இறுதிச் சாசனம் எழுதிக் கையெழுத்திட்டார் ஹிட்லர்.

1945 ஏப்ரல் 30ஆம் திகதி இரவு 9.00 மணி. "இன்று மாலை 4.00 மணிக்கு இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியும், அவர் மனைவியும் எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்று சுவீடன் நாட்டு ரேடியோ அறிவித்தது. ரேடியோ செய்தியை காதலியுடன் ஹிட்லர் நேரடியாகக் கேட்டார். முசோலினியின் முடிவு, ஹிட்லருக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கியது. அன்றிரவு 12.00மணி, பெர்லின் நகரம் முற்றிலுமாக ரஷ்யப் படைகள் வசமாகிவிட்டது என்றும், எந்த நேரத்திலும், சுரங்க மாளிகை தகர்க்கப்படலாம் என்றும், ஹிட்லருக்குத் தகவல் கிடைத்தது. ஹிட்லரின் முகம் இருண்டது. மௌனமாக எழுந்து, தன் தோழர்களுடன் கை குலுக்கினார்.

பிறகு தன் அந்தரங்க உதவியாளரை அழைத்து, "நானும் ஈவாவும் ஒன்றாக இறந்துவிடப்போகிறோம். நாங்கள் இறந்தபின், எங்கள் உடல்களை இரு போர்வையில் சுருட்டி, பெட்ரோல் ஊற்றி எரித்துச் சாம்பலாக்கி விடுங்கள். எங்கள் அறையில் உள்ள கடிதங்கள், டைரிகள், என் உடைகள், என் பேனா, கண்ணாடி முதலிய பொருள்களைச் சேகரித்து, ஒன்று விடாமல் எரித்துவிடுங்கள்" என்று கூறிவிட்டு, மனைவியையும் அழைத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றார். அறைக்கதவு சாத்தப்பட்டது. வெகு நேரமாகியும் கதவு திறக்கப்படவில்லை. ஹிட்லரும் ஈவாவும் என்ன ஆனார்கள் என்று வெளியே இருந்தவர்களுக்குத் தெரியவில்லை. வெளியே நீண்ட நேரம் காத்திருந்த மந்திரிகளும், தளபதிகளும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி : ஒரு சோபாவில், உட்கார்ந்த நிலையில் ஹிட்லரின் உயிரற்ற உடல், அவர் காலடியில் ஒரு துப்பாக்கி கிடந்தது. அதன் நுனியிலிருந்து புகை வந்து கொண்டிருந்ததால், அவர் சற்று நேரத்துக்கு முன்தான் தன்னைச் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடிந்தது. அவருடைய வலது காதுக்கு கீழ் அரை அங்குல அளவுக்கு துவாரம் விழுந்து, அதிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.



தற்கொலை செய்து கொள்ளும் முன் ஹிட்லரும் ஈவா பிரவுனும் எடுத்துக் கொண்ட புகைப்படம்

ஹிட்லர், துப்பாக்கி முனையை வாய்க்குள் வைத்து சுட்டதால்தான், குண்டு காதுக்கு அருகே துளைத்துக் கொண்டு சென்றிருக்கவேண்டும் என்று தளபதிகள் கருதினார்கள். ஹிட்லரின் வலது கரம் ஒரு புகைப்படத்தை மார்போடு அணைத்தபடி இருந்தது. அந்தப்படம், ஹிட்லரின் தாயாரின் புகைப்படம். தாயின் மீது ஹிட்லர் கொண்டிருந்த பாசத்தை எண்ணி அவர் நண்பர்கள் கண்ணீர் சிந்தினர். ஹிட்லர் உடல் இருந்த சோபாவில் சாய்ந்தபடி பிணமாகியிருந்தாள் அவருடைய மனைவி ஈவா. வெள்ளைப் புள்ளிகளோடு கூடிய கருநீல மெக்ஸி உடை அணிந்திருந்தாள். அவள் உடல் நீலம் பாய்ந்திருந்தது. எனவே அவள் சயனைட் விஷம் சாப்பிட்டிருக்க வேண்டும் என்பது புலனாகியது.

(தொடரும்)





வாயு வாகி வெளியை அளந்தனை,
வாழ்வெ தற்கும் உயிர்நிலை ஆயினை,
தேயு வாகி ஒளியருள் செய்குவை,
செத்த வற்றைக் கருப்பொருள் ஆக்குவை.

- சுப்பிரமணிய பாரதியார்

# அழகன்



தாரகபுரி என்ற ஊரில் தங்கப்பன் என்ற பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் பெயருக்கு ஏற்றார் போலவே தங்கம். ஏழைகளுக்குப் பணத்தை வாரி இறைத்தார். அப்படியும் அவனிடம் செல்வம் கொட்டிக் கிடந்தது. ஆனாலும் அவரது ஒரே மகள் ஷக்தி அசிங்கமாக இருந்தாள். ஆனால், அவளும் குணத்தில் தங்கம். எனவே, இருபத்தைந்து வயதாகியும் இன்னும் அவளுக்குக் கல்யாணம் ஆக வில்லை.

"அவளைப் பெண் பார்க்க வரும் இளைஞர்கள் எல்லாம் அவளது அசிங்க மான முகத்தைக் கண்டதும் அலறி அடித்துக் கொண்டு ஓடிவிடுவர். அதனால் ஷக்திக்கு அழுகையும், ஆத்திரமும் வந்தன. "அப்பா! எனக்குக் கல்யாணமே வேண்டாம். இனிமேல் எனக்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டாம்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

அதற்காக தங்கப்பன், மாப்பிள்ளை தேடுவதை நிறுத்தவில்லை. பொழுது விடிந் தால் மாப்பிள்ளையைத் தேடி ஊர் ஊராகப் போய்விடுவார். கடைசியில் அவருக்கே அலுப்பு ஏற்பட்டது. இறைவன் என் மகளுக் கென்று ஒரு துணையை நிச்சயமாகவே

**பாப்பா முரசு சிறுகதை**

வைத்திருப்பான். உலகத்தில் உள்ள அழகான பெண்களுக்கு மட்டும்தான் திருமணம் நடக் கும் என்று இருந்தால், முக்கால்வாசி பெண் களுக்கு திருமணம் நடக்காது. நான் செய்த தான தர்மங்கள் எனக்குக் கை கொடுக்கும், என்று சொல்லி மாப்பிள்ளை தேடும் பட லத்தை விட்டு விட்டார்.

அந்தச் சமயத்தில் பக்கத்து ஊரைச் சேர்ந்த 'அழகன்' என்ற அழகிய இளைஞன் தங்கப்பன் வீட்டுக்கு வந்து, 'நான் உங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள் கிறேன்' என்றான். தன் காதுகளையே நம்ப முடியவில்லை தங்கப்பனுக்கு. சந்தேகத்துடன் அழகனைப் பார்த்தார். "இளைஞனே! நீ விஷயம் தெரியாமல் வந்து இருக்கிறாய் என்று நினைக்கிறேன். என் மகள் பார்க்கக் கண்றா வியாக இருப்பாள்!" என்றார்.

"நான் அதைக் கேள்விப்பட்டேன். உங்கள் பெண்ணை நான் அழகுப் போட்டிக்குத் தேர்ந் தெடுக்க வரவில்லை. குடும்ப வாழ்க்கை நடத்த ஒரு பெண்ணுக்குக் குணம்தான் தேவையே தவிர அழகு தேவையில்லை. அத்துடன் என்னைப் பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நான் ஒரு ஏழைக் குடும் பத்தில் பிறந்தவன். எனக்கு யாருமே பெண் கொடுக்க மாட்டார்கள். உங்கள் மகள் அழகி யாக இருந்தால், நீங்கள் கூட எனக்குப் பெண் கொடுக்கமாட்டீர்கள்" என்று கூறினான் அழகன்.

"எதற்கும் நீ பெண்ணைப் பார்த்து விட்டு உன் சம்மதத்தைச் சொல்" என்ற தங்கப்பன் ஊர்ப் பெரியவர்களின் முன்னிலையில், ஷக் தியை அழைத்து அவனுக்குக் காட்டினார். எனக்குப் பெண் பிடிக்கிறது. நான் ஊருக்குப் போனதும் என் பெற்றாரை அனுப்பி வைக் கிறேன். திருமணத்திற்கு ஒரு நல்ல நாள் பார்த்து விடுங்கள் என்றான் அழகன்.

அதன்படியே அவன் பெற்றோர் சம்மதத் துடன் மிகவும் கோலாகலமாகத் திருமணம் நடந்தது. இந்த பூரிப்பில் சற்று அழகு கூடி காணப்பட்டாள் ஷக்தி.

ஷக்திக்கு கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பாரு. அவள் புருஷன் ஆணழகன்! என்று ஊரே மெச்சியது. ஷக்தியும் தன் இனிய குணத்தால் அழகனின் மனம் விரும்பிய மனைவியாகத் திகழ்ந்தாள். தான் ஏழை களுக்குச் செய்த புண்ணியத்தின் பலனாக இறைவனே இந்த வாழ்க்கையை தன் மகளுக்கு கொடுத்ததாக நினைத்து, அந்த ஊரில் இருக்கும் ஏழைகளுக்கெல்லாம் இல

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.05.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 642**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 640

**பரிசுக்குரியவர்:**
**கிறிஷானி கிறிஸ்ரி,**
**தரம் - 2, சொய்சாபுர தொடர்மாடி, மொறட்டுவ.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| மர்சியா நாபிர், 11/2A, பாக்கீர் மாக்கார் அவனியூ, மருதானை, பேருவளை. | ர.வினோ, தரம்- 8K, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. |
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | த. திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். |
| டிவின்ஷன் டேவிட் ரவிக்குமார், 82, புதிய செட்டி தெரு, கொழும்பு - 13 | ச. நிவேதா, கண்டி வீதி, வவுனியா. |
| செல்வி, 6ஆவது வீதி, நாவல, ராஜகிரிய. | வீ. மயூரன், மேபீல்ட் வீதி, கொட்டாஞ்சேனை. |
| அவ்ப் அஹ்மத், 60/2, காலிங்க மாவத்த, பொல்ஹென்கொட, கொழும்பு - 05. | ர.நிரஞ்சனா, தரம் - 11 E, ரி.வி.கே. மில் வீதி, செங்கலடி. |

# ஆத்திசூடி

## பிழைபடச் சொல்லேல்

நீ கூறுகின்ற கருத்துகள் தவறான பொருளைத் தரத்தக்க சொற்களைப் பயன்படுத்தாதே.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## எங்கும் சமத்துவம் மலர வேண்டும்

உழவும் தொழிலும்
உயரவேண்டும்
உழைப்போர் வாழ்வு
மலரவேண்டும்.

கலையில் மணமும்
கமழவேண்டும்
கருத்தின் முகைகள்
நெகிழவேண்டும்.

அன்பும் அறமும்
வளரவேண்டும்
அகிலம் அனைத்தும்
மகிழவேண்டும்.

எங்கள் பணியும்
மலரவேண்டும்
எங்கும் சமத்துவம்
வளரவேண்டும்.




# அதிசய உலகம்

## பாதரசம்!

**திரவ** நிலையில் இருக்கும் ஓர் உலோகம் பாதரசம். இது இயற்கையில் தனியே கிடைக்கும். அதுமட்டுமில்லாமல் 'இங்குலிகம்' என்ற தாதுவிலிருந்தும் பாதரசத்தைப் பிரித்தெடுப்பர்.

இங்குலிகத்தை நன்கு வெப்பப்படுத்தும்போது அதிலிருந்து பாதரசம் ஆவியாகப் பிரியும். அந்த ஆவியைக் குளிர வைத்தால் பாதரசம் சிறு சிறு மணிகளாகத் திரண்டு ஒன்று சேரும். இது வெள்ளியைப் போன்று பளபளப்பாக இருக்கும். தண்ணீர், எண்ணெய் போன்ற திரவப் பொருள்கள் அவை இருக்கும் பாத்திரங்களில் ஒட்டிக் கொள்ளும். ஆனால், பாதரசம் அவ்வாறு ஒட்டாது.

இது மற்றெல்லாத் திரவங்களையும் விட அதிக எடையுள்ளது. தண்ணீரின் எடையை விட சுமார் 131/2 மடங்கு அதிகம். இதில் காரீயத்தைப் போட்டாலும் மிதக்கும். மூழ்காது. இரும்பைத் தவிர பெரும்பாலான உலோகங்கள் இதில் கரைந்துவிடும். இரும்பு கரையாது என்பதினாலேயே எ.்.கு பாத்திரங்களில் பாதரசத்தை பாதுகாப்பாக வைத்திருப்பர். தங்கம், வெள்ளி போன்றவற்றைப் பிரித்தெடுக்கும் முறைகளிலும் பல இரசாயன ஆய்வுக்கூடங்களிலும் பாதரசம் உதவுகிறது.

பாதரச ஆவியைக் கொண்டு பிரகாசமாக விளக்குகளையும் எரியவிடலாம்.

## பெண்களுக்கு நோ!



**ஏதோஸ்** மலை மீதுள்ள கிரேக்க மடாலயத்திற்குள் இன்றும் பழங்கால முறைப்படி பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்த விதி மனித சாதிக்கு மட்டும் தான் என்பது இல்லை. உயிரினங்கள் எதுவாயிருந்தாலும் பெண்பாலைச் சேர்ந்தவற்றுக்கு அனுமதி கிடையாது. அங்குள்ள சன்னியாசிகளுக்குப் பெண் வாடையே கூடாது. ஆகவே, இங்கு ஆண்கள் மட்டும் செல்லலாம்; பெண்கள் கூடாது. காளைக்கு அனுமதி உண்டு; பசுவுக்குக் கிடையாது. சேவல் செல்லலாம்; பெட்டைக் கோழி செல்லக்கூடாது. இந்த விசித்திர வழக்கம் எழுநூறு ஆண்டுகளாக உள்ளது.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## உலகம் (கி.மு.)

| | |
|---|---|
| 1. 600 | - சிந்து நதிக்கரையில் புதிய கற்கால மனிதர்கள் கோதுமையும், பார்லியும் பயிரிடுதல். |
| 2. 5000 | - பாபிலோனியாவின் சுமேரியாவிலும், எகிப்திலும் குடியேற்றங்கள் உருவாதல். |
| 3. 3000 | - மொகஞ்சதாரோவிலும், ஐரோப்பாவிலும் சிந்து நதி நாகரிகம். |
| 4. 2900 | - எகிப்தில் முதல் பிரமிடு. |
| 5. 2500 | - எகிப்தில் 365 நாள் கொண்ட கலண்டர் அறிமுகம். |
| 6. 2100 | - ஆபிரகாம் பயணத் துவக்கம். |
| 7. 2000 | - இந்தியாவில் ஆரியர்கள் குடியேற்றம். வேதசாஸ்திரங்கள் தோன்றுதல். ரிக் வேதம். |
| 8. 1900 | - பாபிலோனியர், மொசபடோமியாவைக் கைப்பற்றுதல். |
| 9. 1565 | - ஹிட்டிஸ் பாபிலோனியாவைக் கைப்பற்றுதல். |
| 10. 1480 | - மோசே, இஸ்ரேல் மக்களுடன் கானானுக்கு பயணம். |
| 11. 1013 | - இஸ்ரேலில் தாவீத் அரசன். |




# சிறிய புத்தகம்

பற்பல புத்தகங்களைக் கையாண்டவருக்குக்கூட இப்புத்தகத்தைத் திருப்புவது சுலபமாக இருக்காது. ஏனெனில், உலகில் தற்போதுள்ள மிகச் சிறிய புத்தகங்களில் இதுவும் ஒன்றாகும். இதன் நீளம், அகலம், உயரம் என்பன வெறும் 5 மில்லி மீற்றராகும். ஆனாலும் கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.





# நயோமியின் சண்டை

பிரபல மொடல் அழகியான நயோமி கெம்பல் சண்டை போடுவதிலும் பிரபலமடைந்துள்ளார். அண்மையில் அவர் தனது வீட்டில் கடமையாற்றும் பணிப் பெண்ணுக்கு தொலைபேசியால் அடித்ததற்காகக் கைது செய்யப்பட்டு, நியூயோர்க் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்ட போது பிடித்த படம்.



யாவோ டினாப் தான் ஆசியாவிலேயே உயர்ந்த பெண்மணியாவார். தனது நண்பியுடன் வீட்டு வாசலில் இவ்வாறு உட்கார்ந்து கொண்டு ஒய்யாரமாகப் போஸ் கொடுக்கும் இவருக்கு 34 வயதாகிறது. இவரது உயரம் 7 அடி 6 அங்குலமாகும்.

# நட்பின் தூரம்



# பாணில் லிசா!

பிரித்தானியாவின் பெர்மிங்ஹாம் நகரில் வசிக்கும் கிரபிஃக்ஸ் வடிவமைப்பாளரான க்ரீனினால் வடிவமைக்கப்பட்ட இம் மோனாலிசா ஓவியம் பாண் துண்டுகளினாலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்காக அவர் 360 பாண் துண்டுகளைப் பயன்படுத்தியுள்ளார் என்பதோடு 3 நாட்கள் செலவாகியதாம்.

# நான்கு கால் மனிதர்

இரண்டு கால் உயிரினமாகவே மனிதன் அடையாளம் காணப்படுகின்றான். சில நேரங்களில் நான்கு கால்களில் நடக்கும் சம்பவங்களும் நிகழ்கின்றன. துருக்கியைச் சேர்ந்த இந்த ஒரே குடும்பத்தவர்கள் அடிக்கடி அங்குமிங்கும் செல்வது நான்கு கால்களால்தான். இவர்கள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என்பதற்கான காரணம்தான் தெரியவில்லை.





# படிப்பினையூட்டும் தாய்

பத்து மாதம் சுமந்து பெற்ற தனது ஒரே பிள்ளையைக்கூட குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போகும் மனிதத் தாய்மார்கள் மத்தியில், ஒரு டஜன் குட்டிகள் பிறந்தாலும் அவற்றை சளைக்காமல் அன்புடன் பராமரித்துவரும் இந்த நாய்த் தாய் எவ்வளோ உன்னதமானவர். டால்மெஷன் இனத்தைச் சேர்ந்த இந்தத் தாயார், மனிதத் தாய்மாருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறார். ஐந்தறிவு படைத்த ஜீவன்களிடமிருந்து ஆறறிவு படைத்தவர்கள் நிறையப் படிக்க வேண்டி இருக்கிறது என்பது இதைப் பார்க்கும் போது புரிகிறது.



ஜீவா - நயன்தாரா
ஈ

## பிருத்விராஜ் மீது அஜீத் புகார்!

**இது** இன்னொரு காதல் விவகாரம். மலையாள உலகில் இளம் ஹீரோ பிருத்விராஜ். கல்லூரி மாணவிகள் எல்லாம் இவர்மேல் காதல் பித்துப்பிடித்துக் கிடக்கிறார்கள். ரசிகைகள் மட்டுமின்றி சில இளம் நடிகைகளும்கூட பிருத்விராஜ் மேல் ஒரு மோகமாகத்தான் இருக்கிறார்கள். தமிழிலும் கூட 'கனா கண்டேன்', 'பாரிஜாதம்' வசந்தின் 'சத்தம் போடாதே' என பிருத்விராஜ் வளர்ந்துகொண்டிருக்கிறார். இந்த நிலையில்தான் மலையாள தயாரிப்பாளர் சங்கத்தில் பிருத்விராஜ் மீது ஒரு கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கிறார் அஜீத். யார் இந்த அஜீத்? 'காதல்' சந்தியாவின் அப்பா.

எதற்காக இந்தக் கம்ப்ளைண்ட்?

மலையாளத்தில் இப்போது பிருத்விராஜுடன் சந்தியா ஒரு படத்தில் நடித்து வருகிறார். அதனால் கதாநாயகன் பிருத்விராஜ பற்றியே பினாத்தி வருகிறார் 'காதல்' சந்தியா. ஏற்கனவே மீராஜாஸ்மினோடும் விளையாடி பெரிய பிரச்சினை வந்தது. இப்போது விவரம் தெரியாத என் மகளிடமும் ஏதேதோ பேசி வசியம் பண்ணியிருக்கிறார். அவரைக் கண்டித்து வையுங்கள்" என கம்ப்ளைண்ட் பண்ணியிருக்கிறார்.



கரண் - சஞ்சனா
கோகி

## ரஜினிக்கு மராட்டிய விருது

**மகாராஷ்டிர** மாநில அரசின் ராஜ்கபூர் விருது நடிகர் ரஜினிகாந்த்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்தவர் ரஜினிகாந்த். இவரது இயற்பெயர் சிவாஜிராவ் கெய்க்வாட். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர் என்றாலும் அவரது குடும்பம் பல தலைமுறைகளாக கர்நாடக மாநிலத்தில்தான் வசித்து வருகிறது.

ரஜினிகாந்த் பெங்களூரில் பிறந்தார். அங்கேயே பஸ் கண்டக்டராகவும் பணியாற்றினார். இயக்குநர் கே.பாலச்சந்தரின் கண்ணில் பட்ட அவர் 'அபூர்வ ராகங்கள்' படம் மூலம் தமிழ் சினிமாவில் நுழைந்தார். இன்று தமிழக சூப்பர் ஸ்டாராக விளங்குகிறார்.

தமிழக அரசின் கலைமாமணி, பத்மஸ்ரீ உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ள ரஜினிக்கு இப்போது அவரது சொந்த மாநிலமான மகாராஷ்டிரம் புதிய கௌரவத்தைக் கொடுத்துள்ளது.

திரைத்துறையில் சிறந்து விளங்குவோருக்கு மகாராஷ்டிர மாநில அரசு ராஜ்கபூர் மற்றும் சாந்தாராம் பெயரில் விருதுகளை வழங்கி வருகிறது.

இந்த ஆண்டுக்கான ராஜ்கபூர் விருதுக்கு ரஜினி தேர்வு செய்யப்பட்டார். மராட்டிய நடிகர் அசோக், சாந்தாராம் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

விருது வழங்கும் விழா கடந்த 30ஆம் திகதி புனே நகரில் நடைபெற்றது. அப்போது ரஜினிக்கும், அசோக்குக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

ராஜ்கபூர் விருது, ஒரு லட்சம் ரூபா பரிசு மற்றும் பட்டயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சொந்த மாநிலமான மகாராஷ்டிரத்தில் ரஜினிக்குக் கிடைத்த முதல் பெரிய அங்கீகாரம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



**சிம்புவும்** நயன்தாராவும் மிக நெருக்கமாக இருக்கிறார்கள். இது வெறும் நட்பு மட்டும் இல்லை. காதலும்கூட என விபரம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள். 'வல்லவன்' பட போட்டோசெஷனின் போது நயனின் உதடை சிம்பு கவ்விய விவகாரம் போஸ்டராகி பொலிஸ் வரை பரபரப்பை உண்டாக்கியது. அப்போது கூட 'சிம்பு என் உதட்டைக் கடிச்சது எந்தத் தப்பும் இல்லை' என ஒரு போடுபோட்டார் நயன்தாரா. 'வல்லவன்' படப்பிடிப்பில் சிம்புவுக்கும் ரீமாசென்னுக்கும் சண்டை வந்தபோதுகூட சிம்புவுக்கு ஆதரவாகவே இருந்தார் நயன். எஸ்.ஜே.சூர்யாவுடன் கள்வனின் காதலி படத்தில் நடித்த நயன், சிம்புவின் அப்பா டி.ராஜேந்தரை உயர்த்தி வசனம்கூடப் பேசியிருக்கிறார். இதெல்லாம் காதலின் அறிகுறி என்கிறார்கள். அம்மணியும் பொழுதுபோகாவிட்டால் சிம்புவுக்கு உடனே வா என மெஸேஜ் அனுப்புகிறார் செல்போனில். சிம்பு ஏதாவது வேலையாக இருந்தால் நான் இப்போ பிஸி என பதில் மெஸேஜ் அனுப்புகிறார். உடனே என்னைவிட உனக்கு அப்படி என்ன பிஸியான வேலை என அடுத்த மெஸேஜை அனுப்புகிறார் நயன்தாரா. அப்படிப் போய்க்கொண்டிருக்கிறது அவர்களின் ஊடலும் கூடலும்.

சமீபத்தில் நட்சத்திர கிரிக்கெட்டிற்காக சார்ஜா போனபோது நானும் வருகிறேன் என சிம்புவோடு கிளம்பியிருக்கிறார் நயன்தாரா. இப்படிப்போனா எல்லார் முன்னாடியும் குட்டு வெளுத்துரும் என்பதால் முதல் பிளைட்டில் நயன்தாராவை சார்ஜாவுக்கு அனுப்பிவிட்டு, அடுத்த பிளைட்டில் இவர் அங்கேபோய் சேர்ந் திருக்கிறார். இப்படி...நாடு விட்டு நாடு தாண்டி இவர்கள் காதல் வளர்ந்துகொண்டிருக்கிறது.




விக்ரம் - த்ரிஷா
பீமா

## மகேந்திரன் வச்ச பெயர்

**சரசரவென** உசரமாய் இருக்கிறார் சாருலதா. ஒரு சமயம் 'உதிரிப்பூக்கள்' மகேந்திரனைச் சந்தித்து வாய்ப்புக் கேட்டபோது, உன்பெயர் என்ன என்று கேட்டிருக்கிறார் மகேந்திரன். ஏதோ வாயில் நுழையாத ஒரு பெயரைச் சொல்ல....என் மானசீகக் குரு சத்யஜித்ரேவோட படம் 'சாருலதா'. அதையே உனக்குப் பேரா வைக்கிறேன் என சாருலதாவுக்குப் பேர் வைத்திக்கிறார் மகேந்திரன். பிளஸ்-2 முடித்துவிட்டு சினிமா களத்தில் இறங்கிவிட்டாலும் படிப்போட அவசியத்தை உணர்ந்தோ என்னவோ பி.ஏ. கரஸ்பாண்டென்ஸில் படித்துக்கொண்டிருக்கிறார். பேசினாலே குரல் தேனாக இருக்கிறது சாருலதாவிற்கு.

"பேசறது என்ன...அழகா பாடவும் செய்வேன். கிறிஸ்துவ ஜெபக்கூட்டங்கள்ல பலமுறை பாடியிருக்கேன்" என கன்னம் குழிவிழ சிரிக்கிறார் சாருலதா.

டைரக்டர் பவித்ரனின் புதிய படம் ஒன்றில் அம்மணிதன் நாயகி.

அதுசரி...இவ்வளவு சுத்தமா தமிழ் பேசுறீங்களே? என்றால்... "நான் விழுப்புரம், விழுப்புரத்துப் பெண்" என வழக்கும் குரலில் சொல்கிறார் சாரு.

சினி

## துள்ளூற வயசு

**புதுமுக** கதாநாயகன் ராகவ், புதுமுக நாயகி தீபிகா இருவரும் அறிமுகமாகும் படம் 'துள்ளூற வயசு'.

துள்ளுவதோ இளமை எப்படி பள்ளியில் படிக்கும் மாணவர்களின் காதலை மையமாக வைத்து எடுக்கப்பட்டு பரபரப்பாகப் பேசப்பட்டதோ, அதே மாதிரி பள்ளி மாணவர்கள், மாணவிகளின் நட்பையும் காதலையும் சொல்லும் படமாக உருவாகியுள்ளது துள்ளூற வயசு.

முதல் காதல்தான் மறக்க முடியாது என்ற கருத்தை அழுத்தமாகச் சொல்லும் படம்தான் துள்ளூற வயசு. டீன் ஏஜ் இரசிகர்களை குறிவைத்துப் படமாக்கப்பட்டுள்ள காட்சிகள் இளமையோ இளமை.

துள்ளூற வயசு
துடிக்கிற வயசு
அனுபவி அனுபவி

மாமா உனக்கு
நான் சமஞ்ச பொண்ணு
ஜோரா உனக்கு
நான் அமைஞ்ச பொண்ணு

இப்படி வில்லங்கமான குத்துப்பாட்டுக்களைப் போட்டு துள்ளூற வயசுகளை துடிக்க வைக்கப்போகிறாராம் ராஜா வீட்டுக் கன்றுக்குட்டி கார்த்திக்ராஜா.



தனுஷ்
புதுப்பேட்டை

**ஸ்டண்ட்** மாஸ்டரும் நாடார் சங்கப் பிரமுகருமான ஜாக்குவார் தங்கம் தன் வாரிசை ஹீரோவாக்கி இயக்கித் தயாரிக்கும் 'சூர்யா' படத்தில் முதலில் சுஜிபாலா கதாநாயகியாக நடிப்பதாகக் கூறப்பட்டது. அதன் பிறகு மரீனா எனும் புதுமுகம் நடிப்பதாகக் கூறப்பட்டது. இப்பொழுதும் ஏதோ ஒரு மும்பை முகம் கதாநாயகியாக அறிமுகமாக இருப்பதாகத் தகவல். இத்தனைக்கும் சுஜிபாலா, மரீனா இருவரும் இவரது நாடார் சமூகத்து நடிகைகள். ஓவர் கிளாமர் ரோல் என்பதால் இருவரும் இந்தப் படத்தில் நடிக்க மறுத்துவிட்டதாகத் தகவல்.

ஃபைட் மாஸ்டர், ஃபைட் படம் எடுப்பாருன்னு பார்த்தா.... டைட் குளோசப் சல்சா காட்சிகளும் நிறைய இருக்கும்போல?



கண்ணம்மாபேட்டை



# பீமாவும் த்ரிஷாவும்

**அந்தா** இந்தா என்று இழுத்துக் கொண்டிருந்த பீமா படத்தின் சூட்டிங் ஒரு வழியாகத் தொடங்கிவிட்டது.

லிங்குசாமி இயக்கத்தில் ஏ.எம்.தயாரிப்பில் உருவாகும் அதிரடி ஆக்ஷன் மசாலா படம் தான் பீமா. விக்ரம் தான் ஹீரோ என்பது போன வருடமே முடிவாகிவிட, ஹீரோயின் சான்ஸ் தான் யாருக்கு என்பதில் பெரும் குழப்பம் நிலவியது.

இந்தி - தெலுங்கு நடிகை கேத்ரினா கைப், மாடல் தீபிகா படுகோன், நம்ம ஆஸின் எனப் பல பேரை பரிசீலித்துவிட்டு கடைசியாக சாமி பட மாமி த்ரிஷாவையே ஹீரோயினாக்கி விட்டார்கள்.

ரொம்பக் கஷ்டப்பட்டு விக்ரமை விரட்டி விரட்டி இந்தச் சான்ஸைப் பிடித்தார் த்ரிஷா என்கிறார்கள். காக்க காக்க கேமராமேன் ஆர்.டி.ராஜசேகர் தான் படத்தின் ஒளிப்பதிவாளர்.

இந்தப் படத்துக்காக பாடி பில்ட் செய்யச் சொல்லிவிட்டார் லிங்கு. இதனால் பறவைக் காய்ச்சல் பயத்தால் சிக்கனை ஒதுக்கிவிட்டு வெறும் மட்டனாக உள்ளே தள்ளி உடம்பை ஒரு சுத்து ஏத்தி வைத்திருக்கிறார் விக்ரம்.

படத்துக்கு இசை ஹாரிஸ் ஜெயராஜ்.

படத்தின் பூஜை ஏவி.எம்.ஸ்டுடியோவில் நடந்தது. அந்நியனில் விக்ரமை இயக்கிய ஷங்கர், விக்ரமின் நண்பரான இயக்குநர் தரணி உள்ளிட்ட வி.ஐ.பி.க்கள் இதில் பங்கேற்றனர்.

வெள்ளை சிக்ஸ் பாக்கெட் பேண்ட்ஸ், வெள்ளை பனியனில் வந்திருந்தார் விக்ரம். டைட் ஜீன்ஸ், ஸ்லீவ்லெஸ் டி-சர்ட்டில் வந்திருந்தார் த்ரிஷா. கூடவே அவரது இளம் அம்மா... உமா சுடிதாரில்.

படத்தில் வில்லனாக நடிக்கப் போவது நானா படேகராம். ஹைதராபாத், விசாகபட்டிணம் பக்கமாக சூட்டிங் நடத்தப் போகிறார்களாம். முதலில் பிளான் பண்ணியது இலங்கையில், இப்போது அந்தத் திட்டமில்லையாம்.

தமிழ், தெலுங்கு என ஒரே நேரத்தில் மிக பிரமாண்டமாக உருவாகும் இந்தப் படம் தீபாவளிக்கு ரிலீசாகிவிடுமாம்.

இப்போது ரவியோடு சம்திங் சம்திங் உனக்கு எனக்கும் படத்தில் நடிக்கும் த்ரிஷா, அடுத்து கமலின் தசாவதாரத்திலும் அவதாரம் காட்டப் போவது உங்களுக்குத் தெரியும்.

மேலும் ஹீரோயின் கிடைக்காமல் தவித்து வரும் பிரஷாந்த், தான் நடித்து வரும் பெட்ரோல் படத்திலும் த்ரிஷாவையே புக் செய்யச் சொல்லிவிட்டாராம்.

ஹைதராபாத்தில் சில பங்களாக்களை வாங்கிப் போட்டுள்ள த்ரிஷா, சென்னை ஆழ்வார்பேட்டை சென்டாப் ரோட்டில் சில கோடிகள் செலவில் ஒரு பிரமாண்ட பங்களாவை எழுப்பியுள்ளார். இதன் கிரஹப் பிரவேசத்துக்கு யாரையும் அழைக்காமல் அமைதியாய் நடத்தி முடித்து விட்டார்களாம்.



அஜீத் - சதா
திருப்பதி

# ஆறுச்சாமி

**ஒரு சாமி,** ரெண்டு சாமி, மூணு சாமி, நாலு சாமி, அஞ்சு சாமி, ஆறுச்சாமி என 'சாமி'யில் டயலாக் விடுவார் விக்ரம். இப்போது விக்ரம் நடித்த படம் ஒன்று 'ஆறுச்சாமி' என்ற பெயரிலேயே வருகிறது. டைரக்டர் மௌலி இயக்கிய 'அக்கா பாகுன்னாவா' என்கிற தெலுங்குப் படம்தான் 'ஆறுச்சாமி' என்ற பெயரில் தமிழுக்கு டப்பாகிறது. அக்காவாக ஜெயசுதா, தம்பியாக விக்ரமும் ஆனந்த்தும். அக்கா கணவனாக குடும்பத்துக்குள் நுழையும் ஒரு அயோக்கியன், குடும்பத்தையே ஆட்டிப்படைக்க....உண்மை தெரிந்து நம்ம சாமி விக்ரம், வில்லனை சம்ஹாரம் செய்வதுதான் ஆறுச்சாமி படத்தின் மேட்டர்.

இப்படி ஆறு மாசமா எந்தப் படமும் ஆரம்பிக்காம விக்ரம் வீட்டுல உக்காந்திருந்தா இப்படி அறுதப்பழசெல்லாம் புதுப்புது போல வரத்தான் செய்யும்.


லோரன்ஸ் - சர்மி
சியம் ஒரு தாயின் ஆசை

**பாடலாசிரியர்** டாக்டர் கிருதியா. 1700 பக்திப் பாடல்கள், 150 டி.வி. பாடல்கள், 100 தனிப் பாடல்கள் என பலப் பாடல்கள் எழுதிய டாக்டர் கிருதியாவை 'துள்ளித் திரிந்த காலம்' படத்தின் மூலம் பாடலாசிரியராக மாற்றியவர் கே.பாலசந்தர்.

தொடர்ந்து வயசுப் பசங்க, கரகாட்டக்காரி, பரமசிவன், அமிர்தம் என 40க்கும் மேற்பட்ட பாடல்கள் எழுதியுள்ளார். இளையராஜா, ஆதித்யன், எஸ்.ஏ.ராஜ்குமார், தேவா, வித்யாசாகர், கார்த்திக்ராஜா, ஆர்.கே.சுந்தர், பவதாரிணி ஆகியோர் இசையில் பாடல்கள் எழுதியுள்ளார். டில்லி உணர்ச்சிகள், 1999, பொய் என 20க்கும் மேற்பட்ட படங்களில் பாடல்கள் எழுதி வருகிறார். 'பொய்' படத்திற்காக 'என்ன தொலைத்தாய், நீ எதனை தொலைத்தாய்' பாடலைக் கேட்ட வித்யாசாகர், பி.வாசுவிடம் சிபாரிசு செய்ய....பரமசிவன் படத்தில் 'தங்கக்கிளியொன்று தத்திப்பழக கத்துக் கொடுத்தது யாரம்மா' பாடலை எழுத...பாடல் ஹிட்டானது.

அமிர்தம் படத்தில் 'முகிலினமே' பாடலும், பொய் படத்தில் என்ன தொலைத்தாய் பாடலும் இலக்கிய அந்தஸ்து உள்ள பாடல்கள். பாரதிகண்ணன் இயக்கத்தில் ஆர்.கே.சுந்தர் இசையமைத்த வயசுப் பசங்க படத்தில் மாலதி பாடிய ஏபிசிடி உங்கப்பன் தாடி பாட்டு நல்ல டப்பாங்குத்துப் பாட்டு. உணர்ச்சிகள், டில்லி ஆகிய படங்களிலும் நல்ல டப்பாங்குத்து பாட்டு எழுதியுள்ளார். இலக்கிய அந்தஸ்து பாடல்களும், கூடவே டப்பாங்குத்து பாடல்களும் தன்னால் எழுத முடியும் என்கிறார் பாடலாசிரியர் டாக்டர் கிருதியா.


விக்ரம்
பீமா

# வி சி ட்

## சைக்கோ சரத்குமார்

**தேர்தல்** நேரத்தில் (இரசிகர்மன்ற மாநாடு) அது இதுனு பிஸியாக இருப்பார் என்று பார்த்தால் அப்படியே சினிமாவில் சின்ஸியராக மூழ்கிக் கிடக்கிறார் சரத்.

நூறாவது படம் 'தலைமகன்' அடுத்து 102ஆவது படம் 'வைத்தீஸ்வரன்'. அதில் மாறுபட்ட கெட் - அப்பில் வருவதாக அதிர்ச்சி மிரட்டல் விடுகிறார்.

நாட்டாமை, நம்ம அண்ணாச்சி, சூரியவம்சம், நட்புக்காக போன்ற வெற்றிப் படங்களில் அப்பா, மகன் என இரண்டு மூன்று வேடங்களில் கலக்கினார். அதுவும் ஒவ்வொரு கேரக்டருக்கும் வித்தியாசத்தை வெளிப்படுத்தியவர், மீண்டும் பல தோற்றங்களில் நடிக்கும் படம் 'வைத்தீஸ்வரன்'.

அது என்ன வைத்தீஸ்வரன், டைரக்டர் மகேஷ்வரிடம் கேட்டோம்.



"பல வெற்றிப் படங்களைத் தந்த சரத்குமார் எடுக்கும் மகா அவதாரம் இந்தப் படம். வைத்தீஸ்வரன் என்றால் வைதீக ஈஸ்வரன் - வையகத்து மக்களின் மருத்துவன் என்று பொருள். அதாவது மக்களிடம் உள்ள நோய்களை ஒழித்து மக்களோடு மக்களாக தனித்து வாழ்பவன். அயராத உழைப்பு, சமுதாய சிந்தனை கொண்டு படம் பிடிப்போம்; மக்கள் மனதில் இடம் பிடிப்போம்" என்று பேச்சாளர் தோரணையில் பேசினார்.

## அஜீத்தின் மாந்தோப்பு!

**சென்னை** கேளம்பாக்கம் பகுதியில் ஒரு பண்ணையும் வீடும் கட்டியிருக்கிறார் ரஜினி. அந்தப் புறம் ஜெயதேவியின் பண்ணை வீடு இருக்கிறது. அந்த இரண்டு பண்ணைகளுக்கும் நடுவில் 8 ஏக்கரில் மாந்தோப்பு பண்ணை வாங்கியிருக்கிறார் அஜீத். ஓய்வு நேரத்தில் அங்கேதான் இருக்கிறார்.

## மிஸ் தமிழ்நாடு!

**ஓ** நெஞ்சே படத்தில் சுபாபுன்ஜா நாயகி. இரண்டாம் நாயகியாகக் கவர்ச்சிக் களம் இறங்கியிருக்கிறார் ஷெர்லி. இவர் 'காதல் அரங்கம்', டாப்லெஸ் நடிப்பு, மொட்டைத்தலை சர்ச்சைக்கரிய ஷெர்லி அல்ல. புத்தம்புது ஷெர்லி. ஏற்கனவே 'மிஸ் சென்னை'யாகத் தேர்வாகி அப்புறம் மிஸ் தமிழ்நாடாகவும் தேர்வானார் இந்த அழகி.


ஸ்ரீகாந்த் - சம்விருதா
உயிர்




## எனது சிறகினைப் பிய்த்தெறி...!



எனது சிறகினைப்
பிய்த்தெறி...
இரத்தம் வடியட்டும்...
எனதாத்மம்
வாழ்த்தட்டும்...!

எப்போதெல்லாம்
பறக்க நான்
எத்தனிக்கின்றேனோ...
அப்போதெல்லாம் எனது
சிறகினைப் பிய்த்தெறிகிறாய்
நீ...
பிய்த்தெறி!

உனது சிறப்புக்காகவே
எனது பறப்பு இருக்கிறது...
என்றாலும் இதையுணராது
பிய்த்தெறிகிறாய் நீ...
பிய்த்தெறி!

இருளுக்குள்
வாழ்கின்ற உனக்கும்
உனக்குள்ளே வாழ்கின்ற
எனக்கும்
கறுப்பு ஜுலை தான்
என்றும்...!

சிறை உடைத்து
சிறகை விரித்து
சுதந்திர தேசத்தைக் காண
அருகதையாகவே காலம்
அலைக்கழிக்கப்படுகிறது!

இது தான்
உனதும், எனதும்
விதி...!

பரவாயில்லை
பிய்த்தெறி நீ!
பரவசப்பட்டுப்
போகிறேன் இப்போது நான்!
ஏனெனில்
உனது பிய்த்து
எறிதல்களாலேயே
புதுப்புதுச் சிறகுகள்
முளைக்கின்றன
இன்றெல்லாம் என்னிலே!

புதிய இந்தச் சிறகுகளால்
புதுத் தேசமொன்றைச்
சென்றடைவேன்
நாளை நான்
நிச்சயமாய்...!



நீயும் வா என்னுடன்
அங்கே போய்
நிம்மதியாய்க் குடியேற...



அதனால்த் தான்
கூறுகிறேன்...
எனது பழைய
சிறகுகள் அனைத்தினையும்
பிய்த்தெறி!
புதுத் தேசத்தைக் காண்போம்.

*–தமிழேந்திரன்.*

## நீ அருகிலிருக்கிறாய்...

நீ அருகிலிருக்கிறாய்...
என்
பஞ்சு இதயம்
பயம் என்ற நெருப்போடு
பழக்கம் கொள்கிறது;
நடுவில்
மௌனம் குளிர்
காய்கிறது.

நீ அருகிலிருக்கிறாய்...
ஓர் ஊமையனிடம்
தோற்றுப் போகிறேன்.

நீ அருகிலிருக்கிறாய்...
நானூறு மீட்டர்
ஓடிய
தமயந்தி தர்சாவைப் போல
இதயம் இளைக்கிறது.

நீ அருகிலிருக்கிறாய்...
தாஜ்மஹாலைத் தடவிய
அதே காற்று
என்னையும் தடவுகிறது.

நீ அருகிலிருக்கிறாய்...
புற்றுக்குள் புகும்
பாம்பு போல
கை
சீப்பைத் தேடி
சட்டைப்பையுள்
நுழைகிறது.

நீ அருகிலிருக்கிறாய்...
ஆமை வேகத்திலிருந்த
கவிதை
முயல் வேகத்தில்
முன்னேறுகிறது.

*–ஏ.என்.அப்துல் றஹ்மான்,*
*பட்டியடிப்பிட்டி.*

## அவஸ்தை

உன்னை நீ
இனங்கண்டு
கொள்ள
வேண்டுமா......?

உன் இரசனைகள்
புதுப்பிக்கப்பட
வேண்டுமா....?

நொடிக்கு
நொடி
செத்துப் பிழைக்கும்
இன்ப அவஸ்தை
வேண்டுமா...?

உன் இதயத்தை
இடம் மாற்று!

துன்பம்
ஏதும் இன்றியே
வலிகள்
வேண்டுமா...?

இன்பங்கள்
இரட்டிப்பாக
வேண்டுமா.....?

உன் நினைவுகள்
நீளமாக
வேண்டுமா....?

உனக்குள்
(உன்) அவளை
சிறைப்படுத்து!

*–நஸீஹா சம்சபாத்,*
*ஏத்தாலை.*

## நினைவுப் பிசாசு!

நீ
பார்க்காமல்
போன பொழுதில்
மூச்சுமுட்டி
செத்துப் போனது
ஒரு கவிதை...!

நீ
மேற்கத்தைய
மிரட்டல்
நான் - உனைத்
தீண்டும்
தீவிரவாதம்...!

ஓர்
புன்னகை
மருத்துவம்
இந்த
உலகக்
கவிஞனுக்கு
உயிர்ப்
பிச்சையாய்...!

நிலப்பரப்பெல்லாம்
உனக்குச்
சொந்தம்
நில நடுக்கம்
மட்டும்
எனக்கு...!

இந்தப்
பார்வையிலா
இத்தனை
பரவசம்!
இந்தப்
புன்னகையிலா
இத்தனை
புரட்சி...!

தாவணி
வருடல்
தசாப்தக் கனவு
மின்னல் மொழி
மிரட்டல்
மழை...!

எப்போதும்
மரணத்தின்
முன்
எச்சரிக்கையோடே
உன்னை
நெருங்குகிறேன்...!

அழகின்
கூர் முனையில்
உன்
உலகக்
கவிஞனின்
உயிரைப்
பறி...!

*–புத்தளம் நஸீம்*
*ரூமி.*

## கவிதை எழுதச் சொல்வாள்!

செம்பவள வாய் திறப்பாள்
சீர்வரிசை முல்லைப்பல் தெரிய...
மாம்பழக் கன்னமதில் - உள்ள
மனதைக் கவரும் குழி, கூர்
அம்பை நிகர்த்த விழியாள் - அவள்
அன்னம் நாணும் நடையாள்!
சும்மா சொல்லவில்லை - கவிதை
சொல்லி எழுத வைத்தாள்!

எட்டி ரெண்டு வயது இளமை
கொட்டிப் படைத்த வார்ப்பு - செந்தூர
பொட்டு வைத்த நுதலோ - வளர்
மூன்றாம் பிறையை ஒக்கும் - மான்

குட்டி வெருளுமாப்போல்
வஞ்சி அஞ்சும் அழகோ அழகு - தன்னை
பாட்டில் எழுத மட்டும் - ஞான
பார்வையால் சமிக்ஞை செய்தாள்!

புதுமை படைத்த பாவை, பூ
மெதுமை யுடைய பூவை
எதையும் தாங்கும் கோதை, கலை
எதுக்கும் அதி, தேவதை, தங்கப்
பதுமை புதுமைத் தோற்றம் பார்த்தால்
யாது மாகி நிற்பாள் - அவள்
எங்கும் நிறைந்து நிற்பாள் - என்
இதயக் கமலந்தன்னில் இருந்து
எழுதக் கவிதை சொல்வாள்.

*–அ.அரசரெத்தினம், சேனையூர் – 06.*

## நாளை – நானும்....!

உரிமைகள் பறிபோன
உலகில்
படிப்புகள் கூட
பரிகசிப்பாகிட
'உதவாக்கரை' பட்டங்கள்
உரிமையோடு
ஒட்டிக்கொள்கின்றன!

கலாசாலை
அழைப்புகளினின்று
கழன்று கொண்டாலும்,
தீவிரவாதி - திசை நோக்கி
திரும்பிப் பார்க்காவிட்டாலும்,
சந்தர்ப்பம் கிடைக்கும்
போதெல்லாம்
சமூம் வசைப்பாடுகிறது...
நான்
வழி தெரியாதவன் என்று!
பட்டங்களைச் சுமந்து
கொண்டு
கட்டாந் தரையில் காய்கறி
வளர்ப்பது எப்படி?
சட்டப் புத்தகங்களைப்
படித்துவிட்டு
சமாதானம் பேசாதிருப்பது
எப்படி...?
நன்றாகத் திட்டுங்கள்!
நாளை - நானும் ஒரு
ராஜாங்கம் நடத்துவேன்!

*–நா.ஜெயபாலன், பிபிலை.*

## நீ எனை விரும்பினால்...!

ஜூதாஸ் மரங்களின்
பூக்களால்
வேயப்பட்டதா?
உன் கூந்தல்
தோரணம்!

நீயாக எனை
விரும்பினால்...
விலைக்கு
வாங்குகிறேன்
எராம் பூங்காவும்
ஒரு இளவேனில்(ற்)
பொழுதும்!!!

*ஏ.ஆர்.எம்நுார்,திருமலை.*

## தெரிந்தது...!

உன் நடையில்
அழகு தெரிந்தது
உன்
வார்த்தைகளில்
அமைதி தெரிந்தது
உன் கண்களில்
காதல் தெரிந்தது
உன் கன்னத்தில்
காமம் தெரிந்தது
உன் பாதத்து
செருப்பு மட்டும்
உன் கையில்
தெரிந்தது!
அப்போது
நானுனக்கு
அண்ணனாகத்
தெரிந்தது!!

*–ஏ.எச்.எம்.ஆசிக்,*
*சிராஜ் நகர்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:*

*முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.*

## கிழவன் யோசிக்கிறான்

தள்ளாட்டம் தாளம்
போடுகிறது
முதுமை வயோதிபனுக்கு
எப்போதும்
முதல் மரியாதை
செய்கிறதோ?

மங்கல் கண் பார்வையோ
மிகச் சுருக்கத் தசைகளுக்குள்
புதைந்து போய்க்
கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் இளமையின்
துள்ளலுக்கு
விமர்சனமாயிருந்து
தசைத் தொகுதியின் கம்பீரம்
இப்போது
தொலைந்து போய்க்
கொண்டிருந்தது.

முத்துக்கள் உதிர்ந்த
அந்தப் பொக்கை வாய்
சவரம் காணாத முகத்துள்
தப்பாமல்
அசைபோட்டுக்
கொண்டிருந்தது!

வாழ்க்கைப் பயணத்தில்
தனக்கென வாழாமல்
தாய் தந்தை சகோதரங்கள்
பின்னாளில்
மனைவி, பிள்ளைகள் என்றும்
ஓய்ந்து போன நிலையில்
எதையோ துருவித் துருவித்
தேடிக் கொண்டிருந்தது.

சுண்ணாம்பு பாக்கு வெற்றிலை
புகையிலை என்று
பகுத்தெடுத்து
சின்ன உரலுக்குள்
இடத்தெடுத்து
அசைபோடத்
தயாராகி கொண்டிருந்தது

மீண்டும் கைகள்
துருவி எதையோ எடுத்தது
எச்சிலைப் பாதுகாக்கும்
மண் தாங்கிய
பழைய தகரப்பேணி

எரியும் தீபம்
அணையும் போது
மிகை ஒளி காட்டுவது
போன்றே
கிழவனின் முகத்திலும்
ஏதோ ஒளி
கீறலாக வந்து போனது
கடந்த கால மோகனங்களை
ஒரு கணம்
நினைத்துப் பார்க்கிறதோ?

*சுவிஸிசிலிருந்து,*
*விக்கி நவரட்ணம்.*

## உன்னை நான் விரும்பியிருந்தேன்

உன்னை நான்
விரும்பியிருந்தேன்
உயிராக மனதில்
நினைத்திருந்தேன்
உன்னை நீ மாற்றாமல் - இன்று
உன்னால் நான் பிரிகிறேன்

உனக்கு மட்டும் ஒளி கொடுக்க
வந்தேன்
ஊருக்கே விளக்காய் நீ
மாற்றிவிட்டாய்
உருக்குலைந்து நான்
போகமாட்டேன் இன்று
உன்னையே விட்டு செல்கிறேன்.

உடலில் உயிர் உள்ளவரை
உன்னை நான் மறவேன்
உனக்காக என்றும் வேண்டும்
உள்ளதில் நிதம் தொழவேன்.

*ரம்யா ராஜ்.*

## கடலுக்கென்ன கோபம்......?

கடலே
எதற்காக நீ
பெருக்கெடுத்தாய்
அலையே
எதற்காக நீ
உயர்தெழுந்தாய்...?

ஈழத்தமிழனின்
கண்ணீர் ஆறு உன்னிலே
சேர்ந்தா
நீ உயர்ந்தாய்....?

களச்சமரிலே
கருவாடாகிப் போனவர்
போக
மீதமிருந்தவரை
எருவாக்கிக் கொள்ளவா
ஓடிவந்தாய்....!

கடலம்மா
என்றுதானே அழைத்தோம்
ஆனால்
நீ காலனின்
அம்மாவாகினாயே...!

எமக்கு
பசித்தபோது
உளவு தந்துவிட்டு
உனக்குப் பசி எடுத்த
போது
நாங்களா இரை....!

படுத்திருக்கிறேன்
பூம்புகாரை
கடல் கொள்ளை
கொண்டதென்று
லெமோறியாவை கடல்
தின்றதென்று
இப்போ
அதை நேரிலேயே
பார்க்கவா
இப்படிச் செய்திருந்தாய்...

கல்லுக்குள்ளும்
ஈரமிருக்கும் போது
கடலுக்கு மட்டும் இல்லாமல்
போயிற்றே....?

இயற்கையை மனிதன்
வென்றான்
என்பதெலாம்
பொய்யானதோ...!

அனுமன்
இட்ட தீயிலே எரிந்து போக
மீதியை அழிக்கவா வந்தாய்
கடலே

கடலே
இவர் உனக்கு என்ன
செய்தாரென்று
அவர்க்கு குடலை செய்தாய்

துளி கட்டிய
கடலே ஏன் இப்போ பாடை
ஆனாய்...!

*கவிதை மட்டுவில்*
*ஞானக்குமாரன் (ஜேர்மன்)*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : ரி.கிருபாகரன்.
வயது : 24
முகவரி : P.O.Box - 80092,
Doha - Qatar.
பொழுதுபோக்கு: பத்திரிகை,
பேனா நட்பு.



பெயர் : பி. இஸ்மத்
வயது : 26
முகவரி : 48, நடுங்கால வீதி,
புத்தளம்.
பொழுதுபோக்கு : வாசித்தல்



பெயர் : எம்.பய்சீன்.
வயது : 28
முகவரி : Base Office,
P.O.Box - 22481,
Doha - Qatar.
பொழுதுபோக்கு : கிரிக்கட், பத்திரிகை



பெயர் : மா.சிவகரன்.
வயது : --
முகவரி : 39C, 1ஆம் மாடி,
கடற்காட்சி வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு : கவிதை, பேனா
நட்பு,




# கோடையிலும் அழகாய் ஜொலிக்க!

**கோடைக்** காலத்தில் வெயில் சுட்டெரிப்பதால் நமது உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதிலும் முகம் கறுத்துப் போவதுடன் ஆங்காங்கே பருக்களும் தோன்றி அழகைச் சிதைக்கின்றன.

வெயிலில் இருந்து நமது உடலைப்



பாதுகாப்பது எப்படி என்பது பற்றிப் பார்ப்போம்.

வெயில் காலங்களில் முகம் கறுப்பாவதைத் தடுக்க சன்ஸ்கிரின் லோஷன் பயன்படுத்த வேண்டும். கோடையில் எல்லோருக்குமே வியர்த்துக் கொட்டுகிறது. இது தவிர ஆங்காங்கே பரு ஏற்படுகிறது.

இதைத் தடுக்க நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

முகத்தை முதலில் ஆரஞ்சு சாறு கொண்ட கொட்டன் துணியின் உதவியால் துடைக்க வேண்டும்.

பிறகு பச்சை அரிசி மற்றும் மகிழம்பூவை கொளகொளவென்று பொடியாக அரைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பொடியை முகத்தில் தடவி மசாஜ் செய்து கொள்ள வேண்டும்.

பிறகு தக்காளி, வாழைப்பழம், ஆரஞ்சுசாறு, ஸ்ட்ராபெரி, ஆப்பிள் கூழ் கொண்டு மசாஜ் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் முகம் பளிச்சென மாறுவதை உணர்வீர்கள்.

கோடை காலத்தில் இரவில் படுக்கப் போவதற்கு முன்பு தேன், குங்குமப்பூ, மஞ்சள் சேர்த்து அரைத்து சாப்பிட்டு வரவும். இதனால் மேனி மினுமினுப்பாக மாறும்.

வெள்ளரிக்காய், மஞ்சள், வேப்பம்பூ சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்து வர முகம் மிகவும் பிரகாசமாய் ஜொலிக்கும்.

அருகம்புல்லை நீர் விட்டு அரைத்து, பிறகு வெல்லம் சேர்ந்து பருகி வர உடல் அழகும் முக அழகும் மிளிரும்.

முடி செம்பட்டை நிறமாக இருக்கிறதா? அதை கருகருவென்று மாற்ற சூப்பர் ஐடியா.

மரிக்கொழுந்து இலையையும், செம்பருத்திப் பூவையும் சம அளவில் எடுத்து மைய அரைத்து தலைக்கு தடவி வந்தால் சில நாட்களில் அதன் நிறம் கறுமையானதாக மாறும்.



எலுமிச்சை சாறு, தேன், இவற்றை சரிவிகிதத்தில் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவவும்.

ஒரு ஸ்பூன் தயிர், 1 ஸ்பூன் கடலை மாவு இவற்றை நன்றாகக் கலந்துமுகத்திற்குப் போட்டு 15 நிமிடம் கழித்து கழுவினால் முகம் பளபளப்பாகக் காணப்படும்.

தினமும் இரவில் முகத்திற்கு நல்ல மாய்சரைசர் தடவி வந்தால் சருமம் வறண்டு போகாமல் பாதுகாக்கலாம்.

தலைமுடி வறண்டு நுனியில் நிறைய வெடிப்பு காணப்பட்டால் அதை அவ்வப்போது டிரிம் செய்து கண்டிசனிங் செய்தால் தலைமுடி வறண்டு போகாமல் பாதுகாக்கலாம்.

உதட்டில் ஏற்படும் வெடிப்புக்கு வாசலின் தடவலாம். அல்லது இப்போது லிப்கார்டு கிடைக்கிறது. தேங்காய் எண்ணெயையும், வாசலினையும் தடவலாம்.

முகத்திற்குப் பப்பாளிப்பழம் நன்றாக பிழிந்து அதை பேக்காக போட்டால் சருமம் மிருதுவாகக் காணப்படுமாம்.

# குழந்தைகளுக்கும் செய்யலாம் மசாஜ்!

**பெரியவர்களுக்கு** மட்டும்தான் மசாஜ் தேவையா? அதுதான் இல்லை. பச்சிளம் குழந்தைகளுக்கும் முறையான மசாஜ் தேவை.



குழந்தைக்கு மென்மையான முறையில் தான் மசாஜ் செய்ய வேண்டும். வேகமாகவோ, அழுத்தம் அதிகமாகவோ செய்தால் எலும்பு முறிவோ, தசைப்பிடிப்போ ஏற்படக் கூடும். ஆலிவ் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயை லேசாக சூடாக்கி 20 நிமிடங்கள் வரை மசாஜ் செய்யவும்.

குழந்தைக்கு ஆழ்ந்த தூக்கம் வர மாலையில் மசாஜ் செய்வதே நல்லது.

குழந்தை நல்ல மூடில் இருந்தால் மசாஜ் செய்யத் தொடங்க வேண்டும்.

மசாஜ் எண்ணெயை முதலில் கையில் விட்டு நன்றாகத் தேய்த்துக் கொள்ளவேண்டும். பின்னர் குழந்தையின் தலையில் வைத்து லேசாகத் தட்டவும். அதன் பிறகு விரல்களால் தலையில் வட்டமாகத் தேய்த்து நெற்றி வரை மசாஜ் செய்யவும். 2 விரல், கால் மூக்கின் மேல் பாகத்தை மேல் நோக்கி இழுத்து விடவும்.

பிறகு மார்பு மற்றும் கழுத்தின் 2 பக்கமும் வட்ட வடிவமாக விரல்களைச் சுழற்றியபடியே மாலீஷ் செய்யவும்.

வயிற்றின் மீது மாலீஷ் செய்யும்போது தொப்புளைச் சுற்றியுள்ள பகுதியை தவிர்த்து விடுங்கள்.

# சின்னச் சின்ன பயிற்சியால் எடுப்பான முன்னழகு!

**இளம்** பெண்கள் பலர் தங்களுக்கு எடுப்பான முன்னழகு இல்லையே என்று நாள் முழுக்கக் கவலையில் மூழ்கிக் கிடக்கி றார்கள்.

ஆனால் வசதி படைத்த பணக்காரப் பெண்கள், நடிகைகள் போன்றோர் லட்சக்கணக்கில் செலவு செய்து செயற்கை மார்பகம் பொருத்திக் கொள்கிறார்கள்.

இதெல்லாம் அனாவசிய செலவு என்று தான் சொல்ல வேண்டும்.

எடுப்பான முன்னழகைப் பெற விரும்பும் பெண்ணா நீங்கள்? நாம் சொல்கிற படி தினமும் எளிய உடற்பயிற்சி செய்தால் போதும். சில மாதங்களிலேயே எடுப்பான முன்னழகைப் பெறுவீர்கள்.



இதற்கு நீங்கள் செலவழிக்க வேண்டியது நேரத்தை மட்டும் தான்!

***இனி பயிற்சியைத் தொடங்கலாமா?***

1. தரையில் நேராக சம்மணம் போட்டு உட்காரவும், இரு கைகளையும் பின்புறம் கொண்டு வந்து விரல்களை ஒன்றாக இணைக்கவும். மார்பை முன்னோக்கி கொண்டு செல்லவும்.

தொடர்ந்து 10 நொடிகள் இப்படியே வைக்கவும். பின்னர் சிறிது இடைவெளி விட்டு விட்டு இப்பயிற்சியை 10 முறை செய்யவும்.

2. மார்பு மற்றும் தசை நார்களை வலுவாக்கவே இப்பயிற்சி. இரு கைகளிலும் சம அளவு எடை உள்ள புத்தகத்தை எடுத்துக் கொள்ளவும். பின்னர் கைகளை நன்றாக உயர்த்தவும். சிறிது நேரம் அப்படியே வைத்திருந்து பின்னர் கைகளை நன்றாக உயர்த்தவும். சிறிது நேரம் அப்படியே வைத்திருக்க பின்னர் கீழே கொண்டு வரவும். தொடர்ந்து 10 முறை இப்படிச் செய்ய வேண்டும். புத்தகத்திற்குப் பதில் வேறு கணமான பொருட்களின் எடையை நாளுக்கு நாள் கூட்டிக் கொண்டே சென்றால் மார்பு வலுவானதாக மாறும்.

3. நேராக நின்று கொள்ளுங்கள். வலது முழங்கையைப் பின்னோக்கி கொண்டு சென்று பந்து எறிவது போல் சுழற்றவும். இதே மாதிரி 2 முழங்கைகளையும் தலா 10 முறை சுழற்றவும். பின்னர் 2 கைகளையும் ஒன்றாகச் சேர்த்து சுழற்றவும்.

4. சம்மணம் போட்டு உட்கார வேண்டும். கையை மார்புக்கு முன்னால் கொண்டு வந்து மடக்கவும். இப்போது இரு கைகளையும் முழங்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு 8 வரை எண்ணவும். பின்னர் முழங்கையை விடுவிக்கவும். இப்படி 10 முறை செய்யவும்.

5. வயிற்றுப் பகுதி அழுந்தப் படுக்கவும். கைகளைப் பின்புறமாக பிணையுங்கள். கழுத்து மற்றும் உடம்பை நேராக வைத்துக் கொண்டு, தலையை மேலே உயர்த்தவும். இதே நிலையில் சிறிது நேரம் இருக்க வேண்டும்.

6. நேராக நின்று கொண்டு முழங்கையை புஜம் வரை உயர்த்தி மடக்கவும். விரல்கள் ஒன்றையொன்று பிணைத்தபடி மார்புக்கு மேலாக வைக்க.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

20

பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

..............................

தே-அ. அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 20**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:**

**09.05.2006**

**பரிசுப் போட்டி இல - 18**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**எட்வட் வினோஜா,**
**2ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம்.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* –ஷோபா–

## இறால் - சைனீஸ் ஸ்டைல்

***தேவையான பொருட்கள் :-***

| | |
|---|---|
| உரித்த இறால் | - 500 கிராம் |
| தக்காளி சோஸ் | - 2 மேசைக்கரண்டி |
| மிளகாய் வற்றல் விழுது | - 1 மேசைக்கரண்டி |
| சைனீஸ் உப்பு | - 1 சிட்டிகை |
| மோனோ சோடியும் குளுடோமேட் | |
| கார்ன்.ஃ.பிளோர் | - 4 மேசைக்கரண்டி |
| இஞ்சி, பூண்டு விழுது | - 2 1/2 மேசைக்கரண்டி |
| முட்டையின் வெள்ளைப் பகுதி | - 1 |
| உப்பு | - 1 தேக்கரண்டி |
| தண்ணீர் | - 4 மேசைக்கரண்டி |
| எண்ணெய் | - 1 லீட்டர். |

***செய்முறை :-***

முட்டையின் வெள்ளைப் பகுதி, 3 மேசைக்கரண்டி கார்ன்.ஃ.பிளோர், 1/2 தேக்கரண்டி உப்பு, தண்ணீர், எண்ணெய் இவற்றைச் சேர்த்து கலவையைத் தயாரிக்கவும்.

அந்தக் கலவையில் இறாலை 20 நிமிடம் ஊர வைக்கவும்.

தக்காளி சாஸ், சைனீஸ் உப்பு, மீதமுள்ள கார்ன்.ஃ.பிளோர், பூண்டு விழுது, மிளகாய் வற்றல் விழுது ஆகியவற்றை ஒன்றாக கலக்கவும்.

தேவையான அளவு எண்ணெயைச் சூடாக்கி, ஊர வைத்த இறாலை பொன்னிறமாக வறுத்து எடுக்கவும்.

3 மேசைக்கரண்டி எண்ணெயை சூடாக்கி தக்காளி கலவையை 1 நிமிடம் வதக்கவும்.

இதில் இறாலைக் கலந்து மேலும் 5 நிமிடம் வதக்கவும்.

இறால் - சைனீஸ் ஸ்டைல் ரெடி!




**ஆனால்** அவர்கள் எனக்குக் கீழ்ப்படிவார்களோ? அங்கோ எல்லாரும் மடையன்கள்தான். இருக்கிற இரண்டே இரண்டு புத்திசாலிகள் அன்றைக்குப் பார்த்து, தற்செயலாய் வந்து தொலைந்திருந்தால் என்ன ஆவது? எல்லாமே பாழாகிவிடும். வேறு ஏதாவது வழி நான் கண்டு பிடிக்கவேண்டும். மறுபடி என் மண்டையை உடைத்துக் கொண்டேன். நூற்றுக்கு நூறு பலிக்கக் கூடிய ஒரு வழியை நிச்சயமாய்க் கண்டுபிடிப்போம் என்பதில் எனக்குக் கொஞ்சம்கூடச் சந்தேகமில்லை.

சிறிது தண்ணீர் குடிப்பதற்காக எழுந்தேன். யோசித்து யோசித்து எனக்குத் தலைவலி ஏற்பட்டு விட்டது. மறுபடி படுத்துக் கொண்டேன். கைக்குட்டையைக் கண் மீது போட்டுக் கொள்ளவில்லை. நிமிடங்கள் மெதுவாக நழுவிக் கொண்டிருந்தன. அந்த விளக்கு - கடவுளே! என்ன வெளிச்சம் கைக்குட்டையை நனைத்து மறுபடி கண்ணின்மீது போட்டுக் கொண்டேன். குளிர்ச்சி இதமாய் இருந்தது. இப்போது கனமாகவும் இருந்ததால் இமைகளின் மீது நன்கு பொருந்திக் கொண்டது. இனிமேல் இப்படித்தான் எப்போதும் செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் நான் தீர்க்கப் போகிற வஞ்சத்தைப் பற்றி நீண்ட நேரத்துக்கு திட்டமிடலானேன். நிஜமாகவே கண்முன்னே அது நிகழ்ந்து கொண்டிருக்கிற மாதிரி தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிந்தது.

அந்த இரவுகளிலெல்லாம் - ஏன், ஓரளவு பகல் வேளைகளில்கூட - நான் பாரிஸ் நகரத்தின் வீதிகளில் நடமாடினேன், சிறையிலிருந்து தப்பி வெளியேறியாகி விட்டாற் போல, தப்பிவிடுவோம் என்பதிலும், பாரிஸைத் திரும்ப அடைவோம் என்பதிலும் எனக்கு அப்படியோர் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. பிறகு, முதல் வேலை அந்தப் போலி சாட்சியைக் கணக்குத் தீர்ப்பதுதான்; அடுத்து, அந்தப் பொலிஸார். சரி, ஜூரர்கள் சமாச்சாரம் என்ன? அந்த அயோக்கியர்களைக் குஷாலாய் இருக்கும்படி விட்டு விடுவதா? பிரமாதமாய்த் தங்கள் கடமையைச் செய்துவிட்டதாக தங்களைத் தாங்களே மெச்சிக்கொண்டு வீடு



திரும்பியிருப்பார்களே அந்த முட்டாள்கள்! இரவுச் சாப்பாட்டை வைத்துக் கொண்டு காத்திருந்த பெண்டாட்டிகளிடமும், அண்டை அயலாரிடமும் தம்பட்டம் அடித்துக் கொண்டிருப்பார்கள் தங்களுடைய பெருமையை!

தொலையட்டும். அரசாங்க வக்கீல் அவர்களை வசப்படுத்திவிட்டார். இவர்கள் உண்மையில் பொறுப்பாளிகளல்ல; அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்ய வேண்டாம் என்று தீர்மானித்தேன்.

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

எவ்வளவோ வருடங்களுக்கு முன்பு தோன்றிய அந்த எண்ணங்கள் இன்று பயங்கரமான தெளிவுடன் முட்டி மோதிக்கொண்டு முன்னே வருகின்றன. ஓர் இளைஞனின் கற்பனைச் சிறையின் நிசப்தமும், தனிமையும் எவ்வளவு பலமாகக் கிளறி விடுகின்றன. இன்னும் கொஞ்சம் போனால் பைத்தியம் அல்லவா பிடித்திருக்கும்! எவ்வளவு ஜீவனுள்ள கற்பனைகள்! அத்தகைய சூழ்நிலையில் எந்த ஒரு மனிதனும் இரண்டாகப் பிரிந்து விடுவான். அவனுக்குச் சிறகுகள் முளைக்கின்றன. எங்கெல்லாம் விருப்பமோ அங்கெல்லாம் பறக்கிறான். அவனுடைய இல்லம், அவனுடைய தந்தை, தாய், குடும்பம், இளமைப் பிராயம், அவனது வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களையெல்லாம் அவன் காணுகிறான். அவனுடைய வளஞ்செறிந்த உள்ளத்தில் கற்பனைக் கோட்டைகளெல்லாம் நம்ப முடியாத தெளிவுடன் தோன்றுகின்றன. தான் கனவில் காணுபவற்றையெல்லாம் நிஜமாகவே வாழுவதாக அவன் நம்பத் தொடங்குகிறான்.

முப்பத்தாறு வருடங்கள் ஓடிவிட்டன. ஆயினும் என் வாழ்க்கையின் அந்தக்கட்டத்தில் என் மூளையில் உதித்த எண்ணம் ஒவ்வொன்றையும் இன்று எழுத்தில் வடிக்க எனக்கு எள்ளளவும் சிரமமாயில்லை.

என் பேனா தொடர்ந்து ஓடுகிறது.

சரி, ஜூரர்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்ய வேண்டாம். ஆனால் அரசாங்க வக்கீல்? என்ன நேர்ந்தாலும் அவரை மட்டும் விடக்கூடாது. மான்ட்டி கிறிஸ்டோ தயாரித்து வைத்திருந்தானே அதுபோல, நானும் அரசாங்க வக்கீலுக்காக ரெடியாய் வைத்திருந்தேன் தண்டனை.

ஆம், அந்த வக்கீல் எனக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். சிவப்பு அங்கி அணிந்த அந்தப் பிணந்தின்னிக் கழுகை எவ்வளவு குரூரமான முறையில் சாகடித்தாலும் நியாயமாகவே இருக்கும். ஆம்! இதுதான் நான் செய்ய வேண்டியது. பொய்ச் சாட்சியையும், பொலிஸ்காரர்களையும் தீர்த்துக் கட்டியவுடன் இந்த அயோக்கியனைக் கவனிக்கத்தான் என் முழு நேரத்தையும் செலவிட வேண்டும். ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்வேன். அதிலே நிஜமாகவே ஒரு பாதாள அறை இருக்க வேண்டும். அதற்கு நல்ல கனமான கதவுகள். இல்லாவிட்டால், அங்கே மெத்தை, சணல் பாய் முதலியன வைத்துக் கட்டி, சத்தம் வெளியே கேட்காதபடி செய்வேன். வீட்டை அப்படித் தயார் செய்து கொண்டதும், அவருடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து ஆளைக் கடத்திக் கொண்டு வந்துவிடுவேன். சுவரில்தான் வளையங்களெல்லாம் தயாராயிருக்குமே? நானே ஆசாமியை அதில் கட்டிப் போட வேண்டியதுதான்.

ஆகா! அதற்கப்புறமல்லவா இருக்கிறது வேடிக்கையெல்லாம்.

எனக்கு நேர் எதிரே அவரை நிறுத்திக் கொண்டேன். என் மூடிய கண்களின் வழியே அவரை அசாதாரணக் கூர்மையுடன் நான் காண முடிந்தது. அவர் என்னை நீதிமன்றத்திலே எப்படிப் பார்த்தாரோ, அதே போல் நான் அவரைப் பார்க்க முடிந்தது. அவருடைய மூச்சின் வெப்பம் என் முகத்தில் படுகிறதே! அந்த அளவுக்கு அந்தக் காட்சி தெள்ளத் தெளிவாய்த் தெரிந்தது. கிட்டத்தட்ட அவரைத் தொடுகிற மாதிரி மிக நெருங்கி, நேருக்கு நேராக இருந்தேன். ரொம்ப சக்தி வாய்ந்த விளக்கு; அவர் மீது ஒளி பாய்ச்சும்படி செய்திருந்தேனாகையால், அவர் கண்கள் பீதி வசப்பட்டுப் பளபளத்தன. அவரது சிவந்து வீங்கிப்போன முகத்தில் பெரிய பெரிய முத்தாக வியர்வை அரும்பிநின்றது.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

## *10 ஆண்டுகளுக்கு முன்பு நின்று போன சிறுமியின் இருதயம் மீண்டும் இயங்கியது: மருத்துவ உலகில் அதிசயம்*

**இங்கிலாந்தின்** சவுத் வேல்ஸ் பகுதியை சேர்ந்த இளம்பெண் ஹென்னா கிளார்க் 10 ஆண்டுகளுக்கு முன்பு இவர் சிறுமியாக இருந்த போது இருதய நோயால் அவதிப்பட்டு வந்தார். ஹென்னா கிளார்க்கின் இருதயம் இயங்க மறுத்ததால் அவருக்கு டாக்டர்கள் ஆபரேஷன் செய்தனர். இயக்கம் நின்று போன இருதயத்தின் அருகிலேயே தானமாகக் கொடுத்த இன்னொரு இருதயத்தை பொருத்தினார்கள்.

10 ஆண்டுகளாக அந்தப் புதிய இருதயம் செயல்பட்டு வந்தது. ஆனால் திடீர் என்று அந்த இருதயத்தை அவரது உடல் ஏற்றுக்கொள்ளவில்லை. மருந்து மாத்திரைகளும் அவரது உடலுக்கு ஏற்றுக் கொள்ளவில்லை.

இது பற்றி டாக்டர்கள் சோதனை செய்து பார்த்த போது 10 ஆண்டுகளுக்கு முன்பு நின்று போன அந்த சிறுமியின் இருதயம் மீண்டும் இயங்க ஆரம்பித்ததே இந்த மாற்றத்துக்கும் கோளாறுகளுக்கும் காரணம் என்பதைக் கண்டு பிடித்தனர்.

இதை அடுத்து டாக்டர்கள் ஹென்னாவுக்கு மீண்டும் ஒரு ஆபரேஷன் நடத்தினார்கள். தானம் கிடைத்த அந்த இருதயத்தை ஆபரேஷன் மூலம் அகற்றி விட்டனர். ஏற்கனவே இருந்த பழைய இருதயம் இப்போது நன்றாக செயல்படுகிறது.

நின்று போன இருதயம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இயங்க ஆரம்பித்து இருப்பதும் செயற்கையாகப் பொருத்தப்பட்ட இருதயத்தை டாக்டர்கள் அகற்றி இருப்பதும் மருத்துவ உலகில் இதுவே முதல் தடவை.

## சிறுநீர்ப்பை உருவாக்கப்படுகிறது

**பலவிதமான** நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய வகையில் அமெரிக்காவில் பரிசோதனைசாலையில் சிறுநீர்ப்பை உருவாக்கப்படுகிறது. வடக்கு கரோலினா வேக் ∴பாராஸ்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் இதை உருவாக்கியுள்ளார்கள்.

இதுவரை இது போன்று அங்கு பரிசோதனைசாலையில் உருவாக்கப்பட்ட சிறுநீர்ப்பைகள் ஏழு பேருக்குப் பொருத்தப்பட்டு அவை வெற்றிகரமாக செயல்டுகின்றன. மிகவும் சிக்கலான ஒரு மருத்துவக் கண்டுபிடிப்பு என அந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சிறுநீர்ப்பையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளால் சிறுநீரகமும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இந்தக் கண்டுபிடிப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்தக் கண்டுபிடிப்பு குறித்தும் இதனால் வரும் காலங்களில் நோயாளிகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்தும் கருத்து வெளியிட்ட ஹைதராபாத்தில் உள்ள



மூலக்கூற்று உயிரியல் தொழில்நுட்ப மைய முன்னாள் இயக்குநரும் எல்.வி.பிரசாத் கண்மருத்துவ மனையின் இயக்குநருமான டாக்டர்.பி.பால சுப்ரமணியன் அவர்கள், இந்தக் கண்டுபிடிப்பு நோயாளிகளுக்கு மிகவும் உதவக்கூடியது என்றும் தமது உறுப்பிலிருந்தே இயற்கையைக் கொண்ட செயற்கையாகக் தயாரிக்கப்படும் போது நோய் எதிர்ப்புச் சக்தி ஒரு பிரச்சினையே இல்லை என்றும் கூறுகிறார்.

## படியேறும் ரோபோ!



**நாளுக்கு** நாள் விஞ்ஞானத்தின் வளர்ச்சி கண்டு எல்லோரும் வாயில் கைவைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த வளர்ச்சியில் ரோபோ எனப்படும் மனித செய்கையை ஒத்த செயற்கை மனிதனை உருவாக்குவதில் ஜப்பானியர்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ‘நானும் இதை உருவாக்கி காட்டுவேன்’ என்று ஜப்பான் நாட்டு பட்டதாரியொருவர் கதிரை போன்ற ரோபோவினை அமைத்துள்ளார். இதன் பெயர் Wl - 16 III என்பது படிகளில் ஏறுவதற்கு முடியாத வயோதிபர்களுக்கு இந்த ரோபோ பெரும் உதவி செய்யுமாம். இதில் ஏறி உட்கார்ந்து அதற்குரிய கருவிகளை இயக்கினால் போதுமாம். படிகளில் மிக லாவகமாக ஏறிச் செல்லுமாம். என்னமாய் விஞ்ஞானம் வளர்கிறது பார்த்தீர்களா?

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"

மௌனப்பட மன்னன்





**'பொலிஸ் காமெடி'** என்றழைக்கப்படும் நகைச்சுவைப் பகுதிக்கு அடிக்கல் நாட்டியவர் மேக் ஸென்னட். பொலிஸ்காரன் என்றாலே சிரிப்பை வரவழைக்கக் கூடியவன் என்று எடுத்துக்காட்டியவர் இவரே. இவர் ஹாலிவுட்டில் 1913 அளவில் ஒரு ஏழெட்டு பொலிஸ்காரர்களை வைத்து சிறு படங்களை எடுத்து உலகத்தையே சிரிக்க வைத்தார். அந்தக் குழுவிற்கு 'கீஸ்டோன் காப்ஸ்' என்று பெயரிட்டார். இன்றைய அளவிலும் 'கீஸ்டோன் காப்ஸ்' படங்களிலிருந்து பல காட்சிகள், தாராளமாகவே வருவதை நம்மூர்ப் படங்களில் காணலாம். உலகத்தில் பல பாகங்களில் பலர் கீஸ்டோன்காப்ஸ் என்று சொன்னாலே உடனடியாக சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள். (அந்த கும்பலில் நானும் ஒருவன்.)

Keystonekops பொலிஸ்காரர்கள் எதையுமே தப்பித் தவறியும் சரியாகச் செய்ய மாட்டார்கள். அதுதான் அவர் நகைச்சுவைக்கு அடிப்படை. அந்த நாளில் அமெரிக்காவில் தீயணைப்புப் படை என்று தனியான அமைப்பு இல்லை. பொலிஸ்காரர்களே அந்த வேலையைச் செய்ய வேண்டும். ஸ்டேஷனிலிருந்து தீ பரவிக் கொண்டிருக்கும் இடத்தை எட்டிப் பிடிப்பதற்குள்ளாகவே இவர்களுக்கு பல வகையான இன்னல்கள். வேனில் ஏறுவதற்கு ஒரு போராட்டம். வழியில் வேனுடன் பலவகையான சிக்கல்கள். எல்லாவற்றையும் மீறிச் சேரும்பொழுது அந்தத் தீ அணைந்திருக்கும். இப்படிப் பலவகையான கதை அமைப்புகள், காட்சிகள் இதையெல்லாம் உருவாக்கிய நகைச்சுவை திரைப்பட மேதை மேக்ஸென்னட். கனடா நாட்டைச் சேர்ந்த இவர், குழாய் ரிப்பேர்களைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு தொழிலாளி. நடிப்பு ஆர்வத்தினால் தன் தொழிலையும் நாட்டையும் விட்டு விட்டு நியூயோர்க் வந்து சேர்ந்தார். துணை நடிகரானார். தொந்தியுள்ள பொலிஸ்காரர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் இவர் மனதில் பலவகையான எண்ணங்கள், காட்சிகள். விரைவிலேயே நகைச்சுவை நடிகராகி, இயக்குநராகி, தயாரிப்பாளராகி பல ஆண்டுகள் உலகத்தைச் சிரிக்க வைத்தவர் இவர்.

பின்னாளில் சரித்திரம் படைத்த பல ஊமைப் படக் கால நகைச்சுவை நடிகர்கள் இவர் படங்களில் நடித்தவர்கள்தான். அவர்களில் முக்கியமானவர்கள். சரித்திரம் படைத்த சிரிப்பு நடிகர்களான ஃபேட்டி ஆர்பக்கள், ஃபஸ்டர் சீட்டன் மற்றும் சார்லி சாப்ளின்...அந்நாளில் நகைச்சுவை ஊமைப் படங்கள் சில நிமிடங்கள்தான் ஓடும். ஒரே ஒரு சம்பவத்தை வைத்துப் படமே பின்னப்படும். வசனம் கிடையாது. சொல்ல வேண்டிய படமே வசனங்களை திரையில் காட்டுவார்கள். திரைக்கதை என்று எழுத மாட்டார்கள். அதற்கு முக்கியமான காரணம் அதை வேறு யாராவது திருடி விடுவார்களோ என்ற அச்சம்தான். சாதாரணமாக அப்படிப்பட்ட படங்களில் கதா பாத்திரங்கள் மூவர்தான் இருப்பார்கள். ஒரு இளைஞன், அழகான ஒருத்தி, ஒரு பொலிஸ்காரர் அவ்வளவுதான். பூங்காவிலிருக்கும் ஒரு பெஞ்ச் கதை முழுவதும் இதைச் சுற்றியே எடுக்கப்படும். பின்னாளில் சாப்ளின் இந்த மூன்று பாத்திரங்களும், ஒரு பூங்கா, பெஞ்ச் மட்டும் இருந்தால் போதும் படமெடுத்து விடலாம் என்று எழுதியே இருக்கிறார்.



நியூயோர்க் நகரத்தில் மியூஸிக் காட்சிகளில் நடித்துக் கொண்டிருந்த சாப்ளினுக்கு கையில் காசும் புகழும் கிடைத்ததே தவிர வாழ்க்கை சலிக்கவும் தொடங்கி விட்டது. பிறந்த நாடு அங்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தாய் இவைகளெல்லாம் அவரை மீண்டும் இங்கிலாந்திற்கே திரும்பிப் போகத் தூண்டியது. தாய்நாட்டில் சில நாட்கள் இருந்த பிறகு மீண்டும் அமெரிக்காவிற்குச் சென்றார். அப்பொழுது கார்னோ குழுவைச் சேர்ந்த ஒருவர் சாப்ளினுக்கு அவர் ஊரில் இல்லாத பொழுது வந்த தந்தியை காட்டினார். உங்கள் குழுவில் சாஃபின் என்றோ அந்த வகையில் பெயருடைய ஒருவன் இருக்கிறானா? அவனை உடனடியாக கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளச் சொல்லவும். தந்தி வரிகளைப் படித்த சாப்ளினுக்கு ஒன்றும் புரியவில்லை. நம் குழுவில் சாஃபின் என்று ஒருவரும் இல்லையே? என்றார். சாப்ளின் நண்பர் சொன்னார்: அவங்களுக்கு உன் பெயர் சரியாத் தெரியலை. சாப்ளினைத் தான் கூப்பிடுறாங்கையா என்றார். அந்தத் தந்தியை அனுப்பியவர்கள் (Key-stone Comedy film Company ) என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தன் பெயரை எழுதி ஒரு தந்தியை அனுப்பினார். அனுப்பிய அதே நாளில் உடனே தொடர்பு கொள்ளுமாறு பதில் வந்தது.

## லொஸ் ஏஞ்சல்ஸில்

மறுநாள் காலை அந்த நிறுவனத்தின் பாகஸ்தர்களில் ஒருவரான கெஸ்ஸல் என்பவரை சாப்ளின் சந்தித்தார். அன்றே அந்த நிறுவனம் சாப்ளினை மூன்று படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்தார்கள். வாரத்திற்கு சம்பளம் 150 டாலர்கள்! உடனடியாக ஒத்துக் கொண்டால் தன்னைத் தவறாக எடை போட்டு விடுவார்களோ என்ற எண்ணத்தில் வாதாடினார். சில நாட்களுக்கு



பிறகு சாப்ளினுக்கு ஒரு கடிதம் வந்தது. அதை எழுதியவர் லொஸ் ஏஞ்சலிஸிற்கு அருகே உள்ள ஹாலிவுட் நகரத்தில் நகைச்சுவை படங்களை எடுத்துக் கொண்டிருந்த மேக் ஸென்னட்.

***(தொடரும்)***

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 08

## ராணி லிவியாவின் அந்தரங்கம்

**ஒரு** தேசத்தினை ஆளும் அரச குடும்பத்தினரை தனி ஒரு ஆளாக இருந்து கொண்டு சதித்திட்டத்தின் மூலம் கைப்பற்றிய வரலாறு லிவியாவினுடையது.



சாதாரணமாக ஒரு நாட்டினை கைப்பற்றுவதாயின் அல்லது ஆட்சியைப் பிடிப்பதாயின் பெரும் படை திரட்டி ஓர் போர் நடவடிக்கையின் மூலமே அதனை நிறைவேற்ற முடியும். ஆனால் தனது உடல் அழகு மற்றும் கவர்ச்சியினை மட்டுமே வைத்துக்கொண்டு ரோம சாம்ராஜ்யத்தையே ஆட்டிப் படைத்தவள்தான் லிவியா.

ரோமாபுரியின் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவள் தான் லிவியா. ஓரளவு வசதியான குடும்பமாக இருந்தபோதும் அவளது குடும்பம் ஒரு செல்வச் செழிப்புள்ள ஓர் குடும்பம் அல்ல. ஆயினும் சிறுவயது முதலே லிவியாவின் அடிமனதில் ஓர் எண்ணம் உதித்துக்கொண்டே இருக்கும். "நான் ரோமாபுரியின் ராணி ஆக வேண்டும்". இதுவே அவளது முழு முதற் சிந்தனை. ஆயினும் அதற்குரிய எந்தவிதமான அடிப்படைத் தகுதியும் அற்ற நிலையிலேயே அவள் இருந்தாள். ஆயினும் ராணி ஆக வேண்டும் என்ற விருப்பம் மட்டும் அவளது மனதில் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அதனை விட பேராசை, வஞ்சக எண்ணம், சூழ்ச்சி, காம இச்சை போன்ற குணங்கள் அவளது பிறவிக் குணமாகவே காணபட்டது.

காலம் உருண்டோடியது. காண்போரை மயக்கும் கொள்ளை அழகு கொண்ட பருவ மங்கை லிவியா திருமண வயதை அடைந்தாள். அவளுக்கு ஓர் திருமணத்தினை நடாத்துவதற்குரிய ஏற்பாடுகளை அவளது தந்தை மேற்கொள்ள ஆரம்பித்தார். தான் ராணி ஆக வேண்டும் என்ற ஆசை நிராசையாகப் போகின்றது என்பதை அவள் அறிந்த போதும் அவளது அடிமனது ஆசை மட்டும் அடங்கவே இல்லை.

மற்றொருபுறம் எவர் நினைத்தாலும் அவள் அரச குடும்பத்தில் அங்கத்தவராக முடியாத துர்ப்பாக்கிய நிலையிலேயே காணப்பட்டாள். ஏனெனில் அப்போது ரோம சாம்ராஜ்யத்தை ஒகஸ்டஸ் மன்னன் ஆண்டு வந்தான். ஏற்கனவே திருமணம் முடித்திருந்த ஒகஸ்டஸ் மன்னனுக்கு ஓர் மகளும் அந்த மகளுக்கு கூட ஒரு குழந்தையும் இருந்தார்கள்.

தனக்கு ஓர் ஆண்வாரிசு இல்லாத நிலையில் குழந்தையாக இருந்த தனது பேரனையே அடுத்த வாரிசாக கூட ஒகஸ்டஸ் மன்னன் அறிவித்திருந்தான். இப்பேற்பட்ட ஒரு நிலைமையிலேயே லிவியாவிற்கு திருமணப் பேச்சு ஆரம்பமானது. செல்வச் செழிப்பு இல்லாத போதும் கூட அவளது மயங்க வைக்கும் அழகுக்காகவே பலரும் அவளைப் பெண் கேட்டு வந்தார்கள்.

ஆயினும் தனக்கு பேசி வந்த திருமண சம்பந்தங்களை எல்லாம் நாசூக்காக லிவியா மறுத்து வந்தாள். ஏனெனில் அவளின் மனதில் ஏற்கனவே ஒரு சதித்திட்டம் உருவாகியிருந்தது. அதை செயற்படுத்துவதற்கான தருணத்தினை எதிர்பார்த்திருந்தாள்.

தனது திருமணப்பேச்சிற்காக வந்த அனைத்து ஆண்களைப் பற்றியும் விபரமாக ஆராய்ந்து பார்த்தாள். இப்பேற்பட்ட நிலையில்தான் அவளின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற ஒரு திருமணப் பேச்சுத் தேடி வந்தது. அந்த மணமகனின் பெயர் திபேரியஸ், பெரும் செல்வந்தனான திபேரியஸ் அரச குடும்பத்துடன் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார். அதனைத்தான் லிவியா எதிர்பார்த்தாள். அதாவது அரச குடும்ப உறுப்பினராக வேண்டுமென்றால் முதலில் அரச குடும்பத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அவளது தாரக மந்திரமாக இருந்தது.

தற்போது சூழ்நிலை பொருந்தி வந்த நிலையில் திபேரியஸை மணப்பதற்கு தனது முழுச் சம்மதத்தையும் தெரிவித்தாள். திபேரியஸ் லிவியா திருமணம் வெகு சிறப்பாக இடம்பெற்றது. ரோம மன்னன் ஒகஸ்டஸ் உட்பட ஏராளமானோர் திருமணத்திற்கு வந்திருந்தனர். அது மட்டுமல்ல திபேரியஸ் இதற்கு அரச குடும்பத்தினருடன் இருந்த நெருக்கம் காரணமாக எந்த நேரமும் லிவியாவினால் அரண்மனைக்குச் செல்லக்கூடியதாக இருந்தது.

இதற்கு ஏற்றாற்போல திபேரியஸும் வணிக விடயமாக அடிக்கடி வெளியூர்ப் பயணம் மேற்கொள்கின்றவனாயிருந்தான். இது லிவியாவிற்கு மிகவும் வசதியாக போய்விட்டது. தனது பெரும்பாலான நேரங்களை அரண்மனையிலேயே கழிக்கத் தொடங்கினாள். மன்னன் ஒகஸ்டஸ் உடன் பேசும் பழகும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டு தனது சதிவலையினை விரிக்கத் தொடங்கினாள்.



(ரகசியங்கள் தொடரும்...)

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## தீக்ஷித்தின் அதிரடி வாதத்தால் ஆடிப் போனார் அத்துலத் முதலி

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதற்கு மூன்று வாரங்கள் முன்னதாக அப்போதைய அமைச்சர் அத்துலத் முதலிக்கும் இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித் துக்குமிடையில் நடந்த காரசாரமான உரையாடலின் சில பகுதிகள் மேலும் தரப்படுகின்றன.

### 158 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

4. ஒரு புறத்தில் இலங்கை மறுபுறத்தில் சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் மேற்கொள்ளப் பட்டுவரும் செயற்பாடுகள் குறித்து இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது. இச் செயற்பாடுகளால் எந்த விளைவுகள் ஏற்பட்டாலும், இந்தியாவுடனான நல்ல அயலுறவுகளிலேயே இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஸ்திரத்தன்மை ஆகியவை இறுதியில் தங்கியிருக்கிறதென்பதை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும். இது குறித்து எவ்வித மயக்கமும் தேவையில்லை. இந்த வகையில் பிராந்திய உறவுகளின் யதார்த்த நிலைமைகளைச் சரியான முறையில் இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. நீடித்து நிலைக்கக் கூடியதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான இணக்கமொன்றினைக் காண, இலங்கை அரசாங்கத்தோடு ஒத்துழைக்க இந்தியா இப்போதும் விருப்பமாகவுள்ளது. ஆனால் இலங்கை இதற்குத் திடசித்தத்துடன் முகங்கொடுக்க வேண்டும். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்குப் பிரதமர் ராஜிவ் காந்தி அனுப்பும் ஆக்கபூர்வமான செய்திகளுக்கு விசுவாசமாகவும் புத்திபூர்வமாகவும் முகங்கொடுக்கும் பட்சத்தில் தீர்வொன்றினைக் காண இந்தியா ஒத்துழைக்க விரும்புகிறது. இந்தியா எவ்வித கோரிக்கைகளையோ சிபார்சுகளையோ முன்வைக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடையும் இராணுவ நடவடிக்கையும் மேலும் சிக்கலாக்கியுள்ள நிலைமைக்குத் தீர்வுகாண, மேலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது, இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த விடயம்.

யாழ்ப்பாண மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்கள் மற்றும் 1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் ஏற்படுத்திய பாரதூரமான அழிவுகள் குறித்து இந்தியாவிடம் நேரடி ஆதாரங்களும் ஆவணங்களும் இருப்பதாக தீக்ஷித் கூறியதும், அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆடிப்போனார். இந்தியாவுக்கு எதிராக தவறான பிரசாரங்களைத் தொடர்ந்தும் இலங்கை மேற்கொண்டால், இலங்கைக்கு எதிராகத் தாம் பதில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டிவருமென்றும் தீக்ஷித் எச்சரித்தார்.

"அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை வெற்றிபெற



ஹிந்து பத்திரிகையின் இணையாசிரியர் என்.ராம்.

அனுமதிக்கமுடியாது என்று நீங்கள் கூறியதன் அர்த்தமென்ன? இராணுவ வெற்றிக்கு அனுமதியளிக்க விடாதவர்கள் இந்தியாவா? அல்லது புலிகளா?" என்று இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்தைப் பார்த்துக் கேட்டார் அமைச்சர் லலித் அத்துலத்முதலி. "இராணுவத் தாக்குதல் வெற்றிபெற எப்படி அனுமதிக்கப்பட

(அரசியல் தொடர்)

மாட்டாதென்பது பற்றி ஆறுதலாக சிந்தித்துப் பார்க்க வேண்டியது உங்களின் பொறுப்பு" என்று அத்துலத் முதலியைப் பார்த்துச் சொன்னார் தீக்ஷித். ராஜிவ் காந்தி ஜூலை முதலாம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பி வைத்த செய்தி குறித்து அவர் (ஜெயவர்த்தனா) என்ன கருதுகிறார்? என்று தீக்ஷித்திடம் கேட்டார் அத்துலத் முதலி. ஜனாதிபதியின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறிய தீக்ஷித், "சமாதானப் பாதையைப் பின்பற்றுமாறு ஜனாதி பதிக்கு நடைமுறைச் சாத்தியமான ஆலோசனைகளை நீங்கள் வழங்க வேண்டும்" என்றும் அமைச்சர் அத்துலத் முதலியிடம் தெரிவித்தார். தமிழர்கள் மேலும் இரு முக்கிய விடயங்கள் தமக்கு வழங்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க் கிறார்கள். அதாவது, தமிழர் தாயகக் கோரிக்கையை அங்கீகரித்தல், மற்றது வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி, ஒரு நிர்வாகப் பிரிவை ஏற்படுத்துவது ஆகிய இரண்டுமே இக் கோரிக்கைகளாகும். ஆனால் இவை இரண்டினையும் ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. யாழ்ப்பாணத் தமிழர்களின் ஆதிக்கத்திலுள்ள மாகாண சபையில் அங்கம் வகிக்கக் கிழக்கு மாகாண முஸ் லிம்களும் தமிழர்களும் சிங்களவர்களும் விரும்ப வில்லை என்று கூறினார் அதுலத் முதலி.

இதற்கு தீக்ஷித் பின்வருமாறு பதில ளித்தார். "நீங்கள் அரசியல் உண்மைகளைத் தவறாகக் குறிப்பி டுகிறீர்கள். மாகாண சபை அமைப்பு முறையின் கீழ், எந்தவொரு குறிப்பிட்ட பிரிவினரும் ஆதிக்கம் செலுத்துவார்களென்ற விடயம் இங்கு எழவில்லை. எனவே கிழக்கு மாகாண மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையால் நீங்கள் (அத்துலத்முதலி) இதனைக் கூறவில்லை. ஆனால், பேச்சுவார்த்தைத் தந்திரோபாயமாகவே இந்த வாதம் முன்வைக்கப்படுகிறது" என்று அத்துலத் முதலியைப் பார்த்துக் கூறினார் தீக்ஷித்.

சிறிது நேரம் யோசித்த பின்னர், லலித் அத்துலத் முதலி சொன்னார். "ஆம், சில வேளைகளில் இந்த

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பொறிமுறை மூலம் இந்தப் பிரச்சினையைப் கவனத்தில் கொள்ள முடியாமல் போகலாம்" என்று பதிலளித்தார். இலங்கை பாதுகாப்பு நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் போது, இலங்கைக்கு உதவி வழங்க விரும்பும் நாடுகளிடமிருந்து உதவி பெறுவதை இந்தியா எப்படி எதிர்க்க முடியும்? என்பதே அத்துலத்முதலியின் உரையாடல்களில் தொனித்தது. இதனைப் புரிந்து கொண்ட தீக்ஷித் சொன்னார். "குறிப்பிட்ட நாடுகளிடமிருந்து உதவி பெறுவதற்கான சுதந்திரம் இலங்கைக்கு உண்டு. ஆனால், இவ்வாறான செயற்பாடுகள், இந்தியாவின் பாதுகாப்பு விடயங்களிலும் பிராந்திய பாதுகாப்புச் சூழலிலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு அதேயளவு சுதந்திரம் இந்தியாவுக்கும் உண்டு. இவ்வாறானதொரு சிக்கலான சூழ்நிலையில், இந்தியா தனது குறுகிய கால, நீண்ட கால நலன்களைப் பாதுகாக்க எடுக்கவிருக்கும் உரிய நடவடிக்கைகள் குறித்துப் பின்னர் இலங்கை முறைப்பாடு செய்யக் கூடாது" என்றார் தீக்ஷித். இதனால் அமைச்சர் லலித் அதிர்ச்சியடைந்தார். மேலும் தொடர்ந்தார் தீக்ஷித். "முழு நிலைமைகளும் எமது பிரதமர் ராஜிவ் காந்தியின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை, அவர் ஆக்கபூர்வமாகவே சிந்திப்பார். எனவே இதற்கு இலங்கை ஆதரவாக இருக்க வேண்டும்" என்றும் சொன்னார் தீக்ஷித்.

தீக்ஷித் மீண்டும் ஜூலை மாதம் எட்டாம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்து, இனப் பிரச்சினைத் தீர்வு யோசனைகளை முன்வைப்பது பற்றிப் பேசினார். டிசம்பர் 19ஆம் திகதி யோசனைகளை மேலும் மெருகூட்டிச் சமர்ப்பிப்பதற்கு வேறு சில ஆலோசனைகளைத் தான் முன்வைக்க விரும்புவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தீக்ஷித்திடம் கூறினார். ராஜிவ் காந்தி அனுப்பிய செய்தி குறித்து ஜூலை மாதம் 16ஆம் திகதியில் தான் இறுதி முடிவு வழங்க விரும்புவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார். எனவே ஜூலை மாதம் ஒன்பதாம் திகதி முதல் அமைச்சர்கள் காமினி திசாநாயக்காவுடனும் லலித் அத்துலத் முதலியுடனும் கலந்துரையாடுமாறு தீக்ஷித்தை, ஜெயவர்த்தனா கேட்டுக் கொண்டார்.

என்.ராமுடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் அமைச்சர் காமினி திசாநாயக்காவும் நடத்திய கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் அக் கலந்துரையாடல்கள் தொடர்பாக ராம் புதுடில்லிக்கு அனுப்பிவைத்த அறிக்கையின் அடிப்படையிலுமே ராஜிவ் காந்தியின் செய்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் தீர்வு முயற்சிகளைப் பிரதமர் பிரேமதாசாவும் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் எதிர்ப்பதாகவும் அமைச்சர் காமினி திசாநாயக்கா, தீக்ஷித்திடம் கூறிவைத்தார்.

(தொடர்ந்து வடியும்....)




கோவிந்தனின் வல்லமை எத்தகையது என்று அவர்களுக்கு முழுமையாக விளங்கிவிட்டது போலிருந்தது.

"இவனைக் கொண்டு நாம் எப்படிப்பட்ட வேலையையும் செய்ய வைக்கலாம்" -ஜயந்தன் மகிழ்ச்சி நிறைந்த குரலில் கூறினார்.

"போதும் கோவிந்தா... வா போகலாம்!"

மூவரும் மறுபடி தேங்காய் கோடௌனுக்கு வந்தார்கள்.

"அந்த காலேஜ் வாத்தியார் இப்போது வீட்டுல இருக்கிறான். முடியுமானால் அவனை ஒருகை பார்த்துட்டு வந்திடேன்!" -ஜயந்தன், கோவிந்தனிடம் கூறினார்.

**எழுதுவது**
**சிவன்**

"முயற்சி பண்றேன்!" -கோவிந்தன் கூறினான்.

"அதெல்லாம் வேண்டியதே இல்லை. யானைகிட்ட நடந்துகிட்ட மாதிரியே அவன்கிட்டயும் நடந்துகிட்டாலே போதும்!" -ஜயந்தன் யோசனை கூறினார்.

கோவிந்தன் தலையாட்டியபடியே புறப்பட்டான்.

குமாரின் இல்லத்தை நோக்கி நடந்தவனின் கண்ணில், வழியில் கொழுத்துத் தடித்த காளை மாடு ஒன்று தட்டுப்பட்டது. கோவிந்தனது நாவில் எச்சில் ஊறியது.

சட்டென்று பாய்ந்து அந்தக் காளைமாட்டைப் பிடித்தான். அதனது சதைப்பிடிப்பான கழுத்துப் பகுதியில் அவனது பற்கள் பதிந்தன. முரட்டுத்தனம் நிறைந்த அந்தக் காளை அவனது பைசாசிகமான பிடியில் ஓர் எலிக்குஞ்சைப்போல் கிடந்து துடித்தது. சற்று நேரத்தில் உடலில் இரத்தம் சுண்டிய காளை அசைவற்று நிலத்தில் விழுந்தது. புதிதாகப் பெற்ற சக்தி மற்றும் வெறியுடன் குமாரின் இல்லத்தை நோக்கி விரைந்தான் கோவிந்தன்.

அப்போது ஸ்ரீதேவியும் குமாரின் இல்லத்திலிருந்தாள்.



கட்டிலில் படுத்திருந்த குமாரை அவள் தட்டி எழுப்பினாள்.

"யாரு... பிரபாகரனா?" -என்று கேட்டபடி கண் விழித்தார் குமார்.

"இல்லை... ஸ்ரீதேவி வந்திருக்கிறேன்... எழுந்திருங்க!"

குமார் எழுந்து உட்கார்ந்தார்.

"கொஞ்ச நேரம் வெளியில உட்காந்து பேசலாமே!" -அவள் அழைத்தாள்.

அவளது வார்த்தையில் ஏதோ ஓர் உட்பொருள் இருக்கிறது என்று அவருக்குப் புரிந்தது. எனவே மறுப்பு ஏதும் சொல்லாமல் அவளைப் பின் தொடர்ந்தார்.

"முதலில் நிலவிளக்கை ஏற்றுங்களேன்!"

அவர் அப்படியே செய்தார்.

விளக்கிலிருந்து வெளிச்சம் பரவத் தொடங்கிய போது துளசிமாடத்துக்கு அருகே யாரோ ஒருவர் நடந்து வருவது தெரிந்தது. இதை முதலில கவனித்த ஸ்ரீதேவி, குமாரிடம் சுட்டிக்காட்டிச் சொல்லவும் தவறவில்லை. தெளிவற்றுத் தெரிந்த அந்த மனித உருவம் துளசி மாடத்துக்கு அருகில் வந்ததும் நின்று கொண்டது.

"உங்ககூட மோதுறதுக்குத்தான் அந்த உருவம் வந்திருக்கிறதாத் தோணுது?" -ஸ்ரீதேவி கூறினாள்.

"யாரது?" -குமார் உரத்த குரலில் அந்த உருவத்தைப் பார்த்தபடி கேட்டார்.

"நான்தான் கோவிந்தன்!" -வந்த உருவம் பதிலளித்தது

"அப்படீன்னா புரியலையே?"

"புரியலையா? என்னோட முகத்தை விகாரமாக்கினது நீதானே. உன்னைப் பழி வாங்குறதுக்காக வந்திருக்கிறேன்." -கோவிந்தன் முன்புறமாக நகர முயன்றான்.

"அசையாதே. அங்கேயே நில்!" ஸ்ரீதேவியின் குரல் கட்டளைபோல் ஒலித்தது.

கோவிந்தன் அப்படியே நின்றுவிட்டு அவளைப் பார்த்துக் கேட்டான். "நீ யார்? என்னை எதற்காகத் தடுக்கிறாய்?"

"என் பேரு ஸ்ரீதேவி என்னைப்பத்தி உனக்கு மேற்கொண்டு ஏதாவது தெரியணுமா? இந்தா பார்த்துக்க!" -என்ற ஸ்ரீதேவி, நிலவிளக்கில் எரியாமலிருந்த ஒரு திரியை எடுத்து ஜுவாலையில் காட்டிப் பற்ற வைத்து, கோவிந்தனுக்கு முன்னால் வீசி எறிந்தாள்.

நெருப்பாலான பாம்பு மாதிரி பாய்ந்து வந்த எரியும் திரியைப் பார்த்த கோவிந்தன் வியப்பால் வாயைப் பிளந்தான்.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# வாழ்க்கை நெறி



**தியானத்தைப்** பற்றியும், மனத்தை ஒருமுகப் படுத்துவது பற்றியும், இப்பிரபஞ்ச பெருஞ்சக்தியுடன் மனத்தால் ஐக்கியமாவது பற்றியும் படிக்கும்போது பலர், "இது எனக்கு இப்போது தேவையில்லை, அந்திய காலத்திற்குத் தேவைப்படுகின்ற ஒன்று இது. மனிதன் வயோதிகத்தின் வாயிலில் உள்ளபோது ஏற்படுகிற பயம் இது; மனக் குழப்பம் இது; குற்ற உணர்வுகளின் பரிகாரச் செயல் இது" என்று பலவாறு தீர்ப்புக் கூறுகின்றனர்.

உண்மை அதுவல்ல. இது அந்திய நாட்களுக்குத் தேவைப்படுகின்ற ஒன்றல்ல. மனத்தை ஒருமுகப்படுத்தும் - சமப்படுத்தும் - தியான மார்க்கங்களைப் பயிற்சி செய்வதன் மூலம் நாம் நமது பல பிரச்சினைகளுக்கும் வழி காணலாம். அன்றாட வாழ்வின் நெருக்கடிகளைச் சமாளிக்கலாம். நேர்மையும் அன்பும் கலந்த ஓர் ஒருமைப்பாடு நம் உள்ளே உலவுவதால், நம்மிடையே ஒரு கற்புநெறி தோன்றுகிறது. நம்மால் முடியாத, நமக்கு மேற்பட்ட காரியங்களையும் இதனால் எளிதில் சாதிக்க முடிகிறது.

ஒருமையுடன் உறவு கொள்ளும் தியானப் பயிற்சி பற்றிப் படிக்கும்போது பலர், ஏதோ துறவியின் வாழ்க்கையையும் மனோபாவத்தையும் மேற்கொள்வதன் மூலமே இதை நிறைவேற்ற முடியும் என்று தவறாக எண்ணுகின்றனர். அதாவது, மனப்பயிற்சியையும் நல்லொழுக்கங்களையும், சிந்தனைகளையும், அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க முயல்வதில் உள்ள கஷ்டங்கள் அவர்களுக்குப் புலப்படுகின்றன. இதனால் மனிதன் இருவேறு உலகத்து வாழ்க்கை நடத்துகிறான்.

கோயில், குளம், ஞானிகள், மதம், மதச்சடங்குகள் என்று வரும்போது அப்பியாசிக்கும் ஒரு புனித மனோபாவம், அதைவிட்டுவிட்டு - அன்றாட வாழ்விற்கு வரும்போது அந்தப் புனிதத் தன்மையை அறவே விட்டுவிட்டு - 'இது நாயை நாய் தின்னும் உலகம். ஏமாற்று உலகம், வஞ்சக உலகம். அதற்கு ஏற்ப நான் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்ற மாறுபட்ட மனோபாவம் - கறைபடிந்த உலகம் என்று சொல்லிக்கொண்டு அதற்குத் தற்காப்பாக அவனும் கறைபடிந்த மனிதனாக, இறங்கிய நிலையில் வாழத் துவங்குகிறான்.

சொல்லும் செயலும் ஒன்றைப் பற்றி யொன்று செல்ல வேண்டும் என்கிறார் மகாத்மா காந்தி.

நமது புனித உள்ளம் - கோயிலில் உள்ளபோது எழும் தெய்வீக உணர்வு - எவ்வளவுக்கெவ்வளவு நமது அன்றாட நடைமுறை வாழ்வில் இறங்கிக் கலக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமது வாழ்க்கை சமமடையும்; உறுதி பெறும். தெய்வீகம் நாள் பூராவும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும், சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படும். அப்படி வாழ்க்கை நடத்துபவர்களையே காந்தி என்கிறோம், அன்னை தெரேசா என்கிறோம். அத்தகைய காந்திகளும் தெரேசாக்களும் எத்தனையோ பேர் நம்மிடையே வாழ்கிறார்கள். புகழும் விளம்பரமும் இல்லாது அவர்கள் கிராமங்கள், நகரங்கள் என்று எங்கு பார்த்தாலும் நம்மிடையே வாழ்கிறார்கள். அத்தகைய மனிதர்களின் வாழ்க்கைத் தர்மங்களினால்தான் மழை பெய்கிறது. மனித வாழ்வு முன்னேற்றம் பெறுகிறது.

அத்தகைய வாழ்வைப்பற்றி எண்ணும்போது நம்மில் பலரும் ஓர் அப்பழுக்கில்லாத வாழ்க்கையைப் பற்றி எண்ணிக்கொண்டு, நமது வாழ்க்கையில் சிறு தவறு நேரும்போதெல்லாம் நம்மை நிந்தித்துக் கொள்கிறோம்; புண்படுத்திக் கொள்கிறோம். இது தேவையில்லாத ஒன்று.

மனிதன் நல்ல எண்ணத்துடன் முயல வேண்டும். செயல்பட வேண்டும். தவறுகளுக்காகக் கரைந்து கொண்டிருக்கக் கூடாது. தவறை உணர்ந்து அடுத்தமுறை செய்யாதவாறு தற்காப்புக் கொள்ள வேண்டும். காந்தி எத்தனையோ தவறுகளைச் செய்தார். மகாத்மா காந்தி கூறுகிறார்: 'எனக்கு சமயத்தில் கோபம் வருகிறது. (கோபம் போல பல மனித குறைகளையும் இங்கே சேர்த்துக் கொள்ளுங்கள்) ஆனால் சதா என் குறைகளை உணர்ந்து குறைகளை மீறி வர முயல்கிறேன்.'

வாழ்க்கை ஒரு தொடர்ந்த பரிசோதனை; போராட்டம். ஒவ்வொரு சமயமும் நாம் அச்சோதனையில் வெற்றி காண முயல வேண்டும். முதலில் பல முறை தவற நேரிடும். நாளாக ஆக, பின் தவறுகள் குறைந்து பல முறை வெற்றி காண வழி பிறக்கும். சோதனைகளில் அதிக முறை வெற்றி பெறும்போது அது நம்முடன் நமது பழக்கமாகத் தங்கி விடுகின்றது.

எல்லாவற்றிற்கும் அடிப்படை மனப் பழக்கம்தான்.

நாம் நம்மீதே அதிகம் கருணை காட்டுவதில்லை; ஒவ்வொரு முறை தவறு செய்யும்போது நம்மைச் சித்திரவதை செய்து கொள்கிறோம். இந்த முறை தவறு நேர்ந்தது என்று நினைப்பதற்குப் பதில் நான் எடுக்கும் எல்லாக் காரியங்களுமே நடைபெறுவதில்லை என்று நம்மைப்பற்றி நாமே தீர்ப்புக் கூறிவிடுகிறோம். இதை நமது மனம் நம்பத் துவங்கி விடுகிறது. பிறகு அதுவே எப்போதும் தவறு செய்யும் போக்கிற்கு வழிகாட்டியாய் அமைந்துவிடுகிறது.

மகாத்மா காந்தி, அன்னை தெரேசா போன்றவர்களின் வாழ்க்கையைப்பற்றிப் படிக்கும்போது, அவர்களும் நம்மைப் போன்ற, மனிதர்கள்தான் என்பதை நாம் உணரவேண்டும். நடைமுறை வாழ்க்கையை எப்படி வாழ்ந்தார்கள் அவர்கள் என்பதை நுணுக்கமாக ஆராயும்போதுதான் நமக்குப் படிப்பினைகள் புலப்படும். என்ன அந்தப் படிப்பினைகள்?

அவர்களுக்கு மகத்தான லட்சியம் இருந்தது. அதற்கும் மேலாக அந்த லட்சியங்களை அடைய அவர்களிடை ஒரு வாழ்க்கை நெறி இருந்தது.

வாழ்க்கை நெறி இல்லாது எந்தப் பெரிய லட்சியத்தையும் நாம் அடைய முடியாது. அவர்களது வாழ்க்கை நெறி இவ்வுலக இயக்கத்தின் மாறா உண்மைகளிலிருந்து பெறப்பட்டவை.

அந்த நெறிகள்: (1) மனத்தை ஒருமைப்படுத்தும் பிரார்த்தனை. (2) உயிர்கள் எல்லாம் சமம், வாழ்க்கை புனிதமானது என்ற நம்பிக்கை. (3) வாழ்வின் பயன் பிறருக்குத் தொண்டுபுரிவதே - இவ்வுலகம் பரஸ்பர ஈடுபாட்டில் இயங்குகிறது என்ற உணர்வு.

அந்த வாழ்க்கை நெறிகளைக் கொஞ்சங் கொஞ்சமாக வாழ்வில் கடைப்பிடிக்க முயலும்போது நமது அன்றாட நடைமுறை வாழ்க்கையில் ஒளி வீசுகிறது; மணம் வீசுகிறது. தெய்வீக வாழ்க்கையாக மாறுகிறது.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 165க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம்.எம்.எப். ருமானா, 90, ஹெம்மாத்தகம வீதி, மாவனல்ல.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எம்.ஜே. பெர்னாண்டோ, புனித லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை.
2. இ.லெ.ரியால், 367/1 ஊர் வீதி, காத்தான்குடி - 05.
3. எஸ்.பிரியா, எல்லப்பர் மருதங்குளம், வவுனியா.
4. என்.திபோஜினி, வம்மியடி வீதி, நற்பிட்டிமுனை - 06, கல்முனை.
5. திருமதி. பி. லக்ஷகாந்த், 38, வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.
6. திருமதி. ஆர். சிவஞானம், 43/1, புகையிரத வீதி, மட்டக்களப்பு.
7. மு.க.ஸிஹார், 18, வி.சீ. வீதி; பெரியநீலாவணை - 02, மருதமுனை.
8. நா.விஷ்ணுவர்த்தன், 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு, கல்முனை.
9. ச.ஜெயகரன், 69, மாமாங்ககோவில் வீதி, மாமாங்கம், மட்டக்களப்பு.
10. ஏ.சீ. சர்மிளா, 7/1, நீர்கொழும்பு வீதி, ஒலியமுல்ல, வத்தளை.

## குறுக்கெழுத்துப் போட்டி 167

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | ■ | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| ■ | 26 | ■ | 28 | 29 | ■ |
| 31 | 32 | 33 | ■ | ■ | 36 |

### இடமிருந்து வலம்

1. எருது என்றும் கூறலாம்.
4. சூதாட்டத்தின் ஒரு வகை (குழம்பியுள்ளது).
7. வியப்பு என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
11. பசளை என்றும் கூறலாம்.
13. மறைவு அல்லது மறைப்பு என்று பொருள் (குழம்பியுள்ளது).
21. நட்சத்திரம்.
28. அரசன் என்றும் பொருள்படும்.
31. ஏடு அல்லது புத்தகம் (குழம்பியுள்ளது).
36. நாக்கு.

### மேலிருந்து கீழ்

1. திசைகாட்டியில் பயன்படுத்தப்படும் பொருள்.
2. பயன் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
5. நிறை என்றும் கூறலாம் (தலைகீழ்).
6. கிருஷ்ணரின் வாகனம். ஓர் பறவை.
9. பாட்டு என்றும் கூறலாம்.
22. நிலம் அல்லது பூமி என்றும் பொருள்படும் (தலைகீழ்).
23. கடல் வாழ் உயிரினமொன்று.
26. இரத்த ஓட்டத்துடன் சம்பந்தப்பட்டது.

## குறுக்கெழுத்துப் போட்டி 165 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பு | 2 த் | 3 தி | 4 ற | 5 ன் | ■ |
| 7 த | 8 சி | 9 உ | 10 ம் | ■ | 12 ஆ |
| 13 ன் | 14 தி | 15 ற | 16 க | 17 ண | ■ |
| ■ | ■ | 21 ம் | ■ | 23 ச | 24 கை |
| 25 ஆ | 26 லை | ■ | 28 பு | 29 ம் | 30 தி |
| 31 தி | 32 மா | ■ | ■ | ■ | 36 மொ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 09.05.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-167
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

- வழங்குவது றாஹில்

## சுவாசிக்கின்ற நரகமா நீ?

உன் உணர்வுகள் கடவுளை நோக்கிச் சிறகு விரிக்கின்ற போது நீ ஒளி அடைகிறாய்.

இறைவனின் இருப்பை நீ உன் கற்பனைக்குள் கொண்டுவருகின்றபோது உன் பாத்திரத்தில் பால் நிரம்புகிறது.

நீ இறைவனை நினைக்கத் தொடங்கும்போது உனது அகம் வளர்வதற்கு ஆரம்பிக்கிறது.

இயற்கையின் நிகழ்வுகள் உனக்கு ஆசிரியனாகினால் உனது முட்கள் முகவரி இழந்து விடும்.

உனது கவலைகள் உனக்குப் புதைகுழி தோண்டுகின்றன.

உன் மனதில் வெடிப்பு நிகழும் போது விழிகள் கால்வாய்களாகின்றன.

உன் வார்த்தைகளின் ஈரம் காய்ந்து விடுகிறது.

நீ உன்னைத் தொலைத்துவிட்டுத் தேடிக் கொண்டிருக்கிறாய்.

உன் இதயத்தில் நெருப்பு விதைத்துவிட்டு ஒவ்வொரு வினாடியிலும் எரிந்து கொண்டிருக்கிறாய்.

நீ உன்னை இறைவனுக்கு எழுதிக் கொடுக்கும்போது உன் சோகம் ஆவியாக ஆரம்பிக்கிறது.

உன்னில் எரிகின்ற தீக்கு மழை செய்யத் தொடங்குகிறாய் நீ!

நீ உன் முற்றத்தைச் சுத்தமாக்கும்போது உன் வீடு பளிச்சிடுகிறது.

நீ உன் வேருக்கு நீர்வார்க்கும்போது உன் மனச்செடியில் மலர்கள் முளைக்கின்றன.

உனது வேர் பக்தி என்பதை நீ கண்டுபிடிக்கும் போது கடவுள் உன்னை நோக்கி வருகிறான்.

நீ உன்னை வெறுக்கும் போது இறைவன் உன்னை நிராகரிக்கிறான்.

நீ உன் தோற்றத்தையும் உனது ஆக்கத்தையும் மறக்கின்றபோதும் கடவுளின் சிறையிலிருந்து நீ தப்பிச் செல்கிறாய்.

அப்பொழுது உனது வாழ்க்கை விபத்தாகிறது.

உனது வெற்றி அழிந்துவிடுகிறது.

உன் உயிரால் நீ கடவுளை அழை!

உனது கவலைகள் முற்றுப்புள்ளி அடையும்.

உன் மனதை பக்தியால் நிரப்பு.

உன்னிலிருந்து ஒளி வழியும்.

பாவங்களால் நீ உன் நாட்களைச் செய்யும்போது நிரந்தர இரவு உன்னில் உண்டாகிறது.

உன் உயிரைக் கடவுள் நினைப்பால் கழுவு!

உன் மூச்சுக்கள் புனிதமடையும்.

நீ உன்னிலிருந்து உன்னைக் கண்டெடு! நீ

வார்த்தைகளாலும் பிறர்நோய் தீர்ப்பாய்.

பக்தி உனக்குள் முளைத்திருக்கின்ற சொர்க்கம்.

நீ அதை அடையாதவரை சுவாசிக்கின்ற நரகம்

நீ!

# கண்ணீருடன் காத்திருக்கிறாள்

**அன்று** விடியற்காலை தனது பரம்பரையாகப் பராமரித்து வரும் ஆலய திருவிழாவையிட்டு ஆயத்தப்படுத்துவதற்காக ரெலிபோனைச் சுழற்றுகிறாள் லதா. மறுபுறத்தில் "ஹலோ வணக்கம்" என்ற இனிமையான குரல். "வணக்கம்" என்றவள் "நீங்கள் யார் பேசுகிறீங்க" எனக் கேட்டாள். நான் நிஷான் பேசுறேன் என்றும் தங்களுடன் நிரம்ப பேச வேண்டியுள்ளது. இரவு எட்டு மணிக்கு பேசுவதாகவும் கூறி முடித்துக் கொண்டான்.

ரெலிபோன் எண்கள் மாறி சுழற்றப்பட்டதையிட்டு பதற்றமும் பரபரப்புமாக சஞ்சலத்துடன் காத்திருந்தாள் லதா. மணிக்கூட்டைப் பார்த்தாள் இரவு எட்டு மணியை எட்டிக் கொண்டிருந்தது. தொலைக்காட்சியில் இரவுச் செய்திகள் ஆரம்பமாகியபோது ரெலிபோன் அடித்தது. கதி கலங்கியபடி ரிசீவரைத் தூக்கினாள். "நான் நிஷான் பேசுகிறேன். காலையில் கூட்டத்தில் இருந்தமையால் பேச முடியவில்லை" என சந்தோசமான குரலில் கூறினான் அவன். எப்படி எனது ரெலிபோனுக்கு எடுத்தீர்கள் எனக் கேட்க, இவள் பதற்றத்துடன் தங்கள் ஆலய திருவிழா வருவதாகவும் அதற்குக் கோயிலை அலங்கரிக்க தனது பெரியப்பாவின் மகன் ரூபனுக்கு எடுத்ததாகவும் இதில் எண் வித்தியாசப்பட்டு சுழற்றப்பட்டமையால் தொடர்பு ஏற்பட்டதாகவும் கூறினாள். இதனை ஏற்றுக் கொண்ட நிஷான் அன்றைய தொடர்பை நிறுத்தினான். இவன் உரையாடிய போது தன்னைத் தெரியும் எனக் கூறியபோது தான் தனது குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகி வரும் மரியநாயகத்தின் மகனின் நண்பன் தான் நிஷான் என இவள் தெரிந்து கொண்டாள். இத்துடன் தனது வழமையான வேலைகளை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் சென்றாள்.

மறுநாள் காலை பத்து மணிக்கு ரெலிபோன் மணி அடித்தது. ஹலோ நான் நிஷான் பேசுகிறேன் என்றவன், தனது வாழ்க்கை பற்றி யோசிப்பதாகவும் நேரில் வந்து சந்தித்துப் பேசுவதாகவும் சொன்னான். வேண்டாம் என்பதா விடுவதா என்ற ஒரு விதமான பயத்துடன் சம்மதிக்கிறாள் - கனவுலகில் சஞ்சரித்தாள். அவனோ தனது முகம் காணாத காதலியுடன் தினமும் இரவில் ரெலிபோனில் உரையாடுவான்.

அன்று வெள்ளிக்கிழமை. காலை வேலைகளை முடித்துக்கொண்டு கோயிலுக்குப் போக ஆயத்தமான வேளை ரெலிபோன் ஒலித்தது. "ஹலோ நான் மன்னாருக்கு வந்து விட்டேன். உங்கள் வீட்டுக்கு முன்னால் நிற்கிறேன். வெளியில் வாருங்கள்." அவளுக்குப் பொறி கலங்கியது. கதவைத் திறந்து வீதியைப் பார்க்கிறாள். மோட்டார் சைக்கிளுடன் கம்பீரமான இளைஞன் வாசலில் நின்றபடி பூவாய் புன்னகைத்தபடி நிற்க, அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியுடன் "வாருங்கள்" என வரவேற்கிறாள். வந்து சோபாவில் அமர்ந்தவனை விழி மலர நோக்கினாள். நான் தான் நிஷான் எனக் கூறியபடி தனது அடையாள அட்டையை நீட்டுகிறான். இவள் அதனை கையில் வாங்கவில்லை. நிஷான் என ஏற்றுக் கொண்டதுபோல் அவள் விழி மலர ஓர் தலை அசைவு. காலை ஐந்து மணிக்கு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டு வந்ததாகக் கூறியவனைப் பார்த்தவளுக்கு அனுதாபமும் ஒரு வகை அன்பும் மேலிட்டது. சோடாவை கொண்டு வந்து குடிக்கும்படி கூறினாள். எல்லா விடயங்களையும் பரிமாறிக் கொண்டபின் அறையைக் காட்டி "இதில் நீங்கள் தங்கலாம்" எனக் கூறுகிறாள். அன்றைய உபசரிப்புடன் மறுநாட் காலை ஐந்து மணிக்கு மட்டக்களப்பு பயணமாவதாக லதாவிடமிருந்து விடைபெறும் நிஷானை வாசலில் நின்று புன்னகையுடன் வழியனுப்பினாள். அன்று அவனுக்கு அந்த மூன்றெழுத்து வைரஸும் மெல்ல மெல்ல ஆக்கிரமித்துக் கொண்டது.



-லதா, மன்னார்.

அன்று இவள் தன் சுய நினைவு இழந்தாள். பசி, தூக்கம் மறந்து கற்பனையில் மிதந்த போது இரவு பத்து மணிக்கு ரெலிபோன் ஒலித்தது. வழமைபோல் ஹலோ லதா என்றவன், தான் அவளைத் திருமணம் செய்யப் போவதாகவும், தனக்கு யாரும் இல்லை எனவும், ஓர் குடும்பத்தில் வளர்ப்பு மகனாக இருப்பதாகவும் கூறுகிறான். இந்நிலையில் கடலின் சீற்றத்தால் தனது தாய் தந்தை உறவுகளை இழந்த லதா, இவனை தான் திருமணம் செய்தால் எதிர்காலம் சிறப்பாக அமையும் என எண்ணியவள், கொஞ்சம் கொஞ்சமாக அவன் வசமானாள். சம்மதத்தை தெரிவித்தவளுக்கு தனது பெயரில் முதல் எழுத்துப் பொறிக்கப்பட்ட பென்ரனை அவளது கழுத்திலுள்ள சங்கிலியில் போடுகிறான். இப்படியாக ரெலிபோனில் தினமும் உரையாடுவதும் மாதத்தில் இரண்டு தடவைகள் வீட்டுக்கு வருவதுமாக கனவுலகில் சஞ்சரித்தான். இவர்களது காதல் உல்லாசமாக உலா வந்தது. தனது குடும்பத்தினரை இழந்து துன்பத்தில் மிதந்த லதாவுக்கு, நிஷானின் அன்பான வார்த்தைகளும் அவனது அரவணைப்பும் இவன் தான் கடைசிவரை கண் கலங்காமல் காப்பாற்றுவான் என எண்ணியவள், பல எதிர்பார்ப்புக்களுடன் நிஷானை கணவனாக ஏற்று தனது வாழ்க்கையை ஆரம்பிக்கிறாள். எப்பொழுதுமே எதிர்பார்ப்பு என்பது எமது எண்ணங்களை சிகரத்தை நோக்கித்தான் நகர்த்தும்.

நாட்கள் கடந்தன. எதிர்பாராத விதமாக பிரஜாவுரிமை கிடைத்து, தனிமையாக வாடும் தனது அக்காவைப் பார்க்க பன்னிரெண்டு வருடங்களுக்குப் பின் லண்டனிலிருந்து தனது தாய் நாட்டுக்கு வருகிறான் இவளது தம்பி கண்ணன். வந்திருந்த தம்பியாருக்கு நிஷானை அறிமுகப்படுத்தி, தான் திருமணம் செய்யப் போவதாகக் கூறுகிறாள். இதற்கு சம்மதித்த தம்பியாரை தனது ஊருக்கு வரும்படி கூறி வானில் லதாவையும் தம்பியாரையும் கூட்டிச் சென்று தனது ஊர்க் கோயிலில் லதாவுடன் நின்று புகைப்படமும் வீடியோவும் எடுத்துக் கொண்டான். பின் தனது உறவினர் வீட்டுக்கும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துகிறான். பின்னர் சில நாட்களில் லண்டன் திரும்பிப் போகும் தம்பியாரை விமான நிலையம் வரை சென்று வழியனுப்புகிறான் நிஷான். தம்பியாரும் அக்காவுக்குக் கிடைத்தவனையிட்டு உள்ளம் நிறைந்திருக்க விடை பெற்றுச் சென்றான்.

இப்படியாக மாதங்கள் கடந்தன. வருடமும் முடிந்தது. வழமை போல் வீட்டுக்கு வந்த நிஷான், மறுநாள் காலை வளர்ப்புத் தாயின் வீட்டுக்குப் போவதாகக் கூறிச் செல்கிறான். போனவன் மாலை ஐந்து மணிக்கு ரெலிபோனில் தான் சுகமாக போய் சேர்ந்ததாகவும் தனது தாய் உங்களுடன் கதைக்கப் போவதாகவும் கூறிய சில செக்கனில், மறுபுறத்தில் ஹலோ என ஓர் பெண் குரல். "லதா வணக்கம்" என்றதும் இவளும் அறிமுகமில்லாத சஞ்சலத்துடன் வணக்கம் என்றாள். எல்லாம் மகன் மூலமாக அறிந்ததாகவும் தனிமையில் இருக்க வேண்டாம் எனவும் கூறி தனது வீட்டுக்கு வந்து தங்களுடன் இருக்கும்படி அழைக்கிறாள். லதாவுக்கு பதில்கூற முடியவில்லை. தெரியாத அறிமுகமற்ற குரல். தைமாதம் வருவதாக கூறி முடித்துக் கொள்கிறாள். நிஷானின் தாயாரும் தன்னுடன் உரையாடியதையிட்டு மகிழ்ச்சி பொங்க, நல்லதொரு காதலாகவும் நட்பாகவும் மலர்ந்து காலம் நகர்ந்தது. இவனது படிப்பும் இந்தியாவில் தொடர்ந்து கொண்டிருப்பதால் தனது சிரமத்தையும் பாராது இவள் கொழும்பிற்கு வந்து வழியனுப்புவது வழமையானது.

இந்த வேளையில் ஒருநாள் காலை ரெலிபோன் ஒலித்தது. நிஷான் என்ற ஆர்வத்தில் ரிசீவரைத் தூக்கினாள் லதா. மறுபுறத்தில் அவனது தாய் தான் திருமணத்துக்கு எதிர்ப்பதாகவும் இத்துடன் மகனின் தொடர்பை நிறுத்துமாறும் கேட்டுக் கொண்டாள்.

இவள் பல தடவை கெஞ்சியும் பலன் கிடைக்கவில்லை. மழை ஓய்ந்தது போன்று கற்பனை கோட்டைகள் சரிந்து விழுந்தன. ஆனால் அவனோ இதன் பின் சில நாட்கள் தொலைபேசியில் கதைத்தான். ஒரு தடவை இவளைச் சந்தித்த நிஷான் திருமணத்திற்கு உறவினர் எதிர்ப்பதாகக் கூறி நினைவற்று நின்றான். அவனைக் கண்டதும் கண்ணீர் வடித்தாள். தனது தாங்க முடியாத வேதனையில் தனது சொந்த இருப்பிடத்தை விட்டு அமைதியான சோகத்துடன் இடம் மாறினாள். ஆனால் இன்றும் மனம் மாறவில்லை. அவன் வருவான் என "கண்ணீருடன் காத்திருக்கிறாள்".


## வாளமீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம்

## இன்னிசை விருந்து

**தென்னிந்திய கானா பாடகர், 'சித்திரம் பேசுதடி' திரைப் பாடல் புகழ் திரு.சொ.உலகநாதன் அவர்கள் மீண்டும் கௌரி சங்கருடன் இணைந்து சித்தாரா இசையில் இன்னிசை விருந்து வழங்குகிறார்.**



**காலம் : 07.05.2006 ஞாயிற்றுக்கிழமை**



**இடம் : வீரமைலன் கல்யாண மண்டபம், ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு - 13.**

**நேரம் :** மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 வரை.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**வான்** மழையின் ஒவ்வொரு துளியும் தூய்மையானதாகவும், அவைதம் பருமனுக்குகேற்ப வலிமையைக் கொண்டுள்ளதாகவும் இருப்பது இயல்பானது. ஆனால், அவை சேருமிடத்தைப் பொறுத்து, தமது பெயரையும் வலிமையையும் பெற்றுவிடுகின்றன. உதாரணமாக நீரோடையில் வீழ்கின்ற மழைத்துளி நீரோடையோடு சேர்வதால், முன்பிருந்த பெயர் மாறி நீரோடையாகின்றது. அதற்கான வலுவையும் பெற்று விடுகிறது. இவை நீரோடைகள் ஆற்றை அடையும் பொழுது மேலும் வலுவடைகிறது, கடலை சென்றடையும் பொழுது மாபெரும் ஆற்றலைப் பெற்று விடுகிறது. ஆனால் சிறுகுட்டையில் விழும் மழைத்துளி, துளியாக இருந்து குட்டையாக மாறி விட்டிருக்கிறேன் என்று தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டாலும் குட்டையாகவேயிருந்து வெப்பத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் வற்றி வறண்டு போகுமே தவிர, கடலோடு சேர்ந்து வலிமை பெற முடிவதில்லை.

*"சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரை*
*பேணின் கொள்வேம் என்னும் நோக்கு"*

பெரியவரைப் பேணிக் போற்று எண்ணம் சிறியருடைய உணர்ச்சியில் இல்லை.

## இலக்கிய நயம்

# கனவிலிது கண்டேன்

### தருவது கற்பகன்

அருள்வர்மனிடமிருந்து ஓலையாவது வரும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த செண்பகவல்லிக்கு எதிர்நோக்குகின்ற ஒவ்வொரு கணப்பொழுதும் ஒவ்வொரு வருடங்களாகவே நகர்ந்தன. அருள் வர்மன் தன்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து அவனின் பிரிவு ஆற்றாமை அனலில் விழுந்த மெழுகுபோல் அவளை அணுவணுவாக உருக்கிக் கொண்டிருப்பதை அவள் தளிர்மேனி சருகாகிக் கொண்டிருப்பதிலிருந்து தெளிவாக்கிக் கொண்டிருந்தது. அவளின் உயிர்த் தோழி பூங்கொடி எவ்வளவோ ஆறுதல் சொல்லியும் செண்பகவல்லியின் மனம் அதை ஏற்க மறுத்தது.

வழக்கம் போல் ஆற்றங்கரைக்குச் சென்றிருந்த செண்பகவல்லி, என்றுமில்லாதவாறு கலங்கிப்போயிருந்தாள். ஆற்றங்கரையில் உள்ள பாறையின்மேல் இருந்தபடியே எதையோ பறிகொடுத்தவள் போல் அமர்ந்திருந்த செண்பகவல்லியை "இன்றுனக்கு என்னடி ஆயிற்று? எதைப் பறிகொடுத்துவிட்டு யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்ற பூங்கொடியை ஒரு முறை திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் தலையைத் திருப்பிக் கொண்டாள் செண்பகவல்லி. அவள் எண்ணமெல்லாம் முதன் நாள் இரவு கண்ட கனவு நனவாக இருக்கக்கூடாதா என்ற ஏக்கத்திலேயே மூழ்கிப்போயிருந்தது.

அந்த இன்பமயமான இரவு அவளை களிப்புற வைத்திருந்தாலும் அதனால் ஏற்பட்ட கலக்கமல்லவா மேலோங்கி நிற்கிறது! என்ன இது கனவுகூடத் துன்பத்தைத் தருகிறதே என்ற எண்ணம் அவளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போலிருந்தது.

ஆற்றில் இறங்கிய பூங்கொடி இரு கைகளாலும் நீரை வாரி செண்பகவல்லியின் மேல் இறைத்தாள். ஆற்று நீர் தண்மையுடையதாயினும் அது அவளுக்கு கொதி நீரைக் கொட்டியது போலிருந்தது. அப்படிச் செய்தாவது செண்பகவல்லியை ஆற்றுக்குள் இறங்க வைத்து விடலாமே என்று பூங்கொடி செய்த முயற்சிகள் வீணாகி விடவே "ஏய், உனக்கு என்ன நடந்து விட்டது? நேற்றுவரை நன்றாகத்தானே இருந்தாய்!" என்றவாறு செண்பகவல்லியின் கையைப் பற்றி இழுத்தாள். அப்போது செண்பகவல்லியின் கையில் இருந்த தங்க வளையல்கள் அவள் கட்டை விரலை நெருடியிருக்கவேண்டும். அதனால் ஏற்பட்ட வலியை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லைப் போலும். "ஐயோ! கையை விடேன்" என்றவளின் முகம் ஜில்லென சிவந்து விட்டதைக் கண்ட பூங்கொடி வெடுக்கென கையை உதறிவிட்டு மீண்டும் நீரில் இறங்கினாள். இதைக் கண்ட செண்பகவல்லிக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. அவசரத்தில் ஏதும் தவறிழைத்துவிட்டேனோ என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தபோது அவள் மென்மேலும் கலங்கிப் போனாள்.

நீருக்குள் இறங்கிது பூங்கொடியின் மனதில் எழுந்த கேள்விக் கணைகளிடையே அர்த்தமற்ற பதில்கள் வந்து புகுந்துவிட கேள்விகள் மென்மேலும் எழுந்த வண்ணம் இருந்தன. அவளால் தொடர்ந்து நீராட முடியாத நிலை. கரையேறலாமா என்று நினைத்தவள் படித்துறையைத் திரும்பிப் பார்த்தாள். அப்போதுதான் செண்பகவல்லி படிகளில் இறங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. மீண்டும் அவளைப் பார்க்க மனமில்லாதவள்போல் நீர் அலைகளையே வெறித்துப் பார்த்தவண்ணம் நின்றாள் பூங்கொடி.

"என்னடி அதற்குள் கோபித்துக் கொண்டாயா? என்கை எப்படி வலித்தது தெரியுமா?" என்ற கேள்வியோடு ஆற்றில் இறங்கினாள் செண்பகவல்லி. பூங்கொடி பதில் ஏதும் கூறவில்லை. தொடர்ந்தும் அவள் பொய்க்கோபம் காட்டினான் மேலும் சில நாட்கள் அவளோடு பேசாமல் இருக்கவேண்டி வந்துவிடுமோ என்று எண்ணிய செண்பகவல்லி, தன் இரு கைகளாலும் நீரை வாரி பூங்கொடியின் மீது இறைத்தாள். அதற்குமேலும் பூங்கொடியால் மௌனம் சாதிக்க முடியவில்லை. "இவைகளையெல்லாம் உன் மாப்பிள்ளையோடு வைத்துக் கொள். என்னிடம் வேண்டாம்" என்றவள், பதிலுக்கு செண்பகவல்லியின் மேல் நீரை எற்றினாள். இப்படியே மாறிமாறி நீரை எற்றியே களைத்துப் போன இருவரும் இறுதியில் நீராடி முடித்துவிட்டு



கரையேறும்போது பூங்கொடி கேட்டாள் "என்னடி இருந்தாற்போல் திடீரென்று உறங்காமலேயே கனவு காண ஆரம்பித்து விடுகிறாயா? அல்லது மூளையில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு விட்டதா? அக்கம் பக்கத்தில் இருப்பவர்களையே மறந்து விடுகிறாயே." என்ற பூங்கொடியை வியப்போடு பார்த்தாள் செண்பகவல்லி. "என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்ற பூங்கொடியை "இல்லை உனக்கு உள்ள இரண்டு கண்களைவிட வேறொரு கண்ணும் இருக்கிறதா என்று பார்த்தேன்" என்றாள் செண்பகவல்லி. "ஏனப்படிக் கேட்கிறாய்?" என்று வினவினாள் பூங்கொடி. "நான் கனவுகண்டது உனக்கு எப்படித் தெரிந்தது என்றுதான் கேட்டேன்" என்ற செண்பகவல்லியின் முதுகில் லேசாகத் தட்டினாள் பூங்கொடி. "ஓகோ அப்படியா விடயம் இப்பொழுது தானே புரிகிறது நீ அடிக்கடி மயங்குவதன் அர்த்தம்." பரவாயில்லையே, கனவுலக அனுபவங்கள் எப்படியாம்? "காதல் களியாட்டங்கள் பிரமாதம் என்று சொல்" என்று செண்பகவல்லியைச் சீண்டினாள் பூங் கொடி. "போடி அதெல்லாம் உனக்குக் கூறமுடியாது" என்றவள் முகத்தில் வெட்கம் படருவதைக் கண்ட பூங்கொடி, "ஆகா ஒண்ணும் தெரியாத பாப்பா கண்ணை அடித்தாளாம் என்பது போல்தான்" என்றவள் செண்பகவல்லியைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினாள். இதைப் பார்த்ததும் செயற்கையான ஒரு பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டு, "உடனே உன் அண்ணாவைக் காணவேண்டும்" என்றாள் செண்பகவல்லி. "எதற்காகவோ" நிரந்தரமாகவே அண்ணாவை தூதனாக்கி விடுவாய் போலிருக்கிறதே செண்பகவல்லி! அன்னப் பறவை அல்ல என் அண்ணா. அவனொரு போர் வீரன்'. என்றாள் சற்றுக் கௌரவம் கலந்த தொனியில்.

இதைக் கேட்டதும் செண்பகவல்லி உதட்டைச் சுளித்துக் கொண்டாள். "உன் அண்ணன் பேரைச் சொன்னதும் சும்மாவே அலட்டிக் கொள்கிறாயே, உன் அண்ணனைக் காண வேண்டும் என்றது எனக்குத் தூதுபோவதற்காக அல்ல, உனக்குத் துணை தேடுவதற்காக" என்று செண்பகவல்லி கூறிய தும், "எனக்குத் துணை தேடவா? ஏன் நீ படும் அவஸ்தைகளைப் பார்த்த பிறகுமா? என்னுடம்பு தாங்காதம்மா" என்றவள், இரு கைகளாலும் செண் பகவல்லியை செல்லமாகத் தள்ளிவிட்டு இரண்டு அடிகள் பின்னோக்கி நகர்ந்தாள். "கரும்பு தின்னக் கூலியா?" என்றவள் கடைக் கண்ணால் பூங்கொடியை நோக்கினாள். "அது ஒன்றுதான் குறை" என்ற பூங்கொடி "பேச்சை மாற்றாமல் கனவைப் பற்றிக் கூறு" என்றாள் விடாப்பிடியாய். விடமாட்டாய் போலிருக்கிறதே! "ருசிக்கத்தான் முடியவில்லை என்றாலும் ருசிப்பவரை ரசிக்கவாவது தெரிகிறதே" என்று தொடங்கினாள் செண்பகவல்லி.

நிலா முற்றத்தில் அவர் வருவார் என்று காத்திருந்து காத்திருந்து சலித்துப் போய்விட்டது. கண்ணுக்குத் தெரிந்த தூரம் வரை உற்று நோக்கியே என் கண்களும் மரத்து விட்டன. கடற்கரை ஓரத்தில் தென்படுகின்ற ஆலயத்தின் கோபுரம் - அதன் உச்சியில் நிறுத்தப்பட்டிருக்கும் கலசங்களின் தங்கமயமான ஒளி கண்களைக் கூசவைத்துக் கொண்டிருந்தது. அந்தி சாயும் வேளையானதால் கலசங்கள் மட்டுமென்ன தென்னங் கீற்றுகள் கூடத்தான் பொன்மயமாக இருந்தன. கடற்கரை ஓரத்தில் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் காதல் ஜோடிகளின் சல்லாபங்கள் ஒருபுறம், காற்று வாங்கும் நோக்கத்தோடு காலத்தைக் கழிப்பவர்கள் ஒரு புறம் இவைகள் எல்லாம் கண்ணுக்கு இதமாக இருந்ததேயல்லாமல் எனக்குள் உள்ளூர வெந்துகொண்டிருந்ததோர் உணர்வின் உந்தல் அமைதியை வேண்டி நின்றது. ஆலயத்தின் மணியோசை காதில் ஒலித்தபோது என் கால்கள் மாடிப்படிகளைக் கடந்து மணி ஒலித்த திசையை நோக்கி நடக்கத் தொடங்கின. ஆராதனை முடிந்ததும் அண்மையிலிருந்த கடற்கரையில் தாமை மரத்தடியில் அமர்ந்து கொண்டு அலைகளின் நர்த்தனங்களையும் அந்திவானில் ஆதவனின் பொற்கதிர் பட்டு தெறிக்கும் வெண் முகில் படிவங்களையும் பார்த்தபோது இவைகளையெல்லாம் கண்டு ரசிக்க அவரில்லாமல் நான் மட்டும் தனிமரமாக அமர்ந்திருந்த போதுதானடி அந்த அதிசயம் நடந்தது" என்று செண்பகவல்லி கூறியபோது, பூங்கொடியின் விழிகள் அகன்று விரிந்து அவள் மனதில் உள்ள ஆர்வத்தைக் காட்டி நிற்க, புருவங்களோ ஓர்முறை மேல்நோக்கி, எழுந்து இறங்கிய பொழுது வினாக்குறியைக் காட்டி "என்ன" வென்ற அர்த்தத்தைக் கிளப்பியது.

"குதிரையின் குளம்பொலி மெது மெதுவாக என்னை நெருங்குவதை செவிகள் எனக்கு உணர்த்திய போது திரும்பிப் பார்த்தேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையடி.......... செண்பகவல்லி! என்று அழைத்தவர் வேறு யாருமல்ல, என் இதயக் கோயிலில் வைத்து ஒவ்வொரு கணப் பொழுதும் பூஜித்து வரும் அந்த தெய்வீக நாயகன் தான். புரவியை விட்டிறங்கி வந்து என் கைகளைப் பற்றும்வரை நான் சுய நினைவோடு இருந்தேனா என்பதுகூட ஐயமாகத்தான் இருக்கிறது. கைத்தலம் பற்றி கணப்பொழுதுகூடச் சென்றிருக் காது. அவர் மார்பில் சாய்ந்து விட்டேன். அதன் பிறகு நடந்தவைகள் எல்லாம் அப்பப்பா!. "வேண்டாம் இப்போதே மயக்கம் போட்டு விடாதே. நாளையும் பொழுது போக்க ஏதாவது வேண்டும்" என்றாள் பூங்கொடி. "போடி இதெல்லாம் உனக்கு எங்கே புரியப்போகிறது" என்று சலித்துக் கொண்டாள் செண்பகவல்லி.

*"கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்*
*குயலுண்மை சாற்றுவேன் மன்"*
*(அதிகாரம் : 122. - குறள் : 1213.)*

## சிந்தியா பதில்கள்

**✉ மே தினம் தலைநகரில் களைகட்டவில்லையே, பாதுகாப்புக் குறித்து சந்தேகம் அரசுக்கு வந்து விட்டது என்று நினைக்கிறேன். சரிதானா?**
-க.மோகனா, கல்கிசை.

அதிலென்ன சந்தேகம் உங்களுக்கு? இம்முறை இலங்கை மக்கள் கொண்டாடியது பாசிச மே தினம். போதுமா....?

**✉ கடல் வழியால் தமது தளபதிகள் வன்னிக்கு வந்துவிட்டதாகப் புலிகள் கூறியிருக்கிறார்களே, பிறகு ஏன் கடல் பிளேன் பற்றிப் பேசிக் காலம் கடத்த வேண்டும்**
-மீராமுகைதீன்,
செம்மண்ணோடை.

காட்டுப் பாதையால் வழமையான போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. கடல் - விமானம் என்பதெல்லாம் வெறும் இழுத்தடிப்பு விவகாரங்கள் தான். முன்னர் நடந்தது பேச்சுக்கான பேச்சு; இப்போது நடப்பது சும்மா ஒரு பேச்சுக்காகப் பேச்சு - அவ்வளவுதான்.

**✉ திருகோணமலையில் கிளைமோர் தாக்குதலில் நான்கு தமிழர்கள் பலியானார்கள். சிலர் படுகாயமடைந்தார்கள். இதைப் பற்றி த.தே.கூட்டமைப்போ, புலிகளோ ஒன்றும் வாய் திறக்கவில்லையே ஏன்?**
-தம்பித்துரை சிவரூபன்,
உவர்மலை.

மக்கள் கண்டிக்கவில்லையே என்று கேட்டிருந்தால் பதிலளித்திருப்பேன் - செய்தவர்களே கண்டிக்கவில்லையே என்ற உங்கள் அறியாமைக்கு எப்படி பதிலளிப்பது?

**✉ பொங்கி எழும் மக்கள் படை மற்றும் எல்லாளன் படை இவை யாருடைய ஒட்டுக்குழு அல்லது துணைப் படை மழுப்பாமல் பதில் கூறவும்.**
-சி.கஜேந்திரன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

நீங்கள் தெரிந்துகொண்டே கேட்பதால் புலிகளுக்குத்தான் என்று நான் சொல்லமாட்டேன் ஹீ....... ஹீ.........

**✉ அம்மாவா, ஐயாவா தமிழகத்தின் அடுத்த முதல்வர்**
-து.பாஸ்கரன், அவிஸாவெல்ல.

முன்னுரிமை வரிசையில் நீங்களே கேள்வி கேட்டுவிட்டு என்ன பதிலை எதிர்பார்க்கிறீர்கள்.

**✉ அண்ட வெளியிலிருந்து பார்க்கும்போது செவ்வாய்க் கிரகம் செங்கல் நிறமாகத் தெரிவதுபோல் சூரியன் எப்படித் தெரியும்?**
-சி.பிரியதர்ஷினி,
வெள்ளவத்தை.

சிகப்பு வட்டமாகத் தெரியும்.

**✉ அவுஸ்திரேலியா - பங்களா தேஷ் தொடர் எப்படி இருந்தது?**
-ஏ.எம்.மஹ்றூப், நிந்தவூர்.

உப்புச்சப்பில்லாத கிரிக்கெட் விருந்து.

**✉ இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய நிலை என்ன?**
-ரா.சிவகுமார், கண்டி.

இங்கிலாந்து உள்ளூர் அணிகளுடனான போட்டிகளில் காட்டிய திறமைகளை சர்வதேச போட்டிகளிலும் காட்டினால் பிரகாசிப்பார்கள்.

**✉ அஸின், திரிஷா, ஜோதிகா - தற்போது யார் டொப்?**
-கவின்விழி, உவர்மலை.

பாவனாவும் சேர்ந்துகொண்ட பின்பு கருத்துக் கணிப்பினை ஆரம்பிப்போம்.

**✉ அரசியல் கட்சிகளுக்கும் ஊடக நிறுவனங்களுக்குமிடையில் ஒற்றுமை உண்டா?**
-தாரிக் தாசத், மாளிகாவத்தை.

இரண்டிலும் பெயர், புகழ் கிடைத்து பிரபலமாகலாம். மற்றையது அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் இடம் மாறலாம்.

**✉ ஒரு ஜோக் பிளீஸ்?**
-எஸ்.டிலீகா, வல்லைநகர்.

*ஒருவன்:-* புலிகள் இறுதித் தீர்வு பற்றிப் பேச ஆயத்தமாம்.
*மற்றவன்:-* த.தே.கூட்டமைப்பினர் தான் மத்தியஸ்தமாமே.

**✉ சிந்தியா! தாய்ப்பாசம் இல்லாத உயிரினங்கள் உலகில் உண்டா?**
-அ.தாமரை, சித்தங்கேணி.

ஆறறிவை விட ஐந்தறிவு ஜீவன்களுக்கு அதிகமாகவே தாய்ப்பாசம் உண்டு. அவை காப்பப்பையுடன் தம் பிள்ளைகளைக் கொல்லச் சம்மதிப்பதில்லை.

**✉ பாடசாலைகளில் பாலியல் கல்வி அவசியமா?**
-கி.கலிஸ்ரன், பேசாலை.



பாவனா

அவசியம். அடுத்த வருடம் முதல் இலங்கையிலும் அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவாம்.

**✉ கையில் தினசரிப் பத்திரிகை கிடைத்தவுடன் முதலில் எதைப் படிப்பீர்கள்?**
-ரா.பிரசன்னா, ராஜகிரிய.

ஆசிரியர் தலையங்கத்தை.

**✉ தற்போது கொழும்பில் விற்கப்படும் யாழ்ப்பாண கறுத்த கொழும்பான் மாம்பழம் உண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் வருகின்றதா?**
-எஸ்.தேனுகா, பம்பலப்பிட்டி.

அது வரி உள்ளதா, இல்லையா என்பதை முதலில் அறியுங்கள்.

**✉ இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமினால் எப்படி எந்த சர்ச்சைக் குள்ளும் சிக்காமல் இருக்க முடிகிறது?**
-வேலவன், கல்லடி.

ஏனெனில் அவர் கனவுகளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

## அதிக வருமானம் ஈட்டுபவர்களில் முதலிடம் ரொனால்டோவுக்கு

**உலகிலேயே** அதிகமாக சம்பாதிக்கும் உதைபந்தாட்ட வீரர் எனும் பெருமையை பிரேஸில் அணியின் வீரர் ரொனால்டோவுக்கு கிடைத்துள்ளது.



அதிகமான வருமானம் ஈட்ட உலகின் பத்து உதைபந்தாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியலை பிரான்ஸிலிருந்து வெளியாகும் விளையாட்டுப் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

விளையாடுவதால் கிடைக்கும் சம்பளம் ஊக்கத்தொகை, விளம்பரங்களில் நடிப்பதால் வரும் வருமானம் ஆகியவற்றைக் கொண்டே இவர்களின் முழுவருமானம் கணக்கிடப்பட்டுள்ளது.

ரொனால்டினோ கடந்த வருடம் மாத்திரம் 28.47 மில்லியன் அமெரிக்க டொலர்களை (23 பில்லியன் யூரோக்கள்) வருமானமாக பெற்றுள்ளார் நம்மூர் மதிப்பில் அண்ணளவான 28 கோடி வருமானமாகப் பெற்றுள்ளார். தற்போது இவர் பார்சிலோனா உதைபந்தாட்ட கழகத்திற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு விளையாடி வருகிறார்.

இதற்கு முன் தொடர்ந்து மூன்று வருடங்கள் இங்கிலாந்தின் டேவிட் பெக்காமே முதலிடத்தைப் பிடித்து வந்தார் என்பதும் ரொனால்டினோ கடந்த வருடம் சர்வதேச உதைப்பந்தாட்டச் சம்மேளனம் (பீபா) வழங்கிய சிறந்த உதைபந்தாட்ட வீரர் விருதையும் தட்டிக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

தென்னாபிரிக்காவின் லிசல்ஸ் ஹியூபர் உடன் ஜோடி சேர்ந்த பெங்களூர் பகிரங்க டெனிஸ் தொடரில் சாம்பியன் பட்டத்தை வென்ற சானியா அமெலியா தீவில் நடைபெற்ற டென்னிஸ் போட்டித் தொடரிலும் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டம்வரை முன்னேறியிருந்தார்.



புதுடில்லியில் கலை நிகழ்வொன்றில் கலந்து கொண்டு சானியா தனது டென்னிஸ் வாழ்வு குறித்து கருத்து வெளியிட்ட வேளையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சாதிப்பேன்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி வெற்றிகளைக் குவிக்க முடியும் என நம்புகிறேன் என்று இந்திய டென்னிஸ் புயல் சானியா மிர்ஷா கூறியிருக்கிறார்.

உலக மகளிர் தரவரிசைப் பட்டியலில் கடந்த ஆண்டு 37 ஆவது இடத்தைப் பிடித்திருந்த சானியா அண்மைக் காலமாக சறுக்கலை கண்டதனால் 40 ஆவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளார்.

ஒற்றையர் பிரிவில் பெரிதாக சாதிக்காத இவர் இரட்டையர் பிரிவுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது :

டென்னிஸ் தரவரிசையில் முதல் 50 இடங்களுக்குள் வருவதே கடினமான காரியம். ஒவ்வொரு போட்டியிலும் உலகின் தலைசிறந்த வீராங்கனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் இரட்டையர் பிரிவில் சிறப்பான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளேன். லிசல்ஸ் ஹியூப ருடன் சேர்ந்து சில போட்டிகளில் ஒன்றாக விளையாடியமை நம்பிக்கை தந்துள்ளது. நானும் ஹியூபரும் தொடர்ந்து இரட்டையர் பிரிவுகளில் ஜோடி சேர்வோம் என நினைக்கிறேன். எதிர்வரும் கால கட்டத்தில் நடைபெறவுள்ள மூன்று கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் இரட்டையர் பிரிவில் அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. பெடரேஷன் போட்டிகளில் தொடர்ந்தும் பங்கேற்பேன். டோஹாவில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ணப்போட்டியில் விளையாட மிக ஆர்வமாக உள்ளேன் என்றார்.

## பங்களாதேஷ் வீரர் நபீஸுக்கு அபராதம்

**நடுவரின்** தீர்ப்புக்கு திருப்தி தெரிவித்த பங்களாதேஷ் வீரர் சஹ்ரியார் நபீஸுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி பதுல்லாவில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஜான்சன் வீசிய வேகப் பந்தில் 'டக் அவுட்' ஆனார் நபீஸ்.

இதன்போது அவுட் கொடுத்த நடுவரின் தீர்ப்புக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் நபீஸின் செயல்பாடு இருந்ததாக கள நடுவர்கள் இயோன் ஹோவால் நதீர் ஷா ஆகியோர் போட்டி மத்தியஸ்தர் ஜெ.ஃப் குரோவிடம் புகார் அளித்தனர். அவர் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நபீஸ்க்கு ஆட்ட தொகையில் 20 சதவீத அபராதம் விதிக்கப்பட்டது.


இப்போது விற்பனையில் உள்ள

பால நடராஜ ஐயரால் எழுதப்பட்ட வரலாற்று சாசனமான

**மழையைத் தராத வானம்**

பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. உங்களுக்குரிய பிரதிகளை முந்திக் கொண்டு வாங்க உடனடியாக தினமுரசுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொ.பே. - 0114514282,


## மழை போவோம்.......

## 6ஆம் பக்கத் தொடர்ச்சி....

குறிப்பாக பாடசாலை நாட்களில் மழை பெய்தால் ஏற்படும் சந்தோசத்துக்கு அளவேயில்லை. குடையைப் பிடித்துக் கொண்டு போகும்போது நனைய மாட்டோம் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. சில நேரம் மழை கடுமையாக இருக்கும்போது, கூடவே பலமான காற்றும் வீசினால் குடையை தன் இஷ்டத்துக்கு வளைத்துப் போட்டுவிடும். அந்த நேரத்தில் சாதகமான பக்கத்துக்குக் குடையைத் திருப்பிப் பிடிக்காவிட்டால் கம்பிகள் எல்லாம் முதுகுகளை நிமிர்த்திக் கொண்டு குடைக்காரரை மட்டும் தனித்து நனைய விட்டு விடும். அந்த நேரத்தில் மழை கை தட்டிச்சிரிப்பது கேட்கும். அந்தப் பொழுதில் யாரும் பார்த்து விடக்கூடாதென்று கௌரவம் உந்துகின்ற உந்தலில் மழையினுடைய அடர்த்தியையும் துளைத்துக் கொண்டு பார்வை தடவிக் கொள்ளும். தவறியும் யாரும் பார்த்து விட்டால் இது நாள் வரை பாதுகாத்து வந்த கௌரவத்தின் வீரியம் பாதிக்கப்பட்டுவிட்டது போல் தோன்றும். அதேபோல் மழை நீர் வழிந்து போகும்போது வீதியிலிருக்கும் பள்ளங்களில் கால் தடுக்கி விழுத்தியும் விடும். அந்த துரதிர்ஷ்டமான பொழுதுகளில் மழை செல்லமாக சீண்டியும் பார்க்கிறது.

மழை தோட்டங்களில் பயிரிடப்பட்டால் எப்படியிருக்கும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். இப்படி நான் யோசிப்பதற்குக் காரணம் அடிக்கடி மழைப்பழம் விழுவது பற்றி நான் கேள்விப்பட்டதுதான். சாப்பிட்டவர்கள் சொல்கிறார்கள் அது ஐஸ் கட்டிகள்போல் இருக்குமாம். துரதிர்ஷ்டம் நான் இன்னும் சாப்பிடவேயில்லை.

ஐஸ் பழம் சாப்பிட்டிருக்கிறேன். அதற்கு நடுவில் ஒரு குச்சி இருக்கும். குறைந்தபட்சம் மழைப்பழத்துக்கு ஒரு கொட்டையாவது இல்லாமலா போகும். அப்படி இருந்தால் இனி தோட்டங்களில் பயிரிடுவோம். எல்லா மழை நாளிலும் மழைப்பழம் விழுவதில்லை. ஆலங்கட்டி மழை பெய்யும்போதுதான் பழம் விழுமாம். எனக்குத் தெரிந்ததெல்லாம் நாங்கள் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துக் கொள்ளும்படியாக பெய்யும் அடைமழைதான். அதிலும் மழைக் காலம் ஆரம்பமாகும்போது முதல் நாளில் வானம் இருண்டு பலமான காற்று வீசும்போது இரண்டு ரூபா நாணயத்தின் அளவுக்கு பெருந் துளிகள் தட தட என்று ஒரு திசையிலிருந்து இன்னொரு திசை நோக்கி தன் கால்களை நொண்டி ஓடுவதுபோல் போய்க் கொண்டிருக்கும்; அந்த முதல் மழையில் நனையக்கூடாது என்று அம்மா சொல்வார். வருத்தம் வருமாம். இப்படிச் சொல்லிக் கொண்டே அம்மா பின்கோடியில் காயப்போட்ட துணிமணிகளை ஓடி ஓடி எடுப்பார். அப்போது அந்த மழைத்துளிகள் அம்மாவின் மேலில் பலமாகப் படும். மழை அதிகரித்தும் வீட்டின் முதுகில் கீறிக் கொண்டு வரி வரியாய் ஓடுகளின் பள்ளத்தாக்கில் வழிந்து ஒரு கம்பி வேலியைப்போல் வழிவது ஒரு அழகு. அதைப் போல் சில நாட்களில் மழை பெய்து கொண்டிருக்கும்போதே மஞ்சள் வெயிலும் அடிக்கும். அந்த கலப்புக் காட்சி ரம்மியமானது. அந்த வெயிலை கள்ள வெயில் என்று ரசிக்கத்தெரிந்த ஒரு கூட்டம் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். இது போல் மழை நாளில் இன்னொரு அதிசயமும் நடப்பதுண்டு. ஒரே ஊரில் பாதிப்பக்கத்தில் மழை பெய்யும்போது மறுபாதிப்பக்கம் மழையே இல்லாமல் இருக்கும். மழை பற்றி சொல்லவேண்டிய இன்னொரு முக்கியமான கதையுண்டு. மழையின் புகார்கள் ஐதாகில் போகின்ற போது மெல்லிய வெயில் அதை ஊடுருவுமானால் ஏழுவண்ணங்களில் தோன்றும் "வானவில்" பார்ப்பதற்கு குளிர்ச்சியாக இருக்கும். அதன் அழகு பற்றி எனக்குள் பிரமிப்புகள் மிக அலாதியானவை.

அடுத்தபடியாக "இடி." இடிக்கின்றபோது வீட்டில் அர்ச்சுனா... அர்ச்சுனா என்று சொல்லிக் கொண்டிருக்கும் பாட்டியின் கண்டுபிடிப்பும் நம்பிக்கையும் விநோதமானது மழை பெய்யும்போது வானத்தில் அரசர்களுக்கிடையில் சண்டை நடக்கிறதாம். அர்ச்சுனனின் குதிரை போகிற சத்தம் தான் பாட்டியின் நம்பிக்கை. கூடவே எங்களையும் சொல்லச் சொல்லுவார். இடியைப்பற்றி ஒரு மழை நாளில் பேசுவதாக இருந்தால் மின்னலைப் பற்றியும் கட்டாயம் பேசியாக வேண்டும். பளபளக்கும் பிரமாண்டமான ஒரு வாள்கத்தியை வியர்த்துப்போன வானம் பூமியின் முதுகில் அடிக்கடி தீட்டிக் கொண்டதுபோல் இருக்கும். ஆனால் நேரம் சரியில்லாதவன் மின்னல் வெட்டி மின்சாரம் தாக்கி இறந்துவிடுவான். அதனால் மின்னல் கொலைப்பயத்தையும் ஏற்படுத்திவிடுகிறது. மேகங்கள் உரசிக் கொள்கின்றபோது மின்னல் தோன்றுகிறதாக விஞ்ஞானம் சொல்கிறது. ஆனால் ஒவ்வொரு மின்னல் பளிச்சிடும் போதும் இடிக்கப்போகிறது என்று காதுகளை மூடிக்கொள்வதும், அம்மாவின் மடியில் முகம் புதைத்து ஒளிந்து கொள்வதும் குளிர் நாளில் பசுமையானவை. இடி ஒலி, மின்னல் ஒளி முதலில் மேகங்கள் மோதிக் கொள்கின்றன. அதன் உராய்விலேயே மின்னல் பளிச்சிடுகிறது என்று கூறும் விஞ்ஞானம் ஒலியை முந்திக் கொள்கிறது. ஒளி என்று தன் நியாயத்தை வலியுறுத்திக் கொண்டே இருக்கிறது. மின்னலை தூரத்தில் கடல் நீருக்கு மேல் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைத்தால் ரசியுங்கள். அப்போது கண்களை குருடாக்கி விடும் சுத்தமான ஒளி ஒரு மரத்தின் வேர்களைப்போல் தெரியும்.

இன்னொரு விஷயமும் உண்டு. மழை நாளில் வீசும் மண் வாசம் பருவம் ஆரம்பிக்கின்ற போது முதல்மழை பூமியில் பட்டு ஈரப்படுத்துகின்ற போது அந்த மண்வாசம் மேலெழத் தொடங்கும். இது பலருக்குப் பிடிக்கும் - எனக்கும் பிடிக்கும். - மழை மண்ணை நனைத்து விடுகிறபோது தூசு ஈரப்பதத்தோடு காற்றில் கலக்கும். ஆதுவே சுவாசத்தில் மணக்கிறது ஆக புழுதியின் வாசம் நம்மவருக்கு மண்வாசம்.

மண்வாசம், மண்பற்று என்று அலட்டிக் கொள்பவர்களுக்கு புழுதி வாசம் பற்றிப் போதிக்க வேண்டும் என்று எனக்குள் சிரித்துக் கொள்வேன். இப்படி மழையைப் பற்றி அதிசயமிக்க கதைகள் ஆயிரத்துக்குமேல் உண்டு. என் ஆசையெல்லாம் எப்போதாவது மழை பெய்யும் இந்த தேசத்தைக் கடந்து எப்போதும் மழை பெய்து கொண்டிருக்கும் ஒரு தேசத்தில் சில நாட்களாவது தங்கியிருந்து மழை ஆடும் நர்த்த நாட்டியத்தை அனுபவிக்க வேண்டும் என்பதுதான். நீங்கள் இனியொரு மழைநாளில் நனையுங்கள் குளிருங்கள்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN

4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 4, கூட்டெண் - 9

4, 13, 22, 31 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால் இவர்கள் ராகு, செய்வாய் ஆதிக்கம் கொண்டவர்கள்.

இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும், சிலர் குள்ளமாகவும், மிடுக்கான தோற்றமுடனும், சிவந்த கண்களுடனும், தைரியமான பேச்சும், தன்னம்பிக்கையும் கொண்டு காட்சியளிப்பர். நண்பர்களுக்கு நல்ல நண்பராகவும், எதிரிகளுக்கு பலமான எதிரியாகவும் இருப்பர். அதிக பணம் சேர்க்க முடியாவிட்டாலும், அதிக ஆள் பலம், செல்வாக்கு உள்ளவர்களாக இருப்பர். தடித்த குரல் கொண்டு பேசும் இவர்கள் பேச்சாலே சில காரியங்களை தானும் சாதித்துக் கொள்வதோடு தன்னைச் சார்ந்தவர்களுக்கும் உதவுவர்.

இவர்கள் கடுமையான சொல்லால் திட்டிப் பேசுவதில் கைதேர்ந்தவர்கள்.மரியாதை கொடுக்க வேண்டிய இடத்தில் மரியாதை கொடுப்பது போல் நடித்தும், மிரட்டிப் பேச வேண்டிய இடத்தில் மிரட்டிப் பேசியும் காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். காம இச்சை கொண்ட இவர்கள் இதில் மிதமாக நடந்து கொண்டு வாழ பழகிக் கொள்வது நல்லது.

ஆரம்ப வாழ்க்கையிலேயே பெயர் நன்றாக அமையுமேயானால் எல்லா செல்வங்களையும் இளமையிலேயே பெற்று வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் சிரமப்பட்டுப் போராடி வாழ்க்கையில் முன்னேறி திரும்ப இழக்க நேரும். இதனால் பெயரைத் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் மிக மேன்மை அடையலாம்.

நான்கு எண்ணிக்கையில் இவர்கள்தான் முரட்டுக்குணம் கொண்டவர்கள். பெயர் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் விட்டுக்கொடுத்துப் போக பழகிக் கொள்வர். நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்பதுதான் இவர்கள் எண்ணமே தவிர லாப நஷ்டம் என்பது இல்லை. பந்தயம், வாகனம் ஓட்டுதல், சூது, மது, மங்கை எல்லா விசயங்களையெல்லாம் ஓரளவாவது தெரிந்து வைத்து இருப்பர். யாரிடமும் ஏமாறாத இவர்கள் எவரையும் ஏமாற்றும் எண்ணம் இல்லாதவர்கள். தன் மனம் போன போக்கில் போகும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையுமேயானால் நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம், நல்ல பழக்கம், நற்கொள்கை, பெரிய பதவி, வாகனம், தொழில், வீடு போன்ற எல்லா வளங்களும் பெற்றுச் சிறப்பாக வாழ்வர்.

ஆண்டி முதல் அரசன் வரை பழகும் தன்மை உடையவர்களாதலால் இவர்களுக்குத் தெரியாத செய்தியே கிடையாது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் போட்டிகள் உண்டு. ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் எளிதில் உயர்ந்த நிலையை அடைவர். பெயர் பொருத்தமற்ற நிலையில் இருந்தால் சிலருக்கு இரண்டுதார அமைப்பு ஏற்பட்டு விடுகிறது. நூல் அறிவைவிட நுண்ணறிவால் எதையும் சாதிக்கலாம் என்ற கொள்கை கொண்டவர். நயத்தும், எதிர்த்துக் காரியம் சாதிக்கக் கூடிய இவர்கள் படிப்படியாக வாழ்க்கையின் உச்ச நிலையை அடைவர்.

அதிக உணர்ச்சிவயப்படக் கூடியவர்களாதலால் நரம்பு சக்தி வயது ஆக ஆக குறைந்து வரும். இதனால் இளமையான வாசகர்கள் கெட்ட பழக்கங்களைப் பழகாது இருப்பதும் தனது பெயரைப் பொருத்தமான எண்களில் அமைத்துக் கொள்வதும் அவசியம். பலருக்கு ஆலோசனை சொல்லும் இவர்கள் தனக்கு யோசனை கேட்கப் பிறரிடம் செல்ல மனம கூசுவர்.

பலர் இவர்களைப் புகழ்ந்து பேசிக் காரியம் சாதிக்கப் பார்ப்பர். ஆனால் புகழ்ச்சிக்குக் கொஞ்சம் அடிமை என்றால் மிகையாகாது. உடல் பலத்தைவிட வாய்ப்பலம் மிகுந்தவர்கள். சொல் கடுமையாக இருந்தாலும் நண்பர்களுக்கு இனிமையானவர்கள். சோதிடம், சட்டம், சமயம், கலை சம்பந்தமானவற்றில் ஆராய்ச்சி செய்வர். பிறரை வேலை வாங்குவதில் மன்னர்கள்; இவர்களில் பலர் அரசியல் வாதியாகவும், உத்தியோகஸ்த்தர்களாகவும் இருப்பர். அப்படி இல்லாவிட்டால் மேற்குறிப்பிட்டவர்களின் கையாளாக இருப்பர். சில நேரங்களில் தனது தலைவருக்கே கட்டளையிடுவர். தலைவர் அசந்தால் இவர்கள் தலைவராகும் சூழ்நிலையை உருவாக்கப் பார்ப்பர். பெயரும் பொருத்தமான எண்களில் அமைந்துவிட்டால் மிக மேன்மையடைவர்.

***தொழில்:***

ராகு, செவ்வாய் ஆதிக்கமான இவர்களுக்கு கமிஷன், காண்டராக்ட், பூமி, வாகனம், இரும்பு, பிறருக்கு காரியம் சாதித்து கைக்கூலி பெறுதல் போன்றவற்றால் பணம் சேர்ப்பர்.

***நோய்:***

நரம்பு சம்பந்தமான, உஷ்ண சம்பந்தமான அனைத்து வியாதிகளும் வந்து நீங்கும். இரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி, முதுகுவலி, முட்டுவலி போன்றவைகள் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை:***

ராகு, செவ்வாய் ஆதிக்கமான இவர்களுக்கு சூரியன், சுக்கிரன், புதன் ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 60 69; 19, 37, 46; 14, 23, 32, 41, 59 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

பின்பற்ற வேண்டியவை:

யோகமான எண் - 6, 5, 1.

யோகமான திகதிகள் - 6, 15, 24; 1, 10, 19, 28; 5, 14, 23.

யோகமான மோதிரக்கல் - கோமேதகம், வெளிர் நீலக்கல். (ஆறு நூல் உள்ள கல் மிகச் சிறப்பு)

யோகமான நிறம் - மஞ்சள், சிவப்பு, நீலம்.

ஆகாத நிறம் - கறுப்பு, காப்பிக்கலர்.

ஆகாத திகதிகள் - 8, 17, 26; 2, 11, 20, 29; 7, 16, 25.

*அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 1 பற்றிப் பார்ப்போம்*

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

**சென்றவாரத் தொடர்ச்சி**

**சேக்ஸ்பியர்** தமது 48 வயதில் (1612) எழுதுவதிலிருந்து திடீரென ஓய்வு பெற்றார். ஸ்டிராட்.:.போர்ட் திரும்பி வந்து மனைவி மக்களுடன் வாழலானார். அவர் அங்கு 1616 ஏப்ரல் மாதம் இறந்தார். அவர் தேவாலய முற்றத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார். இவருடையதெனக் கருதப்படும் கல்லறையின் மேலுள்ள கல்லில் இவருடைய பெயர் பொறிக்கப்பட வில்லை. ஆயினும், சிறிது காலத்திற்குப் பிறகு, அருகிலிருந்த சுவரில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது; தாம் இறப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு, அவர் ஒரு விருப்புறுதி ஆவணம் (Will) எழுதினார். அதில் அவர் தமது சொத்துக்களைத் தம் மூத்த மகள் சூசன்னாவுக்கு (Susanna) உடைமையாக்கியிருந்தார். சூசன்னாவும், அவளது சந்ததியினரும், அவர்களில் கடைக் குட்டி, 1670இல் இறக்கும் வரையில், புதிய மாளிகையிலேயே தொடர்ந்து வாழ்ந்து வந்தனர்.

மேற்சொன்ன வாழ்க்கை வரலாற்றில் பெரும் பகுதி பழைய மரபாளர்களின் கற்பனை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். எடுத்துக்காட்டாக, ஸ்டராட்.:.போர்ட் இலக்கணப் பள்ளியில் எப்போதேனும் ஷேக்ஸ்பியர் ஒரு மாணவனாக இருந்ததற்கு உண்மையான சான்று எதுவுமில்லை. இந்தப் புகழ்பெற்ற நாடகாசிரியரின் வகுப்புத் தோழனாகவோ ஆசிரியராகவோ தாம் இருந்ததாக எந்த ஒரு மாணவனும் அல்லது ஆசிரியரும் கூறிக் கொண்டதில்லை. அதேபோன்று, அவர் எந்தச் சமயத்திலும், ஒரு நடிகராக இருந்ததற்கான தெளிவான சான்றுகளும் ஏதுமில்லை.



# உலகை வியக்க வைத்தவர்கள்

இருப்பினும் இந்த அதிகாரப் பூர்வமான வரலாறு முதல் நோக்கில் உண்மையாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆயினும், இதனை அணுகி ஆராயும்போது பல இடர்ப்பாடுகள் எழுகின்றன.

முதலாவது சிக்கல், ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை பற்றி அற்ப அளவு தகவல்கள் மட்டுமே கிடைத்துள்ளதாகும். அவரைப் போன்ற பெரும் புகழ்பெற்ற ஒரு மனிதரைப் பற்றி நாம் எதிர்பார்ப்பதைவிட மிகமிகக் குறைவான செய்திகளே கிடைத்துள்ளன. இந்த விந்தையான செய்திப் பற்றாக்குறைக்குக் காரணங்கூறும் சிலர், “இவர் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்; எனவே, அவர் எழுதிய மற்றும் அவர் பற்றிய ஆவணங்களில் பெரும்பாலானவை அழிந்து போயிருக்கலாம்” என்கின்றனர். ஆனால், இந்தக் கூற்று ஷேக்ஸ்பியர் வாழ்ந்த காலத்தைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள ஏராளமான தகவல்களைக் குறைத்து மதிப்பிடுகிறது என்றே கூற வேண்டும்.

அவர் ஒரு பின்தங்கிய நாட்டிலோ, ஒரு காட்டு மிராண்டிக் காலத்திலோ வாழ்ந்திருக்கவில்லை. அவர் வாழ்ந்தது இங்கிலாந்தில். அதுவும் எலிசபெத் அரசியின் ஆட்சிக் காலத்தில். அது, அச்சகங்கள் இருந்த காலம். எழுது பொருட்கள் மிகப் பெருமளவில் கிடைத்து வந்த காலம். ஏராளமானோர் எழுதப் படிக்கத் தெரிந்திருந்த காலம். அந்தக் காலத்தைச் சேர்ந்த கோடிக்கணக்கான மூல ஆவணங்கள் காலத்தை வென்று இன்றும் வாழ்கின்றனவே!

வில்லியம் ஷேக்ஸ்பியரிடம் கொண்ட பேரார்வம் காரணமாக ஒரு பெரிய அறிஞர்கள் படை, அந்தத் தகவல்களை அலசி ஆராய்வதில் மூன்று தலைமுறைக் காலம் செலவிட்டு, உலகின் மிகப் பெரும் இலக்கிய மேதை பற்றிச் செய்திகளைத் தேடியது. அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பலனாக, அவர் காலத்திய மற்றப் பெருங்கவிஞர்கள் குறித்த இலட்சக் கணக்கான சான்றுகளைக் கண்டுபிடித்தனர். வேறு பல சிறு கவிஞர்கள் பற்றிய செய்திகளையும் கண்டறிந்தனர். ஆனால், ஷேக்ஸ்பியர் பற்றி அவர்கள் கண்டுபிடித்ததெல்லாம் அவர் குறித்த 36 அற்பக் குறிப்புகள் மட்டுமே. இவற்றில் ஒன்றுகூட இவரை ஒரு கவிஞராக அல்லது ஒரு நாடகாசிரியராக குறிப்பிடவில்லை!

சேக்பியரின் வாழ்க்கையைவிட .:.பிரான்சிஸ் பேக்கன், எலிசபெத் அரசி, பென் ஜான்சன், எட்மண்ட் ஸ்பென்சர் ஆகியோரின் வாழ்க்கை குறித்து மிக அதிகமான தகவல்கள் நமக்கு தெரிய வந்துள்ளன. ஜான் லைலி (John L yly) போன்ற ஒரு சிறிய கவிஞரைப் பற்றிக்கூட சேக்ஸ்பியரைவிட அதிகமான செய்திகள் கிடைத்திருக்கின்றன.

இங்கு, வரலாற்றின் முன்னணி அறிவியல் மேதை ஐசக் நியூட்டன் (Isaac Newton) குறித்துக் குறிப்பிட வேண்டும். நியூட்டனும் ஷேக்ஸ்பியரைப்போல், இங்கிலாந்தின் நகரிலிருந்து வந்தவர்தான். இவரைப் பற்றிய பல்லாயிரக் கணக்கான மூல ஆவணங்கள் கிடைத்திருக்கின்றன. உண்மையைக் கூறின், நியூட்டன், ஷேக்ஸ்பியருக்கு 78 ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்தவர். அதே சமயம், ஷேக்ஸ்பியர் பிறந்த அதே ஆண்டில் பிறந்த கலீலியோ (Galileo), சேக்ஸ்பியருக்கு 89 ஆண்டுகளுக்கு முன் (1313)பிறந்த பொக்காக்சியோ (Boccaccio)ஆகியோரைப் பற்றிக்கூட ஷேக்ஸ்பியரைவிட மிகுதியான, விவரமான ஆவணங்கள் கிடைத்துள்ளன.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ,

**உங்களோடை** வடக்கு, கிழக்கு நிலைமை களைப் பற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்ததில மலையகத்தில நடக்கிற அநியாயங்களை நான் கண்டு கொள்ளுறன் இல்லையெண்டு வாசகர் ஒருவர் நீண்ட குற்றச்சாட்டு மனுவொன்றை அனுப்பி வச்சிருக்கிறார்.

அந்த மனுவை பார்த்துப்போட்டு ஆசிரியர் என்னைப் பார்த்த தோரணையை இப்ப நினைச் சாலும் ஒரு குற்ற உணர்வு என்னை ஏதோ செய்யு துங்கோ. நான் ஒண்டும் மலையகத்தின்ர செய்தி களையும் சம்பவங்களையும் அறியாமலில்லை யுங்கோ. அறிஞ்சு கொண்டுதான் இருக்கிறன். என்ன சில நேரங்களில அங்க நடக்கிற விஷயங்களத் தூக்கிச் சாப்பிட்டுப்போட்டு ஏப்பம் விடக்கூடிய பெரிய சமாச்சாரங்கள் வட - கிழக்கில நடந்துபோடுது எண்டதுதான் நான் கன்பியூஸ் ஆகிப் போறதுக் குக் காரணமுங்கோ. ஆகவே மலையகத்தில வாழிற என் மரியாதைக்குரிய மகா ஜனங்களே, அடியேன் அந்தந்த கால கட்டதில நீங்கள் எதிர் பார்க்கிற விதமாகப் பிரச்சினைகளைப் பார்த்தி ருந்தால் அதுக்காக வெரி சொரியுங்கோ. இனி மேல் அடிக்கடி மலையகப் பக்கமும் என்ர பார்வை யைத் திருப்பிக் கொண்டிருப்பேனுங்கோ. அதை உறுதிப்படுத்தத்தானுங்கோ இந்த வாரம் ஆசிரி யர்களே, மாணவிகளைப், பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் முக்கியமான விசயத்தை எடுத்திருக் கேனுங்கோ.

மாதா, பிதா, குரு - தெய்வம் எண்டுவினம். உப்பிடி தெய்வத்துக்கு முன்னாடியே ஒரு மதிப்பு மிகுந்த இடத்தில வச்சு மதிக்கப்படுகிற ‘குரு’ ஒரு அதாவது கற்றுத்தருகின்ர தொழிலைச் செய் யிற எல்லாருமே உப்பிடியான ஈன சாதியில் லையுங்கோ. அங்கயிங்க பொறுக்கித்தனமா வளந்து குறுக்கு வழியா உந்தப் புனிதமான தொழிலுக்கு வந்தவை தானுங்கோ அவையின்ர குணத்தை உப்பிடிக் காட்டினம். அதிலையும் மலையக மாணவிகள் ஊர் உலகம் தெரியாதது கள் கள்ளம் கபடம் அறியாமல் ஏமாற்றுவார்த்தை களை நம்பி ஏமாந்து போகுதுகள். உந்த மாதிரிச் சேட்டைகள் மலையகத்தில மட்டுந்தான் நடக்கு தெண்டு நினைச்சுப் போடாதிங்கோ. நாட்டின்ர எல்லா இடத்திலையும் நடக்குது. ஏன் எண்டால் டீன் ஏஜில இருக்கிற ஒரு யுவதிக்கு இருக்கக்கூடிய அதீத அறியும் ஆவலும், மனிதர்களை எடை போடத் தெரியாத குணமுமே குள்ளநரிகளுக்கு வாய்ப்பாகப் போய் விடுகிறது. வீட்டில பெற்றோர்கள், உடன் பிறப்புகள் அன்பாகவும் - உரிமையோடையும் இருக்கவேணுமுங்கோ. அது மட்டுமல்லாமல் தாங்கள் அப்புடி இருக்கிறமெண்டதை பிள்ளைகளுக்குப் புரிய வைக்கவும் வேணுமுங்கோ. சிலவேளைகளில வீட்டில நிம்மதியில்லாததை உணரும்போது பொறுக்கிகளின் வலையில் பெண் -பிள்ளைகள் சீக்கிரமாகவே விழுந்திடுவினம். அவைக்கு, அவை சந்திக்கிற ஆண் கூடுதல் அன்போடையும், அக்கறையோடையும் தங்களை விரும்புகிறதான நம்பிக்கை வந்து விடுவதும் ஒரு காரணமாகப் போய்விடுகிறது. இதைக் காதல் என்றும் அதிக மான இளம் பராயத்தினர் நம்பி விடுவதுதான் கொடுமையுங்கோ. உது ஒருபக்கமெண்டால், கல்விக்காக பெண்மையை விலை பேசும், அல்லது பெற்றுக்கொள்ளும் ஆசிரியர்களின் அடாவடித் தனங்களால் மாணவிகள் எதிர்கொள்ளும் தொல்லைகள் சொற்பமானதில்லை.

சில மாணவிகள் வெளியில் சொல்வதில்லை. சில மாணவிகள் தெரியப்படுத்திவிடுகிறார்கள். சிலர் தெரியவருகின்றபோது நடந்த தவறுகளை ஏற்றுக் கொள்கிறார்கள். இந்த விபரீதமானது மலை யகத்தில மட்டுமல்லாது குக்கிராமங்களிலும் அதிகமாகவே இடம் பெற்று வருகிறது. அதற்கு இன்னொரு காரணம், அதை பலாத்காரமாகவோ, சட்டத்துக்கு விரோதமானதாகவோ, சமூகக் குற்றமாகவோ இளம் பராயத்தினர் அறியாததே யாகும். காவல்துறையினரின் கண்காணிப்புக்கு அடிக்கடி உட்படாத இடங்கள், கூப்பிடு தொலை வில் மனித நடமாட்டம் இல்லாத இடங்கள் என்பன குற்றவாளிகளுக்கு அதிக துணிச்சலைக் கொடுத்து விடுதுங்கோ.

சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி மாணவிகளினதும் ஏனைய யுவதிகளினதும் வாழ்க் கையை நாசம் செய்யும் ஆசிரியர்களே, அரச அதிகாரிகளே, பொறுப்பு வாய்ந்தவர்களே, நீங்கள் ஒரு சமூகத்தின் வழிகாட்டிகள். நாளைய சந்ததி யின் உதாரண புருஷர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். தனிமனித பலவீனங்களுக்கு ஒரு சமூகத்தின் கௌரவத்தையும், எதிர்காலத்தையும் விலை பேசி விடாதீர்கள். உங்களை அடியொட்டி எங்கள் பிள்ளைகள் நடக்கிறார்கள் என்பதை தயவு செய்து புரிந்துகொள்ளுங்கோ எண்டு நான் வினயமாகக் கேட்டுக் கொள்கிறேனுங்கோ. ஒரு பாட்டிருக்குங்கோ, ‘திருடனாப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது’ எண்டு. அப்புடிப் போலை - தவறு செய்யிறவை தாங்களாத் திருந்தாட்டில் அவையளை திருத்த முடியா துங்கோ. என்னதான் சமூக அமைப்புகள் கத்தி னாலும், சட்டம் தன்ர வேலையைச் செய்தாலும், தவறுகளில் பரிச்சயமானவை அதுக்கான சூட்சுமங்களை நல்லா அக்குவேறா ஆணி வேறாத் தெரிஞ்சு வச்சிருப்பினம் எண்டதாலை அவை தங்கட தவறைத் தொடர்ந்து செய்து கொண்டி ருப்பினமுங்கோ. எனவே பெற்றோர்கள் - நல்ல நண்பர்கள் - தங்கள் பிள்ளைகளுக்கு உதுகளைப் பற்றி எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்த வேணுமுங்கோ.

பொதுவா இளம் பிள்ளையளிட்டை ஒரு கொள்கை இருக்கு. அது என்ன தெரியுமோ. அட் வைஸ் சொல்லுறது லேசு, அதை நடைமுறைப் படுத்திறதுதான் கஷ்டம். ஆகையாலை உந்த அட்வைஸுக்கெல்லாம் நேரத்தை செலவழிக்காமல் நாம நம்மட புத்தியில நடப்பம் எண்டு நடப்பினம். உந்தப் போக்கு வாழ்க்கையை மிகச் சிறிய நேரத்திலதான் வெற்றிபெற வைக்குது. அநேகமான நேரத்தில அதல பாதாளத்தில தள்ளி விட்டிடுது எண்டதை அருமைப் பிள்ளைகள் புரிஞ்சு கொண்டால் எனக்கும் சந்தோசமுங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(04.05.2006 தொடங்கி 10.05.2006 வரை)**

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

மேடம் - சூரியன், புதன். மிதுனம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - வெள்ளி, இராகு.

சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் பலிதம், பணவரவு, காரியானுகூலம், அந்நியர் சகாயம், வெளியிட வாழ்க்கை, தேகசுகக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிரமம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் மாற்றம், செலவு மிகுதி, பணியாளர் பகை, மனக்கலக்கம், குடும்பச் சுமை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் அலைச்சல், மனப்பயம், வெளியார் தொல்லை, தேகசுகக் கஷ்டம், மனக் குறையதிகம், குடும்பக் கஷ்டம், உத்தியோகத் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் மேன்மை, பொருள் வரவு, தூர இடப்பயணம், தேகசுகப் பயம், இனசன மேன்மை, குடும்பக் கவலை, உத்தி யோகச் சிறப்பு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவ சாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் மாற்றம், செல வதிகம், கடன் படல், பெரியோர் உதவி, இன சனப் பகை, மனப்பயம், குடும்பத் தொல்லை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் மாற்றம், பெரியோர் உதவி, பணவரவுத் தடை, கடன் தொல்லை, தேகசுகம் நன்மை, குடும்பக் கவலை, உத்தியோக சிரமம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் பயம், செலவு மிகுதி, கடன்சுமை, உற வினர் உபத்திரம், மனப்பயம், தூர இடப்பயணம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் நன்மை, காரியச்சித்தி, பணவரவு, திடீர் செலவு, வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை, குடும்பப் பொறுப்பு, உத்தி யோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியரபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, புதிய முயற்சி, தூர இடப்பயணம், மனக் கலக் கம், தேகசுகக் குறைவு, குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவ்சாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை, காரியச் சித்தி, பணவரவு, மனக்குறை நீங்கும், வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், கடின உழைப்பு, குடும்ப பாரம், உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, மனமகிழ்ச்சி, காரியானுகூலம், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் அலைச்சல், மனக்கலக்கம், துயர் நீங்கும், பெரியோர் பகை, குடும்பப் பொறுப்பு, கடன் சுமை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/66/NEWS/2006)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்...
செய்திகளாய்...
நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## உற்பத்தி



**ஒவ்வொருவருடைய** உணவு பழக்கவழக்கத்திலும் உருளைக்கிழங்கினுடைய பங்கு தவிர்க்க முடியாததாகியுள்ளது. ஆனால் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற விதம் பற்றி அதைச் சாப்பிடும் 95 வீதமானவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

ஈரவலயப் பிரதேசங்களே உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்த பிரதேசமாகும். அடிக்கட்டு பசளை இடப்பட்ட சாலப்பாத்திகளை அடைத்து முகிழம் எனப்படும் விதைக்கிழங்குகளை (தாய்க்கிழங்கு) நடுகிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையோ நீர் பாய்ச்சலாம். தாமதகால பயிராக உருளைக்கிழங்கு பயிரிடப்படும். உருளைக்கிழங்கு செடிகளை வாடல்நோய், இற்றிமேரியா நோய் போன்றன தாக்குகிறது. வாடல் நோயானது கொசுக்கள் இலைகளை துளைத்து சத்துக்களை உறிஞ்சுகின்றன. இற்றிமேரியா நோயானது தாய்க்கிழங்கை அழுகச் செய்து விடுகிறது.

## தீராத பசி



## நீண்ட பயணம்



உடல் ஊனமுற்றவர்கள் வீட்டில் உட்காரத் தான் சரி என்பது அந்தக் காலம். இங்குள்ளவரோ வீட்டில் சும்மா உட்காராமல் தனது துவிச்சக்கர வண்டியில் அமர்ந்து கொண்டு, 34 நாடுகளைச் சுற்றி வந்து உலக சாதனை படைத்துள்ளார். தனது துவிச்சக்கர வண்டியில் 40.07 கிலோ மீற்றர் வேகத்தில் உலகைச் சுற்றி வந்தவர் என்று கின்னஸ் புத்தகத்தில் தனது பெயரை பதிய வைத்துள்ளார். கனடா நாட்டைச் சேர்ந்த இவர், விபத்து ஒன்றில் தனது இரு காலையும் இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சாதனைக்கு ஊனம் என்பது தடைக் கல்லல்ல.

## அரைச் சதம்

சாதனை செய்வதில் வெளிநாட்டவர்களுக்கு நிகர் யாருமில்லை என்ற காலம் உருவாகிவிட்டது. இங்குள்ள லண்டன் நாட்டைச் சேர்ந்த வீம் கொப் எனப்படும் நபர் ஏற்கனவே 49 சாதனைகளைப் புரிந்துள்ளார். இங்குள்ளது அவரின் 50ஆவது சாதனையாம். வெற்று உடம்புடன் ஒரு மணித்தியாலம் 8 நிமிடங்கள் கழுத்தளவு பனிக்கட்டி கொட்டப்பட்ட கொள்கலன் ஒன்றுக்குள் இருந்து சாதனைப் படைத்துள்ளார். இவரின் இதயத் துடிப்பைப் பரிசோதிப்பதற்காக ஈ.சி.ஜி. கருவிகள் உடம்பில் பொருத்தப்பட்டு இருந்தனவாம்.





**அருகில்** உள்ள மனிதருக்கோ எதைச் சாப்பிட்டாலும் தீராத பசி. அதனால்தான் என்னவோ, இரும்பையும் கூடச் சாப்பிட எண்ணிவிட்டார். அவரின் இந்த எண்ணத்தால் தோன்றியதே இச் சாதனை. மைக்கல் லொக்கியோ எனும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இம் மனிதரைச் செல்லமாக எல்லோரும் எல்லாம் சாப்பிடுபவர் என்று அழைக்கும் அளவிற்கு பிரபல்யமாகி விட்டார். 1959ஆம் ஆண்டு முதல் இவர் இரும்புகளையும், பழைய உடைந்த போத்தல் துண்டுகளையும் தனது உணவாகக் கொண்டுவந்துள்ளார். இன்று வரை அவர் 18 துவிச்சக்கரவண்டிகள், 7 தொலைக்காட்சிப் பெட்டிகள், 2 கட்டில், கணனி என்பவற்றை தின்று தீர்த்துள்ளார். எதேட்சையாகத் தனது 6 வயதில் உடைந்த மின்குமிழ் ஒன்றைச் சாப்பிட நேர்ந்த இவர், அதையே இன்னும் பின்பற்றி வருகிறார். கிட்டத்தட்ட இவர் 9 தொன் இரும்புகளைத் தின்று தீர்த் துள்ளார். வாழைப்பழம், முட்டை என்பன இவருக்கு ஒவ்வாத உணவுகளாகும்.

## சுறா



இங்குள்ளது பெரிய சுறாமீனொன்று. கடந்த மாதம் பருத்தித்துறை கடற் பகுதியில் மீனவர்களால் கண்டுபிடிக்கப் பட்ட இச் சுறாமீன் 20 அடி நீளத்தைக் கொண்டிருந்தனவாம். பாறை ஒன்றில் மோதப்பட்டு கரையொதுக்கப்பட்டிருந்த இம் மீன் இதுவரையில் கரையொதுங்கிய மீன்களில் மிகப் பெரியதென மீனவர்கள் ஆச்சரியம் தெரிவித்தனர். இது நம் நாட்டுச் சாதனை.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமணல கிராபிக்ஸ் அச்சகத்தில் மே. 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.